ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# முமுக்ஷுப்படி

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

வ்யாக்யானம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## திருமந்த்ரப்ரகரணம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான அவதாரிகை

**வ்யாக்யானம்** - ஶ்ரிய:பதியாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதனாய், நித்ய முக்தானுபாவ்யனாய் நிரதிசயானந்த யுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரன், அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை அனுபவித்து நித்ய கைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச் செய்தேயும் அத்தை இழந்து அஸன்னேவ என்கிறபடியே அஸத்கல்பராய்க் கிடக்கிற ஸம்ஸாரிசேதனருடைய இழவை அனுஸந்தித்து, அத்யந்த வ்யாகுலசித்தனாய், இவர்கள் கரண களேபரங்களை இழந்து இறகொடிந்த பக்ஷி போலே கிடக்கிற தசையிலே கரணாதிகளைக் கொடுத்து, அவற்றைக் கொண்டு வ்யபிசரியாதே தன்னை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு உடலாக, அபௌருஷேயமாய் நித்ய நிர்த்தோஷமாய் ஸ்வத:ப்ரமாணமான வேதத்தையும் ததுபப்ரும்கணங்களான ஸ்ம்ருதி இதிகாச புராணாதிகளையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும், அந்த சாஸ்த்ராப்யாஸத்துக்கு அனேக யோக்யதை வேண்டுகையாலே அவ்வழியாலே ஜ்ஞ்ஜானம் பிறந்து சேதனர் உஜ்ஜீவிக்கை அரிதாயிருக்கிறபடியைத் திருவுள்ளம் பற்றி ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் ஸுக்ரகமாக இவர்க்கள் அறியலாம்படி பண்ணவேணுமென்று, ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்ய ப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயத்தையும், ஸ்வயமேவ ஆசார்யனாய் நின்று ப்ரகாசிப்பித்தருளினான்.

**விளக்கம்** – பெரியபிராட்டியின் நாதனும், ஸர்வேஸ்வரனும் ஆகிய ஸ்ரீமந் நாராயணன் நித்ய சூரிகளால் சூழப்பட்டு, ஸ்ரீ வைகுண்டத்தில் எல்லையற்ற ஆனந்தத்துடன் உள்ளான். ஆயினும் சம்ஸாரத்தில் சிக்கிண்டு தவிக்கும் ஜீவன்களைக் கண்டு அவன் வருத்தம் கொள்கிறான். இந்த ஜீவன்கள் நித்ய சூரிகள் போன்று தடையற்ற கைங்கர்யத்துடன் வாழும் அதிகாரம் பெற்றவர்களே ஆவர். ஆயினும் இந்த ஜீவன்கள், தங்கள் அதிகாரத்தை இழந்து அஸத் போன்று இந்த உலகில் அஸந்நேவ – அஸத் போன்றவர்கள் (தைத்திரீய உபனிஷத் 2–6) என்றபடி வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் உடல் உறுப்புக்களையும் இறகுகளையும் இழந்த பறவை போன்று துன்பத்தில் உள்ளனர். இவர்களுக்குத் தன்னை அடையும்படி, அதன் மூலம் தங்களைக் காத்துக் கொள்ளும்படி, ஸர்வேச்வரன் அவர்களுக்கு உடல் உறுப்புகளை அளிக்கிறான். இவர்களைக் காப்பதற்காகவே யாராலும் இயற்றப்படாததும், தோஷம் அற்றதும், அனைத்திற்கும் ப்ரமாணங்களாக உள்ளதும் ஆகிய வேதங்களை அளித்தான். மேலும் ஸ்ம்ருதி, இதிகாசம், புராணங்கள் ஆகியவை மூலம் அந்த வேதங்களுக்கு ஏற்ற பொருளையும் நாம் உணரும்படிச் செய்தான். ஆயினும் அந்த வேத சாஸ்திரங்களைக் கற்று உணர்வதற்குப் பல தகுதிகள் வேண்டியிருந்ததால், சேதனர்களால் அவற்றை முழுவதுமாக உணர்ந்து, அதன் மூலம் மோக்ஷம் பெறுவது இயலவில்லை. இதனை அறிந்த ஸர்வேச்வரன், அனைத்து சாஸ்திரங்களையும் தத்துவங்களையும் இவர்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும், என்று தனது திருவுள்ளத்தில் எண்ணினான். ஆகவே அவனே ஆசார்யனாக அவதரித்து, ஜீவனின் ஸ்வருபம் (இயல்பு), மோக்ஷ வழி (உபயம்) மற்றும் ஜீவனின் புருஷார்த்தம், ஆகியவற்றை உள்ளது உள்ளபடி மூன்று ரஹஸ்யங்களில் அருளிச் செய்தான்.

**வ்யாக்யானம்** - அதில், திருமந்த்ரத்தை ஸ்ரீபதரிகாச்ரமத்திலே ஸ்வாம்சபூதனான நரன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான். த்வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்வமஹிஷியான பிராட்டி விஷயமாக ப்ரகாசிப்பித்தான். சரமச்லோகத்தை திருத்தேர்த்தட்டிலே ஸ்வாஸ்ரீதனான அர்ஜுனன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான். ஆகையாலிறே லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் என்று குருபரம்பராதியிலே ஈச்வரனை அனுஸந்திக்கிறது.

**விளக்கம்** – இவற்றில் திருமந்திரத்தை தனது அம்சமாகவே தோன்றிய நரன் என்பவனுக்கு பத்ரிநாத்தில் அருளிச் செய்தான். த்வய மந்திரத்தை விஷ்ணு லோகத்தில் தனது பட்டமஹிஷியான பெரியபிராட்டிக்கு அருளிச் செய்தான். சரம ச்லோகத்தைத் தன்னை அண்டி நின்ற அர்ஜுனனுக்குத் தேரில் நின்று உபதேசித்தான். இந்தக் காரணத்தினால்தான் குரு பரம்பரையில் முதலில் – லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் – என்று ஸர்வேச்வரனைக் கூறுகிறோம்.

**வ்யாக்யானம்** – இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான் சப்தம் ஸுக்ரகமாயிருந்ததேயாகிலும் அர்த்தம் உபதேசகம்யமாகையாலும், அதறிந்தே எல்லார்க்கும் உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அந்த ரஹஸ்யத்ரயத்திலும் பூர்வாசார்யர்களுடைய உபதேச பரம்பரா ப்ராப்தமான அர்த்த விசேஷங்களை ஸர்வர்க்கும் ஸுக்ரகமாகவும் ஸுவ்யக்தமாகவும் பிள்ளை லோகாசார்யர் தம்முடைய பரமக்ருபையாலே இப்ப்ரபந்தமுகேந அருளிச் செய்கிறார். முன்பே ரகஸ்யத்ரய விஷயமாக மூன்று ப்ரபந்தம் இட்டருளியிருக்கச் செய்தேயும், அதில் யாத்ருச்சிகப்படி அதிஸங்க்ரகமாகையாலும், பரந்தபடி அதிவிஸ்த்ருதமாகையாலும், ஸ்ரீய:பதிப்படி உபயதோஷமுமின்றிக்கேயிருந்தேயாகிலும் ஸம்ஸ்ருத வாக்ய பகுளமாகையாலே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கப் போகாமையாலும், த்ரிவித தோஷமுமில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரபந்தமிட வேணுமென்று திருவுள்ளம் பற்றி எல்லாவற்றுக்கும் பின்பிறே முமுக்ஷுப்படியாகிற இப் ப்ரபந்தம் இட்டருளிற்று. ஆகையிறே, அல்லாத ப்ரபந்தங்கள் கிடக்க, இத்தை எல்லாரும் அதிகரித்துப்போருகிறது. இன்னமும் பூர்வ ப்ரபந்தங்களில் அனுக்தமான அர்த்த விஷேஷங்களும் இப் ப்ரபந்தத்திலே உண்டாகையாலும் இதுவே எல்லார்க்கும் ஆதரணீயமாயிருக்கும்.

**விளக்கம்** – இந்த மூன்று ரஹஸ்யங்களின் சொற்களானவை மிகவும் எளிதாகப் புரியும்படி இருந்தாலும், அந்த ரஹஸ்யங்களின் பொருளை உபதேசம் மூலமே கற்க வேண்டும். இதன் மூலமே அனைவரும் காக்கப்பட இயலும். இதனை மிகவும் கருணை வாய்ந்தவரான பிள்ளை லோகாசார்யார் உணர்ந்தார். ஆசார்ய வழியாகத் தான் கற்ற உபதேசங்களை, அனைவருக்கும் எளிதாக விளங்க வேண்டும் என்ற கருணை மேலிட, அவர் இந்த ப்ரபந்தத்தை அருளிச் செய்தார். இவர் மூன்று ரஹஸ்யங்கள் விஷயமாக மூன்று ப்ரபந்தங்களை முன்பே அருளிச்செய்தார். அவற்றில் யாத்ருச்சிகபடி என்ற ப்ரபந்தம் மிகவும் சுருக்கமானது, பரந்தபடி என்பது மிகவும் பெரியது, இரண்டுக்கும் இடைப்பட்ட ஸ்ரீய:பதிபடி என்பது முழுவதும் ஸம்ஸ்ருதமாக இருந்ததால் பெண்களுக்கும், ஞானம் இல்லாதவர்களுக்கும் ஏற்றதாக இல்லை. ஆக இந்த மூன்று விதமான தோஷங்களும் இல்லாதபடி மேலும் ஒரு ப்ரபந்தத்தை இயற்ற வேண்டும் என்று எண்ணி, இவை அனைத்திற்கும் பின்னர் முமுக்ஷுப்படி என்ற இந்த ப்ரபந்தத்தை அருளிச் செய்தார். இதனால் மற்ற ப்ரபந்தங்களைவிட இதனைப் பலரும் கற்றனர். இதனால் மற்ற ப்ரபந்தங்களை விட இதில், அவற்றில் இல்லாத பல விசேஷங்கள் கூறப்பட்டதால், இது அனைவரையும் கவர்ந்தது.

## 1. முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று

**வ்யாக்யானம் –** முமுக்ஷுவாகிறவன் மோக்ஷத்திலே இச்சையுடையவனானவன். ஏமுச்ல் மோக்ஷணேஎ யிறே தாது. இத்தால், ஸம்ஸார விமோசனத்தில் இச்சை பிறந்தவனுக்கு அன்றபடி. ஆத்மப்ராப்தி காமனுக்கும் முமுக்ஷுத்வமுண்டேயாகிலும், இவ்விடத்தில் அவன் விவக்ஷிதனன்று. அவனுக்கு ரஹஸ்ய த்ரயஜ்ஞ்ஜானாபேக்ஷை இல்லையிறே. ஆகையால், இவர் முமுக்ஷுவெங்கிறது. பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸார நிவ்ருத்தியிலே இச்சை பிறந்தவனை. ஏவம்பூதனானவனுக்கு அறிய வேண்டும் ரஹஸ்யம் மூன்று என்றது – இவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களாகையாலும், அவற்றை இந்த ரஹஸ்த்ரயம் உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலும், ரஹஸ்யத்ரயமுமே அறியவேண்டுவதெங்கை. ஏஸ்வஜ்ஞ்ஜானம் ப்ராபகஜ்ஞ்ஜானம் ப்ராப்யஜ்ஞ்ஜானம் முமுக்ஷுபி: ஜ்ஞானத்ரயமுபாதேயம் ஏததன்யன்ன கிஞ்சனஏ என்னக் கடவதிறே. ரஹஸ்யம் மூன்று என்று இவர் உத்தேசிக்கிறது – திருமந்த்ரமும், த்வயமும், சரமச்லோகமுமாகிற இவற்றை என்னுமிடம், மேலே ஸுஸ்பஷ்டம். இவற்றை ரஹஸ்யங்களெங்கிறது, ஸகல வேதாந்த ஸாரார்த்த ப்ரதிபாதகதயா பரமகுஹ்யங்களாகையாலே. ஆக, இவ்வாக்யத்தால், அதிகாரி நிர்த்தேசமும் தத்ஞாதவ்ய நிர்த்தேசமும் பண்ணியருளினாராய்த்து.

**விளக்கம் –** மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் முமுக்ஷு ஆவான். இதன் மூலம் சம்ஸாரத்தில் இருந்து விடுபடும் விருப்பம் கொண்டவனுக்கு என்றும் பொருள். தனது ஆத்மாவை உணர்வதில் மட்டுமே விருப்பம் உள்ள ஒருவன் முமுக்ஷுவாகும் தகுதி பெற்றவன் என்றாலும், இங்கு அவனைப் பற்றிக் கூறவில்லை. அப்படிப்பட்டவன் இந்த மூன்று ரஹஸ்யங்களை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆக முமுக்ஷு என்று இவர் (பிள்ளை லோகாசார்யர்) கூறுவது, பகவானை அடைய வேண்டும் என்ற ஆசை காரணமாக சம்ஸாரத்தில் இருந்து விடுபடவேண்டும் என்ற ஆவல் கொண்டவன் ஆவான்.

இப்படிப்பட்டவன் மூன்று ரஹஸ்யங்களை அறியவேண்டும். இந்த மூன்று ரஹஸ்யங்களும் ஜீவனின் ஸ்வருபம், உபாயம் மற்றும் புருஷார்த்தம் ஆகியவற்றைத் தெளிவாகக் கூறுவதால் இவை அறியப்பட வேண்டும். ஸ்வஞானம் ப்ராபகஞானம் ப்ராப்யஞானம் முமுக்ஷுபு: – முமுக்ஷுவானவன் தன்னைப் பற்றிய ஞானம், தான் அடைய வேண்டிய இலக்கு, அந்த இலக்கை அடையும் உபாயம் ஆகியவற்றை அறியவேண்டும் என்று கூறப்பட்டது. ரஹஸ்யம் என்று இவர் கூறுவது மூன்று – திருமந்த்ரம், த்வயம், சரமஸ்லோகம் என்பதாகும். இது மேலே விளங்கும். இவை வேதாந்தங்களின் பொருளை உள்ளது உள்ளபடி உரைப்பதாலும், பரம ரஹஸ்யம் என்பதாலும் ரஹஸ்யங்கள் எனப்பட்டன. ஆக இந்த சூத்திரம் மூலம் இந்த ப்ரபந்தத்தின் அதிகாரி (கற்பவன்) யார் என்றும், அவன் எதனை அறிய வேண்டும் என்றும் கூறப்பட்டது.

## 2. அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்

**அவதாரிகை –** இனி, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்யம் ஏது என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார், அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம் என்று.

**விளக்கம்** – இந்த மூன்று ரஹஸ்யங்களில் முதலாவது ரஹஸ்யம் எது என்று கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக்கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம் ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞானத்தைப் பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமெங்கை. அனன்யார்ஹ சேஷத்வம் அனன்ய சரணத்வம் அனன்ய போக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதன ஸ்வரூப யாதாத்ம்ய ப்ரதிபாதனபரமாய், தததனுகுண த்யாஜ்யோபாதேய விபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியா நின்றுள்ள இம்மந்த்ரத்தாலே ஸுசிக்ஷிதனானவனுக்கிறே, மற்றை ரஹஸ்யங்களிரண்டிலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷ ஜநிப்பது. ஆகையாலே ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம் ப்ரதம ரஹஸ்யமென்னக் குறையில்லை. இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரசேஷம் விவரணமானாப்போலே மந்த்ரசேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்குச் சரம ச்லோகம் விவரணமாயிறே இருப்பது. அந்த ந்யாயத்தாலும் இதினுடைய ப்ராதாம்யம் ஸித்தமிறே. ஆக, இவை எல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியாய்த்து – ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம் – என்று இவர் அருளிச்செய்தது. இத்தை மந்த்ரமென்கிறது, – மந்தாராம் த்ராயத இதி மந்த்ர: – என்கிறபடியே சப்த சக்தியாலும் அர்த்த போதநத்தாலும் தன்னை அநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே. சப்தசக்தியாலே ரக்ஷகமாம், ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு. அர்த்த போதநத்தாலே ரக்ஷகமாம் ஈச்வரனே உபாயோபேயமென்றிருக்கும் ப்ரபந்நர்க்கு. அர்த்த போதநத்தாலே ரக்ஷகமாகையாவது, – தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி பதம் ஸாது வித்யாத் த்ருதீயம் ஸ்வாதந்த்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம் இதர சேஷத்வதீச்சேத் த்விதீயம், ஆத்மத்ராணோந்முகச்சேந்நம இதி ச பதம் பாந்தவாபாஸ லோலச் சப்தம் நாராயணாக்க்யம் விஷயசபலதீச்சேத சதுர்த்தீம் ப்ரபந்ந: – என்று பட்டர் அருளிச்செய்தபடியே தன்னை அநுஸந்திப்பார்க்கு தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ரியமும், அந்யசேஷத்வமும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடி பண்ணி ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி நோக்குகை.

**விளக்கம்** –இந்த மூன்று ரஹஸ்யங்களில் – ஆத்மாவின் ஸ்வரூபத்தை விளக்க வல்லதும், எதனை ஏற்பது எதனைத் தள்ளுவது என்ற ஞானம் உண்டாக்குவதும் ஆகிய திருமந்த்ரமே அதிகாரி அறிய வேண்டிய முதல் ரஹஸ்யமாகும். இந்தத் திருமந்த்ரம், ஜீவனின் ஸ்வரூபத்தை உள்ளபடி விளக்குகிறது – எப்படி எனில் ஜீவனின் முக்கிய தன்மைகளான – வேறு யாருக்கும் அடிமை இல்லை (அனன்யார்ஹ சேஷத்வம்), வேறு அடைக்கலம் ஏதும் இல்லை (அனன்ய சரணத்வம்), வேறு யாரையும் மகிழ்விப்பதற்காக இல்லை (அனன்ய போக்யத்வம்) – ஆகியவற்றை விளக்குகிறது. இந்த தன்மைகளுக்கு ஏற்ப, எதனை விலக்குவது எதனை ஏற்பது என்பதையும் திருமந்த்ரம் விளக்குகிறது. இந்த மந்த்ரம் மூலம் ஒருவனுக்கு மற்ற இரண்டு மந்த்ரங்கள் உபதேசிக்கும் உபாயம் (வழி) மற்றும் உபேயம் (இலக்கு) ஆகிய இரண்டின் மீது பற்றுதல் உண்டாகும். ஆகவே, ஸ்வரூபத்தை விளக்கவல்ல திருமந்த்ரத்தை முதல் ரஹஸ்யம் என்று கொள்வதில் குறைவில்லை. திருமந்த்ரமாவது ப்ரணவத்தை (ஓம்) விளக்குகிறது, த்வயமானது திருமந்த்ரத்தை விளக்குகிறது, சரம ச்லோகமானது த்வயத்தை விளக்குகிறது. இந்த வரிசையாலும் திருமந்த்ரமே முதலாவது ஆகும். இது அனைத்தையும் திருவுள்ளத்தில் கொண்டே (பிள்ளை லோகாசார்யர்) – ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம் – என்று அருளிச் செய்தார்.

இதனை மந்த்ரம் என்று ஏன் கூறவேண்டும்? மந்த்ரம் த்ராயத இதி மந்த்ர: – தன்னைத் த்யானிப்பவனை காப்பாற்றுவத்ய் மந்த்ரம் என்று கூறுவர். இதன்படியே மந்த்ரம் ஆனது தனது ஒலியாலும், பொருளாலும் தன்னை உச்சரிப்பவர்களுக்கு ரக்ஷையாக உள்ளது. ஜபம் முதலான பாதைகள் மூலம் மோக்ஷம் அடைய விரும்பும் உபாஸகர்களுக்கு, ஒலியின் மூலம் ரக்ஷை அளிக்கிறது. ஈஸ்வரன் ஒருவனே தனது உபாயம் என்றும் உபேயம் என்றும் உள்ள ப்ரபன்னனுக்கு, தனது பொருள் மூலம் ரக்ஷை அளிக்கிறது. பொருள் மூலம் மந்த்ரம் எப்படி ரக்ஷை அளிக்கிறது? இதனை பராசரபட்டர் அஷ்டஸ்லோகியில் பின்வருமாறு கூறுகிறார்:

தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி பதம்

ஸாது வித்யாத் த்ருதீயம்

ஸ்வாதந்த்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம்

இதரசேஷத்வதீச்சேத் த்விதீயம்

ஆத்மத்ராணோந்முகச்சேந் நம இதி ச பதம்

பாந்தவாபாஸலோல:

சப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீச்சேத்

சதுர்த்தீம் ப்ரபன்ன:

இதன் பொருள் – தனது உடலே ஆத்மா என்று எண்ணினால், மூன்றாவது அக்ஷரத்தை(ஓம் என்பதில் உள்ள ம்) நன்றாக அறிய வேண்டும். நான் என்ற எண்ணம் கொண்டால் முதல் அஷரமான –அ– என்பதை அறிய வேண்டும். தான் வேறு யாருக்காவது அடிமை என்று எண்ணினால் –உ– என்பதை அறிய வேண்டும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால் –நம– என்பதை அறிய வேண்டும். தனது உறவினர்கள் என்று மட்டுமே எண்ணியிருந்தால் –நாராயணா– என்பதை அறிய வேண்டும். உலக விஷயங்களை மட்டுமே எண்ணியிருந்தால் –ஆய– என்பதை அறிய வேண்டும்.

ஆக தன்னை அநுசந்திப்பவர்களை திருமந்த்ரமாவது அவனது உண்மையான இயல்புக்கு ஏற்றபடி மாற்றிவிடும். இதன் மூலம் அவனுக்கு உடலே ஆத்மா(தேஹ–ஆத்மா அபிமானம்), தான் சுதந்திரமானவன்(ஸ்வாதந்த்ரியம்), மற்றவர்களுக்கு அடிமை(அந்ய சேஷத்வம்), தன்னை தானே காக்க எண்ணுதல்(ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம்), உலகவிஷயங்களில் நாட்டம்(விஷய ப்ராவண்யம்) ஆகியவை தோன்றாமல் செய்து விடுகிறது.

## 3. திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுஸந்த்திக்கவேணும்

**அவதாரிகை** – இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் இதினுடைய அநுஸந்தாந க்ரமகதநமுகத்தாலே இதின் வைபவத்தை அருளிச் செய்கிறார், –திருமந்த்ரத்தினுடைய– என்று தொடங்கி.

**விளக்கம்** – இதன் பின்னர் இந்த மந்த்ரத்தின் மேன்மையை விரிவாக விளக்கத் திருவுள்ளம் பற்றினார். இதன் ஒரு படியாக, முதலில் இதனை அநுசந்திப்பதன் மூலம் விளக்கத் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** – திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது, ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவ ஆதர்வணாநிச ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் என்கிறபடியே ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய், மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதந: என்கிறபடியே மந்த்ரங்களில் வைத்துக்கொண்டு பரமமான மந்த்ரமாய், குஹ்யங்களில் வைத்துக்கொண்டு உத்தமமான குஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். (சீர்மைக்குப் போரும்படி) என்றது, தகும்படியென்கை. (ப்ரேமத்தோடே பேணி அநுஸந்த்திகை)யாவது, இத்தை அநுஸந்திக்குமளவில் ஸ்ஷ்கஹ்ருதயனாயிருந்தநுஸந்திக்கையன்றிக்கே. இதின் வைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாக இதின் பக்கல் தனக்குண்டான ப்ரேமத்தோடே, குஹ்யாநாம் குஹ்யமானவிது அசலறியாதபடி, மந்த்ரம் யத்நேந கோபயேத் என்கிறபடியே பேணிக்கொண்டநுஸந்திக்கை. இப்படி அநுஸந்திக்கவேணுமென்கையாலே ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது.

**விளக்கம்** – திருமந்த்ரத்தின் மேன்மைகள் பின்வருமாறு கூறப்படலாம்:

- வ்ருத்த ஹாரித ஸ்ம்ருதி(6–48) – ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவ ஆதர்வணாநிச ஸர்வம் அஷ்டாக்ஷரம் – திருமந்த்ரம் என்ற அஷ்டாக்ஷரம் ருக், யஜூர், ஸாமம் மற்றும் அதர்வணம் ஆகியவற்றை உள்ளடக்கியது
- பெரிய திருமொழி(8–10–3) – மற்ற எல்லாம் பேசிலும் – மற்ற எதனைப் பற்றியும் பேசாமல் விடுத்து உனது எட்டு எழுத்தை அறிந்து கொண்டேன்
- நாரதீய கல்பம் – மந்த்ராநாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ் சனதந: – மூல மந்த்ரமானது மந்த்ரங்கள் அனைத்திலும் உயர்ந்தது. ரஹஸ்யங்கள் அனைத்திலும் ரஹஸ்யமானது. தூய்மையான அனைத்திலும் தூய்மையானது

இந்த வரிகளின் மூலம் மற்ற மந்த்ரங்களைக் காணும் போது இது உயர்ந்ததாகவும், அனைத்தையும் விட ரஹஸ்யமானதும் ஆக உள்ளது. சீர்மைக்கு போரும் என்று கூறுவது இதன் பொருமையை அறிந்து ஆகும். ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்கை என்பது வெறும் இதயத்துடன் இதனை அநுசந்திக்காமல், அந்த மந்த்ரத்தின் மீது முழு ப்ரேமையுடன் அநுசந்திக்கவேண்டும் என்பதாகும். தகுதி அற்றவர்களால் இது அறியக் கூடாத ரஹஸ்யமாக உள்ளதால், இதனை ஒருவன் மிகவும் மதித்து அநுபவிக்க வேண்டும். இந்த மந்த்ரத்தை(சேஷஸம்ஹிதை) – மந்த்ரம் யத்நேந கோப்யேத் – மந்த்ரத்தை ஒருவன் காப்பாற்ற வேண்டும் என்று கூறப்பட்டது. இந்த முறை தவிர வேறு எந்த முறையிலும் அநுசந்திக்ககூடாது என்ற விதி புலப்படுகிறது.

## 4. மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது.

**அவதாரிகை** – இப்படி, தன்பக்கல் ப்ரேமமுண்டாகவே இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாமோவென்ன அருளிச் செய்கிறார், மந்த்ரத்திலும் என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் தன்னிடம் ப்ரேமை உள்ளவனுக்கு இந்த மந்திரம் வேண்டியதை அளிக்குமா என்ற கேள்விக்கு விடையளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகமான இம் மந்த்ரந்தன்னிலும், சேஷித்வ சரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயயுக்ததயா இம்மந்த்ரத்துக்கு வாச்யவஸ்துவாயிருக்கிற ஸர்வேச்வரன் விஷயத்திலும் – தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் – என்கிறபடியே இம்மந்த்ரம் ஆசார்யாதீநமாயிருப்ப தொன்றாகையாலே இத்தை யதாப்ரதிபத்தியுக்தனாய்க் கொண்டு, தனக்கு உபகரித்த ஆசார்ய விஷயத்திலும் தத்தத்வைலக்ஷண்யாநுரூபகமாக ப்ரேமம் அதிசயேந உண்டானால், இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாவதென்கை. மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதம ஸாதநம் – என்னக் கடவதிறே.

**விளக்கம்**

- இந்த மந்த்ரம் அறிய வேண்டிய உண்மைகளை விளக்குவதால் அதன் மீது அளவு கடந்த அன்பு இருத்தல் வேண்டும்.
- சேஷி (எஜமானன்), சரண்யன் (அடைக்கலமாக உள்ளவன்), ப்ராப்யம் (அடையப்படும் இலக்கு) ஆகிய மூன்றுமாக உள்ள பகவானைப் பற்றி இந்த மந்த்ரம் கூறுவதால் இதன் மீது அன்புடன் இருக்க வேண்டும்.
- தந்மந்த்ரம் ப்ராஹ்மணாம் – அனைத்தும் தெய்வத்திற்குக் கட்டுப்பட்டது, தெய்வம் மந்த்ரத்திற்குக் கட்டுப்பட்டது, மந்த்ரம் ஆசார்யனுக்குக் கட்டுப்பட்டது – என்று கூறப்பட்டதால், இந்த மந்த்ரத்தை எந்த அளவு நேசிக்கிறோமோ, அந்த அளவு அன்பானது இந்த மந்த்ரத்தை உபதேஸித்த ஆசார்யன் விஷயத்திலும் இருக்கவேண்டும்.

இது போன்ற மூன்று விஷயங்களில் ஒருவனுக்கு அன்பு இருக்குமானால், அவனுக்கு இந்த மந்த்ரம் அவன் விரும்பியதை அளிக்கும். விஷ்ணு தத்வம் – மந்த்ரே தத் தேவதாயாஞ்ச

ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷ் பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதம ஸாதநம் – மந்த்ரம், அந்த மந்த்ரத்தால் ஆராதிக்கப்படும் தேவதை, அந்த மந்த்ரத்தை உபதேசம் செய்த ஆசார்யன் ஆகிய மூன்றும் பக்திக்கு முக்கியமான சாதனங்களாக உள்ளதால், இவை மூன்றின் மீதும் ஆழ்ந்த பக்தி வைக்கவேண்டும் – என்று கூறியது காண்க.

**5. ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து, ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோமெனகிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.**

**அவதாரிகை** – இனி, இம்மந்த்ரத்தினுடைய அவதரணப்ரகாரகதந முகத்தாலே இதினுடைய அப்ரதிம வைபவத்தை அருளிச் செய்கிறார் – ஸம்ஸாரிகள் – என்று தொடங்கி,

**விளக்கம்** – இந்த மந்த்ரம், இந்த உலகத்தில் எவ்விதம் தோன்றியது என்று கூறுவதன் மூலம், இந்த மந்த்ரத்தின் உயர்ந்த வைபவத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ஸம்ஸாரிகளாகிறார் அநாத்யசித்ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநாருசிவிவசராய் ஜந்மமரணாதி க்லேசபாகிகளாய்த் திரிகிற பத்தசேதனர். (தங்களையும் ஈச்வரனையும் மறந்து) என்றது – தாஸாபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச – என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான பகவத் சேஷத்வத்தை லக்ஷணமாக உடையராயிருக்கிற தங்களையும் பதிம்விச்வஸ்ய, ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்திதம் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தங்களுக்கு நிருபாதிக சேஷியாயிருக்கிற ஈச்வரனையும் அறியாதேயென்கை.

**விளக்கம்** – ஸம்ஸாரிகள் என்றால் எல்லையற்ற காலமாக அசித் பொருள்களுடன் கொண்ட தொடர்பால் அறியாமை, கர்மவாசனை, ஆசை ஆகியவை ஏற்பட்டு, இதனால் பிறப்பு–இறப்பு என்ற சுழற்சியில் சிக்குண்டவர்கள் ஆவர். (தங்களையும் ஈச்வரனையும் மறந்து) என்றால் – அவர்கள் தங்கள் இயல்பாகவே பகவானுக்கு அடிமை என்பதை அறியாதவர்கள் – என்பதாகும். இதனை ஹாரித ஸ்ம்ருதி – தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச – அனைத்து ஜீவன்களும் தங்கள் இயல்பாகவே பரம்பொருளின் அடிமைகள் ஆவர், இதனைத் தவிர அவர்கள் ஸம்ஸாரத்தில் உள்ளபோதும் மோக்ஷம் அடைந்தபோதும் வேறு இலக்கணம் அவர்களுக்கு இல்லை – என்றது. மஹா நாராயண உபனிஷத் – பதிம் விச்வஸ்ய – நாராயணனே அனைத்தின் நாயகன் என்றும், விஷ்ணுதத்வம் – ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் – அவனுக்கு உடைமையாய் உள்ள தன்மை ஜீவனுக்கும், ஜீவனை உடையவனாய் இருக்கும் தன்மை ப்ரஹ்மத்திற்கும் இயல்பாகவே உள்ளது – என்றும் கூறப்பட்டது. இப்படியாக தங்களின் இயல்பான எஜமானனாக பரம்பொருள் உள்ளான் என்பதை அறியாமல் உள்ளனர்.

**வ்யாக்யானம்** – ஆனால், அறியாமலென்னாதே மறந்தென்பான் என்? முன் ஒருகால் நினைத்துப் பின்பு அந்நினைவுக்கு ப்ரச்யுதி வந்தவிடத்திலிறே மறந்து என்னாலாவது என்னில்: மறந்தேனுன்னை முன்னம் என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான ஸம்பந்தத்தை

உணர்ந்தால் முன்பு நினத்திருந்த அர்த்தத்தை மறந்தாற்போலே இருக்கும் ஸம்பந்தத்தில் உறைப்பை நினைத்து அருளிச் செய்தாராமித்தனை.

**விளக்கம்** – ஆனால், ஸம்ஸாரிகள் இதனை அறியவில்லை என்று கூறுவதற்குப் பதிலாக, மறந்து விட்டனர் என்று கூறுவது ஏன்? மறப்பது என்றால் ஒரு விஷயத்தைப் பற்றி முன்பு அறிந்ததை, சிறிது காலம் கழித்து அதனைப் பற்றிய ஞானம் இல்லாமல் போவது என்று அல்லவா பொருள் – என ஒரு சந்தேகம் எழலாம்? இவ்விதம் கூறுவது ஏன் என்றால் – தனக்கும் எம்பெருமானுக்கும் உள்ள உறவு இயல்பானதாக உள்ளதால், அதனை இப்போது ஒருவன் உணர்ந்தால் முன்னர் அறிந்து மறந்ததை இப்போது நினைவு கூர்ந்தது போன்றது அல்லவோ? இதனை பெரிய திருமொழியில்(6–2–2) – மறந்தேன் உன்னை முன்னம் – என்று ஆழ்வார் கூறினார் அல்லவோ?

**வ்யாக்யானம்** – ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து என்றது. கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே வகுத்த சேஷியான ஈச்வர விஷயத்தில் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் ப்ராபிக்கப் பெறாதேயென்கை. புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தையும், அதுக்கிட்டுப் பிறந்து வைத்துக் கிட்டப் பெறாமல் கிடந்தபடியையும் நினைத்து, இழந்து என்கிறார். இழந்தோமென்கிற இழவுமின்றிகே என்றது ஸ்வஸ்வரூபபரஸ்வரூப ஞானமும் புருஷார்த்த ஞானமும் இல்லாமையாலே. ஸ்வசேஷத்வாநுரூபமான சேஷிவிஷய கைங்கர்யரூப புருஷார்த்தத்தை இழந்தோ மென்கிற அலாப க்லேசந்தானுமின்றிக்கே என்கை.

**விளக்கம்** – (ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து) என்பதன் மூலம் மேலே கூறிய அறியாமையால் நம்முடைய எஜமானனாக உள்ள எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தல் என்ற உயர்ந்த புருஷார்த்தத்தை இழப்பது என்பதாகும். அந்தக் கைங்கர்யத்தைச் செய்வதற்காகவே இந்த மண்ணில் பிறந்தபோதும், அதனை மறந்து எண்ணற்ற காலம் இருந்ததை – இழந்து – என்று கூறினார். (இழந்தோம் என்கிற இழவும் இன்றிக்கே) – என்பதன் மூலம் தன்னுடைய ஸ்வரூபம், எம்பெருமானின் ஸ்வரூபம், அடையப்படவேண்டிய பேறு ஆகியவற்றைப் பற்றிய ஞானம் இல்லாமல் இருப்பதைக் கூறினார். இந்த அறிவு இல்லாததால், தாங்கள் எப்படிப்பட்ட உயர்ந்த இலக்கை இழந்து நிற்கிறோம் என்ற வருத்தம் இல்லாமல் உள்ளனர் என்று கருத்து. தங்கள் மனதில் – நம்முடைய அடிமை ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி நமது எஜமானனாக உள்ள எம்பெருமானுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யம் என்ற செல்வத்தை இழந்து நிற்கிறோம் – என்ற வருத்தம் சிறிதும் இல்லாமல் உள்ளனர்.

**வ்யாக்யானம்** – ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட என்றது ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்தக்லேச பாஜனம் என்கிறபடியே அநந்தக்லேசபாஜனமாய், ஒருவராலும், ஸ்வயத்நத்தால் கரை காண அரிதாம்படியிருக்கிற ஸம்ஸாரமாகிற மஹா ஸமுத்ரத்துக்குள்ளே விழுந்து தாபத்ரயாபிபூதராய்க் கொண்டு க்லேசப்படவென்கை. இத்தால், தங்களையும் ஈச்வரனையும் அறியாமையாலும், புருஷார்த்தத்தை அறியாமையாலும், ஸம்ஸாரஸாகரத்துக்குள்ளே கிடந்து நோவுபடா நிற்க விரோதியான ஸம்ஸாரந்தன்னையும் தந்நிஸ்தரணோபாயத்தையும் அறியாமையாலும், ஜ்ஞாதவ்யமான அர்த்தபஞ்சகத்திலும் ஒன்றையும் அறியாமற் கிடந்தார்களென்கை. ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ

ரூபம் இத்யாதிப்படியே ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ப்ரதிபாதிப்பது அர்த்த பஞ்சகத்தையுமிறே. இவ்வர்த்தங்களை இவர்களுக்கு ஸுக்ரஹமாக அறிவிக்கைக்காக, ஸகல சாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை ஸர்வேச்வரன் வெளியிட்ட ப்ரகாரத்தைச் சொல்லுகிறது மேல்.

**விளக்கம்** – (ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட) அளவற்ற துன்பத்திற்குக் காரணமாகவும், தனது முயற்சியைக் கொண்டு கரை காண இயலாததும் ஆகிய ஸம்ஸாரம் என்ற கடலில் மூழ்கியபடி உள்ளனர். நம்முடைய முயற்சி மூலம் இதன் கரையைக் காணவே இயலாது என்பதை ஜிதந்தே ஸ்தோத்ரம்(1–4) – ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்த க்லேச பாஜனம் – அளவற்ற துன்பங்களும் கொடியதுமாக உள்ள ஸம்ஸாரம் என்ற கடல் – என்று கூறியது. இதனால் தங்களைத் தீண்டும் மூன்று விதமான துன்பங்களால்(ஆத்யாத்மிகம் – நோய்களால் வரும் துன்பம், ஆதிபௌதிகம் – விலங்குகளால் ஏற்படும் துன்பம், ஆதிதைவிகம் – தெய்வத்தால் வரும் மழை இடி போன்ற துன்பம்) பாதிக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் – தங்களையும் அறியவில்லை, ஈச்வரனையும் அறியவில்லை, கைங்கர்ய பேற்றையும் அறியவில்லை, ஸம்ஸாரம் என்ற கடலில் துன்பப்படும் போதும் அந்த ஸம்ஸாரமே தங்களின் கைங்கர்யத்திற்குத் தடையாக உள்ளது என்பதையும் அறியவில்லை, இவற்றிலிருந்து வெளிவரும் உபாயத்தையும் அறியவில்லை. ஆக அர்த்தபஞ்சகம் என்று கூறப்படும் தத்துவங்களை அறியாமல் உள்ளனர். ஹாரித ஸ்ம்ருதி(8–141) – ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் – அடையப்படவேண்டிய பரம்பொருளின் இயல்பு – என்று கூறுவது போன்று, அனைத்து சாஸ்திரங்களும் அர்த்தபஞ்சகத்தையே கூறுகின்றன(அர்த்தபஞ்சகம் = பரம்பொருளின் இயல்பு, ஜீவனின் இயல்பு, பரம்பொருளை அடையும் வழி, பரம்பொருளை அடைந்தபின் கிட்டும் பயன், பரம்பொருளை அடைய ஏற்படும் தடை). இந்த அர்த்தபஞ்சகத்தை நாம் எளிதாக அறியும் பொருட்டு, அனைத்து சாஸ்திரங்களிலும் கூறப்பட்ட கருத்துக்களின் சுருக்கமாக உள்ள திருமந்த்ரத்தை அருளிச் செய்தான்.

**வ்யாக்யானம்** – ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே என்றது – ஈசேசிதவ்யஸம்பந்தாத் அநிதம்ப்ரதமாதபி என்கிறபடியே அநாதியாக ஸர்வரோடுமுண்டான ஈசேசிதவ்ய ஸம்பந்தத்தையுடையனான எம்பெருமான். ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே என்கிறபடியே இவர்கள் படுகிற துக்கதர்சநமாத்ரத்தாலுண்டான தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே என்கை.

**விளக்கம்** – இதனை எப்படி அருளிச் செய்தான் என்பதை அடுத்து கூறுகிறார். (ஸர்வேச்வரன் தன் க்ருபையால்) – ஸர்வேச்வரன் தனது கருணையால் அருளினான். லக்ஷ்மி தந்திரம்(17–7) – ஈசேசிதவ்ய ஸம்பந்தாத் அநிதம் ப்ரதமாதபி – ஈச்வரனுக்கும் ஜீவாத்மாவுக்கும் எல்லையற்ற காலமாக எஜமான–அடிமை உறவு உள்ளது – என்று கூறியபடி, எல்லையற்ற காலம் தனக்கு உடைமையாய் இருக்கும் ஜீவன்களைத் தனக்கு உடையவனாய் உள்ளவன் எம்பெருமான்(ஈசேசிதவ்ய சம்பந்தம்) என்ற பெருமை உள்ளவன் ஆவான். இந்தக் கருணை என்பது எப்படிப்பட்டது என்றால், நமது துன்பத்தைக் கண்டவுடன், எந்தவித காரணமும் இல்லாமல் இயல்பாகவே(நிர்ஹேதுக க்ருபை) வருவதாகும். இதனை அஹிர்புத்ய ஸம்ஹிதை(14–28) – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்ய மாணே ஸ்வகர்மபி: ஜீவே துக்கா குலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே – தனது கர்மம் காரணமாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் சுழன்று துன்பப்படும் ஜீவன் மீது விஷ்ணுவிற்கு வர்ணிக்க இயலாத அளவு கருணை உண்டாகிறது – என்று கூறுகிறது.

**வ்யாக்யானம்** - இவர்கள் தன்னையறிந்து கரைமரம்சேரும்படி என்றது – இப்படி ஸம்ஸார ஸாகரத்திலே கிடந்து நோவுபடுகிற இவர்கள் த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: என்றும், ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம் விஷ்ணு போதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம் என்றும் சொல்லுகிறபடியே, ஸம்ஸார நிஸ்தரணோபாயபூதனான தன்னையறிந்து ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து அக்கரைப்படும்படி என்கை.

**விளக்கம்** – (இவர்கள் தன்னை அறிந்து கரை மரம் சேறும் படி) – இவ்விதம் ஸம்ஸாரக் கடலில் கிடந்து தத்தளிக்கும் இவர்கள், அதனில் இருந்து வெளிவரும் உபாயமாக உள்ள தன்னை அறிந்து அந்தக் கடலைக் கடக்கும்படி என்று கருத்து. இதனை ஜிதந்தே ஸ்தோத்ரம்(1–4) – த்வாம் ஏவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: – உன்னையே சரணம் என்று அடைந்து ஸம்ஸாரக் கடலைக் கடக்கின்றனர் – என்றும், விஷ்ணு தர்மம்(1–59) – ஸம்ஸார அர்ணவமக்நாநாம் விஷயா க்ராந்த சேதஸாம் விஷ்ணு போதம் விநா நாந்யத் கிஞ்சித் அஸ்தி பராயணம் – ஸம்ஸார கடலில் சிக்கி, உலகவிஷயங்களால் புலன்களும் மனமும், பீடிக்கப்பட்டவர்களுக்கு விஷ்ணு என்ற ஓடத்தை தவிர கரை ஏறும் வழி வேறு இல்லை – என்றும் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று என்றது – நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமை விரித்தவன் என்கிறபடியே நரநாராயணரூபேண அவதரித்து நரனான தான் சிஷ்யனுமாய், நாராயணான தான் ஆசார்யனுமாய் நின்று என்கை. திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான் என்றது – ஸகலசாஸ்த்ரஸங்க்ரஹமாய் அந்த சாஸ்த்ர தாத்பர்யமான அர்த்தபஞ்சகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியா நிற்கும் திருமந்த்ரத்தை ப்ரகாசிப்பித்தருளினான் என்கை.

**விளக்கம்** – (தானே சிஷ்யனும் ஆசார்யனுமாய் நின்று) – பெரிய திருமொழி(10–6) – நர நாராயணனாய் உலகத்து அறநூல் சிங்காமை விரித்தவன் – என்னும்படி நர–நாராயணனாகத் தானே அவதரித்து, தானே நரன் என்ற சிஷ்யனாகவும் தானே நாராயணன் என்ற ஆசார்யனுமாகவும் நின்றதைக் கூறினார். (திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்) – அனைத்து சாஸ்திரங்களின் சுருக்கமாக உள்ளதும், அந்தச் சாஸ்திரங்களை விளக்கும் அர்த்தபஞ்சகத்தையும் விளக்குவதும் ஆகிய திருமந்த்ரத்தை வெளியிட்டான்.

**வ்யாக்யானம்** - அருளிச்செய்தானென்னாதே வெளியிட்டருளினானென்றது, இப்போதுதான் ஒன்றை நியமித்துச் சொன்னானல்லன். அனாதியானத்தை ப்ரகாசிப்பித்தானித்தனை என்னுமிடமும், அதி குஹ்யமாயுள்ளத்தை இவர்கள் துர்க்கதி கண்டு ஸஹிக்க மாட்டாமையாலே ப்ரகாசிப்பித்தானென்னுமிடமும் தோற்றுகைக்காக.

**விளக்கம்** – அருளிச் செய்தான் என்று கூறாமல், வெளியிட்டான் என்று ஏன் கூறவேண்டும்? அருளிச் செய்தான் – என்று கூறினால், இதுவரை இல்லாத ஒன்றை இப்போது புதிதாகக் கூறினான் என்று தோன்றி விடும். ஆகவே எண்ணற்ற காலமாக இருந்து வருவதை

வெளிப்படுத்தினான் என்று உணர்த்தவே இவ்விதமாகக் கூறினார். மேலும், மிகவும் ரஹஸ்யமாக உள்ள இந்த மந்த்ரத்தை, இவர்களது துன்பம் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல் வெளியிட்டான் – என்ற இரு காரணங்களால் வெளியிட்டான் என்று கூறினார்.

## 6. சிஷ்யனாய் நின்றது, சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக.

**அவதாரிகை** – ஆனால், ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளிவிட அமையாதோ? சிஷ்யனாய் நின்றது எதுக்காக? என்ன, அருளிச் செய்கிறார் சிஷ்யனாய் என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆசார்யனாக நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டால் போதுமானது அல்லவோ? சிஷ்யனாயும் ஏன் இருக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளின அளவன்றிக்கே தானே சிஷ்யனுமாய்க்கொண்டு நின்றது, ஆஸ்திகோ தர்ம சீலச்ச சீலவாந் வைஷ்ணவச்சுசி: கம்பீரச்சதுரோ தீரச் சிஷ்ய இத்யபிதீயதே, சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் குர்வர்த்தம் தாரயேத்யஸ்து ஸ சிஷ்யோ நேதர: ஸ்ம்ருத:, ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ்தத்வபோதாபிலாஷீ சுச்ரூஷூஸ்த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ: சாந்தோ தாந்தோ அநஸூயுச் சரணமுபகதச் சாஸ்த்ரவிச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ் தத்வதச்சிக்ஷணீய: இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளும், ஸாத்யாந்தர நிவ்ருத்தியும், பலஸாதந சுச்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையும் உடையனாயிருக்கையுமாகிற சிஷ்யலக்ஷணம் லோகத்திலுள்ளார் அறியாமையாலே, அத்தை ஸ்வாநுஷ்டாநத்தாலே அறிவிக்கைக்காக என்கை. உபதேசத்தாலே அறிவிக்குமளவில், ஸ்வோத்கர்ஷம் தேடிக்கொள்ளவந்தானித்தனையென்று நினைக்கவுங் கூடும், அநுஷ்டாநத்தாலே அறிவிக்குமளவில், நமக்கும் இது வேணுமென்று விச்வஸித்துப் பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

**விளக்கம்** – அவன் ஆசார்யனாக நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டு அருளியதோடு நில்லாமல், தானே சிஷ்யனாகவும் நின்றது ஏன் என்றால் – இந்த உலகில் உள்ள மக்களுக்கு ஒரு சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும் என்று தெரியவில்லை, ஆகவே தன்னைத் தானே சிஷ்யனாக நின்று உணர்த்தினான். சிஷ்யனின் லக்ஷணம் என்பது – பகவத் கைங்கர்யம் தவிர மற்ற விஷயங்களில் இருந்து விலகி நிற்பது, தனக்கு ஏற்ற பலனைப் பெறுவதில் ஈடுபடவேண்டிய ஸாதகங்களை அறிவது, ஸம்ஸாரத்தில் ஈடுபடாமல் இருப்பது, பணிவுடன் இருப்பது, பொறாமை இல்லாமல் இருப்பது ஆகியவை ஆகும். இதனைக் கீழே உள்ள பல வரிகளின் மூலம் அறியலாம்:

- ஆஸ்திகோ தர்ம சீலச்ச சீலவாந் வைஷ்ணவ: சுசி: கம்பீர: சதுரோ தீர: சிஷ்ய இத்யபீதீயதே – சாஸ்திரத்தில் நம்பிக்கை வைப்பவனும், அதில் கூறிய தர்மங்களின்படி நடக்கும் விருப்பம் உள்ளவனும், சிறந்த ஒழுக்கம் உள்ளவனும், விஷ்ணு பக்தி கொண்டவனும், தூய்மையானவனும், ஆசார்ய பக்தியில் எல்லை இல்லாதவனும், ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடையில் சிறந்தவனும், ஆசார்ய கைங்கர்யம் நிறைந்தவனும் ஆகிய ஒருவனே சிஷ்யன் எனப்படுவான்.

- ஜயஸம்ஹிதை – சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் குர்வர்த்தம் தாரயேத்யஸ்து ஸ சிஷ்யோ நேதர: ஸ்ம்ருத: – தனது உடல், பொருள், ஞானம்,

இருப்பிடம், செயல்கள், குணங்கள், ப்ராணன் ஆகிய அனைத்தும் தன்னுடைய ஆசார்யனுக்கே என்று யார் ஒருவன் உள்ளானோ அவனே சிஷ்யன் எனப்படுவான்.

- ந்யாஸ விம்சதி(7) – ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ் தத்வ போதாபிலாஷீ சுச்ரூஷுஸ்த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ: சாந்தோ தாந்தோ அநஸூயுச் சரணமுபகதச் சாஸ்த்ரவிச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ் தத்வதச் சிக்ஷணீய: – சிறந்த ஞானம் உள்ளவன், ஸாதுக்களை மதிப்பவன், சிறந்த ஒழுக்கம் உள்ளவன், உண்மையான ஞானம் பெறுவதில் ஆர்வம் உள்ளவன், ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடைகளை விரும்புபவன், கர்வம் அற்றவன், ஆசார்யனின் திருவடிகளை வணங்குவதில் ஈடுபட்டவன், கேள்வி கேட்கும் நேரம் அறிந்து கேட்பவன், மன–புலனடக்கம் உள்ளவன், பொறமை இல்லாதவன், சாஸ்த்ரத்தில் நம்பிக்கை உள்ளவன், மேலே கூறப்பட்ட தகுதிகள் உள்ளனவா என்று ஆசார்யனால் சோதிக்கப்பட்டவன், ஆசார்யனின் உபகாரத்தை மறக்காதவன் இப்படிப்பட்டவனே உண்மையான சிஷ்யன் ஆவான்.

இதனை அவன் சிஷ்யனாய் இருக்காமல், ஆசார்யனாக மட்டுமே வந்து உபதேசம் செய்திருந்தால் பலரும் – இவன் தன்னுடைய மேன்மையை உணர்த்தவே இவ்விதம் செய்கிறான் – என்று கூறக்கூடும். மாறாக, தன்னுடைய நடவடிக்கை மூலம் சிஷ்யனாக இருந்தான் என்றால், அதனைக் கண்ட மக்கள் தங்களுக்கும் அந்த நிலை வேண்டும் என்று மாறிவிடுவார்கள். ஆகவே இவ்விதம் சிஷ்யனாயும் நின்றான்.

## 7. ஸகல சாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயமார்ஜிதம் போலே, திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம் பைத்ருக தநம் போலே.

**அவதாரிகை** – இப்படி சிஷ்யனாய் நின்று இம்மந்த்ரசிக்ஷை பண்ணி இவ்வழியாலே ஜ்ஞாநம் பிறக்கவேணுமோ? ஞானக்கலைகள் என்கிறபடியே ஸகலசாஸ்த்ரங்களும் ஜ்ஞாநஸாதநமாயன்றோ இருப்பது. அவற்றை அப்யஸித்து அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்தாலோ? என்ன, சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்துக்கும், இம்மந்த்ர ஜந்யஜ்ஞாநத்துக்கும் உண்டான விசேஷத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச் செய்கிறார் – ஸகலசாஸ்த்ரங்களாலும் என்று தொடங்கி.

**விளக்கம்** – இங்கு ஒரு சந்தேகம் எழலாம் – ஞானம் பெறுவதற்கு இவ்விதமாக சிஷ்யனாய் நின்று, இந்த மந்த்ரத்தைக் கற்கவேண்டுமா? திருவாய்மொழி (1–9–8) – ஞானக் கலைகள் – என்று கூறுவது போல் அனைத்து சாஸ்த்ரங்களும் ஞானத்தை உண்டாக்கவல்ல உபாயமாகவே உள்ளன அல்லவா? இதற்கு விடையாக – சாஸ்த்ரங்கள் கற்பதன் மூலம் ஏற்படும் ஞானத்திற்கும், இந்த மந்த்ரத்தின் மூலம் ஏற்படும் ஞானத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஓர் உதாரணம் மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது – தத்வஜ்ஞாந ஜநகங்களான ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகலசாஸ்த்ரங்களாலும் சேதநருக்குப் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயம் ஆர்ஜித தநம் போலே அத்யாயாஸலப்யமாயிருக்கும் – என்கை. சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேஸம் புத்தேச்சலநகாரணம் உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வ கர்மஸு என்னக்கடவதிறே. இத்தால், சாஸ்த்ரங்களிற்காட்டில் தத்ஸங்க்ரஹமான திருமந்த்ரத்துக்கு உண்டான வைபவம் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** – ச்ருதி, ஸ்ம்ருதி போன்ற ஞானம் ஏற்படுத்தவல்ல சாஸ்த்ரங்கள் அனைத்தும் ஜீவனுக்கு அறிவை உண்டாக்கும் என்பது உண்மையே. ஆனால் அந்த அறிவு என்பது தானே, தனது சொந்த முயற்சியில் செல்வம் சம்பாதிப்பது போன்று சிரமம் நிறைந்ததாகும். ஆனால் ஆசார்யனின் உபதேசம் மூலமாகக் கிடைக்கப் பெறும் திருமந்த்ரத்தால் பிறக்கும் ஞானமானது, முன்னோர் சேர்த்து வைத்த செல்வம் போன்று மிகவும் எளிதாக கிடைக்கும் ஒன்றாகும். சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேஸம் புத்தேச்சலநகாரணம் உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வ கர்மஸு – சாஸ்த்ரங்கள் மூலம் ஏற்படும் ஞானமானது மிகவும் சிரமமானது, புத்தியைக் கலங்கச் செய்வது ஆகும், எனவே நாராயணனை உபதேசம் மூலம் தனது உபாயம் என்று அறிந்து கொண்டு சாஸ்த்ரங்கள் மூலமாக ஞானம் ஏற்படுத்தவல்ல செயல்களைக் கை விட வேண்டும் – என்று கூறப்பட்டது. இதன் மூலம் சாஸ்த்ரங்களின் சுருக்கமாக உள்ள திருமந்த்ரத்திற்கு, சாஸ்த்ரங்களை விட அதிக மேன்மை கூறப்பட்டது.

## 8. பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்

**அவதாரிகை** – ஆனால் சாஸ்த்ரங்களொழிந்தாகிறது, பகவந் மந்த்ரந்தான் இதொன்றுமன்றே, பின்னையும் பலவில்லையோ? என்கிற சங்கையிலே. மந்த்ராந்தரங்களிற்காட்டில் இதுக்கு உண்டான வைபவத்தை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி – பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள் – என்றார்.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம். சாஸ்த்ரங்களை ஞானம் பிறப்பதற்காகக் கற்காமல் விடுவது போகட்டும். எம்பெருமானைக் கூறும் மந்த்ரங்கள் திருமந்த்ரம் மட்டும் அல்லவே, பல மந்த்ரங்கள் உள்ளனவே. அவற்றின் மூலம் ஞானம் ஏற்படலாம் அல்லவா? இதற்கு விடையாக, பல மந்த்ரங்கள் இருந்தாலும், அவற்றைக் காட்டிலும் திருமந்த்ரத்திற்குப் பெருமை அதிகம் என்பதை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – ஆஸ்தாம் தே குணராவிசத் குணாபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா, பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே, தவாநந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா:, பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந – என்றும், எண்ணில் தொல்புகழ் – என்றும், எங்கின்ற யோனியுமாய் பிறந்தாய் – என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே பகவத் குணங்களும், குணபரீவாஹரூபங்களான அவதாரங்களும் அஸங்க்யாதமாயிருக்குமாபோலே. அவற்றை அனுபந்தித்திருக்கும் மந்த்ர விசேஷங்களும் அநந்தா வைபகவந்மந்த்ரா: என்கிறபடியே அநேகங்களாயிருக்கும் என்கை.

**விளக்கம்** – கீழே உள்ள பல வரிகள் காண்க.

- ஸ்ரீரங்கராஜ ஸ்தவம்(2–74) – ஆஸ்தாம் தே குணராவிசத் குணா பரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா – ஸ்ரீரங்கநாதா, எல்லையற்ற உனது கல்யாணகுணங்களைப் போலவே, அந்தக் குணங்களை உணர்த்தும் உனது அவதாரங்களும் எண்ணிக்கையற்றவை.

- இராமாயணம், அயோத்யா காண்டம்(2–26) – பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே – தசரதனே, உனது புத்திரனுக்குப் பல கல்யாணகுணங்கள் உள்ளன.

- விஷ்ணு தர்மம் – தவாநந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா: – எண்ணிக்கையற்ற குணங்கள் உனக்கு இருந்தாலும், ஆறு குணங்களே முக்கியமானவை.

- ஸ்ரீமத் பகவத் கீதை(4–5) – பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந – அர்ஜுனா, உனக்கும் எனக்கும் எண்ணற்ற பிறப்புகள் கடந்து விட்டன.

- திருவாய்மொழி(3–3–3) – எண்ணில் தொல் புகழ்

- திருவிருத்தம்(1) – எண்ணின்ற யோநியுமாய் பிறந்தாய் – பல பிறவிகளிலும் பிறந்தாய்.

இது போன்று பல வரிகளில் கூறியபடி பகவானது குணங்களும், அந்தக் குணங்களை வெளிப்படுத்தும் அவனது அவதாரங்களும் எண்ணற்று உள்ளன. இது போன்றே இவற்றைப் (குணங்கள் மற்றும் அவதாரங்களை) புகழும் மந்த்ரங்களும் – அனந்தா வை பகவந் மந்த்ரா – என்பது போல் எண்ணற்றவையாக உள்ளன.

## 9. அவைதான், வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம்

**அவதாரிகை** – அவையெல்லாந்தான் ஏகவர்க்கமோ? என்ன. அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம் என்கிறார்.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – இந்த பகவத் மந்த்ரங்கள் அனைத்தும் ஒரே வகைதானா அல்லது பல வகைப்பட்டதா? அவை வ்யாபகம் மற்றும் அவ்யாபகம் என இரு வகைப்படும் என்றார் .

**வ்யாக்யானம்** – அதாவது ஸ்ர்வவ்யாபகமான பகவத் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே வ்யாபகங்களென்றும், பகவத் அவதார குணா சேஷ்டிதங்களில் ஓரொன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்றும் உபயவர்க்கமாயிருக்கும் – என்கை.

**விளக்கம்** – மந்த்ரங்கள் பகவானுடைய ஸ்வரூபத்தை, அவன் எங்கும் பரவி உள்ளதை(வ்யாபித்து உள்ளதை) விளக்குவதால், வ்யாபக மந்த்ரங்கள் என்றும், அவை அவனுடைய அவதாரங்களின் போது அவனுக்குப் பொருந்தியுள்ள குணங்களையும் செயல்களையும் தனித்தனியே கூறுவதால் அவ்யாபகம் என்றும் இரண்டு வகைப்படும்.

## 10. அவ்யாகபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்

**அவதாரிகை** – வர்க்கத்வயமும் தன்னிலோக்குமோ? என்ன, அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள் என்கிறார்.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – இந்த இரண்டு வகைகளும்(வ்யாபக மந்த்ரங்கள், அவ்யாபக மந்த்ரங்கள்), ஒரே தன்மை கொண்டவையா? இதற்கு விடையாக அவ்யாபக மந்த்ரங்களை விட, மூன்று வ்யாபக மந்த்ரங்கள் மேன்மையானவை என்றார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அவ்யாபகங்களாய் இருந்துள்ள ஸகல மந்திரங்களிலும் – நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் என்று விஷ்ணு காயத்ரியில் ஓதப்படுகிற வ்யாபக மந்த்ரங்கள் மூன்று ச்ரேஷ்டங்களாயிருக்கும் – என்கை. இந்த விஷ்ணு காயத்திரியிலே நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்கள் அந்த மந்த்ர த்ரயத்துக்கும் ப்ரதாநபூத நாமத்ரயங்களாகையாலே, ஸாதாரண ப்ரணவ நமஸ்ஸுக்களோடே கூடின மந்த்ர த்ரயத்துக்கும் உபலக்ஷணமாகக் கடவது.

**விளக்கம்** – அவ்யாபக மந்த்ரங்களாக உள்ள அனைத்து மந்த்ரங்களை விட தைத்திரீய உபனிஷத் கூறும் – நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்– என்னும் விஷ்ணு காயத்ரி மூலம் கூறப்படும் மூன்று வ்யாபக மந்த்ரங்கள் மிகவும் உயர்ந்தவையாகும். இந்த விஷ்ணு காயத்ரியின் பொருள் – நாராயணனை அடைய நாம் விருப்பம் கொள்கிறோம், அதற்காக வாஸுதேவனை உபாசிக்கிறோம், இந்த த்யானத்தை விஷ்ணு மேம்படுத்த வேண்டும் – என்பதாகும். இந்த காயத்ரியில் உள்ள நாராயண, வாஸுதேவ, விஷ்ணு ஆகிய மூன்று பதங்களும், மூன்று வ்யாபக மந்த்ரங்களில் உள்ள மூன்று திருநாமங்களை உள்ளடக்கியது. மேலும் அந்த மூன்று மந்த்ரங்களில் உள்ள ப்ரணவமும்(ஓம்), நம என்பதும் இங்கு மறைமுகமாகக் கூறப்பட்டது. (இந்த மந்திரங்கள் – ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ பகவதே வாசுதேவாய், ஓம் நமோ விஷ்ணவே).

## 11. இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்திரம் ப்ரதாநம்

**அவதாரிகை** – இந்த வ்யாபக மந்த்ர த்ரயமும் தன்னிலொக்குமோ என்ன, இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம் என்கிறார்.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – இந்த மூன்று வ்யாபக மந்த்ரங்களும் ஒரே தன்மை கொண்டவையா? மூன்றில் திருமந்த்ரமே முக்கியமானது என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அவ்யாபகங்களிற்காட்டில் ச்ரேஷ்டமாயிருந்துள்ள இந்த வ்யாபக மந்த்ரங்கள் மூன்றிலும் வைத்துக்கொண்டு நாராயணாய வித்மஹே என்று ப்ரதமோபாத்தமாகையாலும். அர்த்த பூர்த்யாதிகளாலும், நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:, ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர: – என்னும்படியான பெருமையையுடைய திருமந்த்ரம் ப்ரதாநமாயிருக்கும் – என்கை.

**விளக்கம்** – அவ்யாபக மந்த்ரங்களான பலவற்றை விடச் சிறந்தவையாக உள்ள இந்த மூன்று வ்யாபக மந்த்ரங்களில் திருமந்த்ரமே முக்கியமானது ஆகும். இதன் காரணம் என்ன? விஷ்ணு காயத்ரியில் நாராயணாய வித்மஹே என்று நாராயண நாமமே முதலில் படிக்கப்பட்டுள்ளது. மேலும் அதுவே பூரணமான பொருளை உள்ளடக்கி இருக்கிறது. மேலும் கீழே உள்ள வரிகளின் மூலமும், திருமந்த்ரமே முக்கியமானது எனலாம்.

- ந அஸ்தி சாஷ்டாக்ஷ்ராத்பர: – அஷ்டாக்ஷரத்தை விட மேலான மந்த்ரம் வேறு இல்லை

- நரஸிம்ஹ புராணம் – ந மந்தர: அஷ்டாக்ஷராத் பர: – அஷ்டாக்ஷரத்தை விட மேலான மந்த்ரம் இல்லை

## 12. மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு

**அவதாரிகை** – மற்றை வ்யாபகத்வயத்துக்கும் தாழ்வு எது? என்ன, மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு என்கிறார்.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – திருமந்த்ரமே உயர்ந்தது என்றால் மற்ற இரண்டு வ்யாபக மந்த்ரங்களுக்கும் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய, ஓம் நமோ விஷ்ணவே) உள்ள தாழ்வு என்ன? இந்தக் கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, வாஸுதேவ விஷ்ணு சப்தங்களான மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டுக்கும், நாராயண சப்தம் போலே ஸ்வரூபரூபகுணாதிகளையெல்லாம் ப்ரதிபாதியாதே ஸ்வரூபமாத்ரத்தை ப்ரதிபாதிக்கையாலே, நிர்விசேஷசிந்மாத்ரவஸ்துவாதிகளான குத்ருஷ்டிகள் மிகவும் ஆதரித்துப் போருகையாகிற அசிஷ்டபரிக்ரஹமும், வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷதையாகிற அபூர்த்தியும் உண்டு என்கை. ஷடக்ஷரி–வ்யாப்யபதார்த்தங்களையும், வ்யாபநப்ரகாரத்தையும், வ்யாப்திபலத்தையும் வ்யாபகனுடைய குணங்களையும் சொல்லாதே, வ்யாப்திமாத்ர ப்ரகாசகமாகையாலே அபூர்ணம். வ்யாபநப்ரகாரத்தைச் சொல்லா நிற்கச் செய்தேயும், வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகசப்தம் இல்லாமையாலும் ஸர்வம் வஸதி என்று அர்த்தபலத்தாலே ஸர்வஸப்தம் புகுந்தாலும், அதில் குணம் அந்வயியாமையாலும். இனி, குணஸித்திக்காக பகவச்சப்தத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டுகையாலும், வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும், திருத்வாதசாக்ஷரியும் அபூர்ணம். இம்மந்த்ரம் அவை போலன்றியிலே, வ்யாப்யபதார்த்தங்களோடு, வ்யாபநப்ரகாரத்தோடு, வ்யாப்தி பலத்தோடு, வ்யாபகனுடைய குணங்களோடு வாசியற சாப்தமாகக் காட்டுகையாலே, அவற்றிற்காட்டில் இதுக்கு அர்த்த பௌஷ்கல்ய நிபந்தநமான ஆதிக்யம் உண்டு (பரந்த ரஹஸ்யம்) என்று மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டினுடைய அபூர்த்தியையும் திருமந்த்ரத்தினுடைய அர்த்தபூர்த்தியையும் ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** – நாராயண என்ற பதம் அவனுடைய ஸ்வரூபம், ரூபம் மற்றும் குணங்கள் ஆகிய மூன்றையுமே வெளிப்படுத்துகிறது. ஆனால் வாசுதேவ என்ற பதமும், விஷ்ணு என்ற பதமும் அவனுடைய ஸ்வரூபத்தை மட்டுமே வெளிப்படுத்துகின்றன. ஆகவே அவனை குணங்கள் இல்லாத ஸ்வரூபம் (ப்ரஹ்மம்) என்று கருதுகிற அத்வைதிகள், இந்தப் பதங்களால்

அவனைக் கூறுகின்றனர். ஆக, வேதங்களுக்குத் தவறான பொருள் கூறும் அத்வைதிகளாலும், மற்றவர்களாலும் ஆதரிக்கப்படுவதால், அந்தப் பதங்கள் ஏற்பதற்கு இல்லை. மேலும் அவை, பகவான் எங்கும் உள்ளவன் போன்ற தன்மைகளைக் கூறுவதில்லை. பெரியவாச்சான் பிள்ளை (குறிப்பு: ஸ்ரீமணவாளமாமுனிகள் தனது வ்யாக்யானத்தில் ஆச்சான்பிள்ளை என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அவர் யாரைக் குறிப்பிட்டார் என்பதில் பல சர்ச்சைகள் உள்ளன. ஆனால், பெரியவாச்சான் பிள்ளையின் பரந்து விரிந்துள்ள க்ரந்தங்களைக் காணும்போது, அவரை அல்லாமல் வேறு யாரையும் இங்கு கூறியிருக்க இயலாது என்பது அடியேனின் தாழ்ந்த கருத்து) தனது பரந்த ரஹஸ்யத்தில் பின்வருமாறு விளக்குகிறார் – ஆறு எழுத்துள்ள மந்த்ரம் (ஓம் நமோ விஷ்ணவே) அவன் எங்கு வ்யாபித்துள்ளன், எதற்காக வ்யாபித்துள்ளான், எவ்விதமாக வ்யாபித்துள்ளான், வ்யாபித்துள்ள அவனது குணங்கள் யாவை போன்றவற்றை விளக்கவில்லை. அந்த மந்த்ரம் அவன் வ்யாபித்துள்ளான் என்று மட்டுமே கூறுவதால், அந்த மந்த்ரம் முழுமையானது அல்ல. அடுத்துள்ள பன்னிரண்டு எழுத்து கொண்ட மந்த்ரம் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய), அவன் எவ்விதம் பரவியுள்ளான் என்பதை விளக்கினாலும், அவன் எதில் வ்யாபித்துள்ளான் என்பதை விளக்கவில்லை. அவன் எதில் வ்யாபித்துள்ளான் என்பதை – ஸர்வம் வஸதி – என்று ஸர்வ என்னும் பதம் மூலம் (எங்கும் என்ற பொருள்பட) கூறினாலும், அதில் அவனுடைய குணங்களை வெளிப்படுத்தவில்லை. ஆக அவனது குணங்களை வெளிப்படுத்திக் கூறுவதற்காக, பகவான் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய என்பதில் உள்ள பகவதே என்ற பதம்) என்ற பதத்தை சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும் அந்த மந்த்ரம், அவன் ஏன் வ்யாபித்துள்ளான் என்பதை விளக்கவில்லை. திருமந்த்ரம் இவற்றைப் போன்று அல்ல. அவன் எதனை வ்யாபித்துள்ளான், ஏன் வ்யாபித்துள்ளான், அவனது குணங்கள் என்ன என்பதைத் திருமந்த்ரம் மிகவும் தெளிவாக விளக்குகிறது. ஆக, திருமந்த்ரத்தின் பொருள் மிகவும் ஆழமாக உள்ளதால், மற்ற இரண்டு மந்த்ரங்களை விட, இது உயர்ந்தது.

## 13. இத்தை வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள்.

**அவதாரிகை** – இதுக்கு சிஷ்டபரிக்ரஹம் உண்டோ? என்ன, அருளிச்செய்கிறார் இத்தை என்று தொடங்கி.

**விளக்கம்** – திருமந்த்ரத்திற்கு நல்லவர்களின் ஆதரவு உண்டா என்ற சந்தேகம் எழலாம் – இதற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, விஷ்ணுகாயத்ரியிலே வ்யாபகமந்த்ரத்ரயத்தையுஞ் சொல்லுகிறவளவில், ப்ரதமத்திலே நாராயண சப்தத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும், விச்வம் நாராயணம் என்று தொடங்கி. நாராயணபரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந்த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: என்று ஸகல வேதாந்தஸாரபூதமான நாராயணாநுவாகத்திலும். ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாநோ நேமே த்யாவாப்ருதிவீ என்று மஹோபநிஷத்திலும். சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண: ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண: என்று தொடங்கி, திசச்ச ப்ரதிசச்ச நாராயண: என்று முடிவாக நடுவு அடைய ஸுபாலோபநிஷத்திலும். யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரிரம் என்று தொடங்கி, யஸ்ய ம்ருத்யு: சரீரம் என்கிறது ஈறாக நடுவுள்ள பர்யாயங்கள்தோறும். ஏஷ ஸர்வபூதாந்தராத்மா

அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: என்று அந்தர்யாமி பராஹ்மணத்திலும் வாஸுதேவ விஷ்ணு சப்தங்களை அநாதரித்து, நாராயண சப்தத்தையிட்டு, பகவத்ஸ்வரூபாதிகளை நிர்த்தேசிக்கையாலும், அபௌருஷேயமாய், நித்யநிர்த்தோஷமாய், ஸ்வத: ப்ரமாணங்களான வேதங்களும் விரும்பிற்றின. யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர: ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:, ருத்வோர்தவபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமிவ: ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ரோஷ்டாக்ஷராத்பர:, ஸர்வ வேதாந்த ஸாரார்த்த: ஸம்ஸாரார்ணவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாம் அபுநர்ப்பவ காங்க்ஷிணாம், ஆர்த்தா விஷண்ணா சிதிலாச்ச பீதா கோரேஷு சவ்யாதிஷு வர்த்தமாநா: ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம் விமுக்த துக்காஸ் ஸுகிநோபவந்தி, நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வஸவர்த்தினீ ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம், கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்ததா ஸாதக: இத்யாதிகளாலே வேதார்த்தோபப்ரும்ஹணங்களாயிருக்கிற ஸ்வப்ரபந்தங்களிலே பல விடங்களிலும் இத்தை சிலாகித்துக்கொண்டு சொல்லுகையாலே, வேதார்த்த விசதீகரண ப்ரவ்ருத்தரான வ்யாஸாதி பரமருஷிகளும் விரும்பினார்கள். வண்புகழ் நாரணன், செல்வ நாரணன் என்று தொடங்கி வாழ்புகழ் நாரணன் என்று முடிவாக ஆதிமத்யாவஸாநமாக நம்மாழ்வார் அருளிச்செய்கையாலும். நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய என்று தொடங்கி ஓவாதே நமோ நாரணாவென்பன் என்று பெரியாழ்வாரும், நாத்தழும்பெழ நாரணா என்று தொடங்கி நலந்திகழ் நாரணன் என்று பெருமாளும், நான்முகனை நாராயணன் படைத்தான் என்று தொடங்கி எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே என்று திருமழிசைப்பிரானும், நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம் என்று உபக்ரமதசையிலே ஒரு கால் சொன்னாற்போலே ஒன்பதின்கால் சொல்லி நாராயணாவோ. மணிவண்ணா. நாகணையாய். வாராய் என்று திருமங்கையாழ்வாரும் உபக்ரமத்தோடு உபஸம்ஹாரத்தோடு வாசியற அருளிச்செய்கையாலும், நன்மாலை கொண்டு நமோ நாரணா வென்னும் சொன்மாலை கற்றேன் என்றும், நாரணாவென்றோ வாதுரைக்கும் உரையுண்டே என்றும், ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு, நாரணன் தன் நாமங்கள், பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன் என்றும் நாமம் பல சொல்லி நாராயணா என்றும் முதலாழ்வார்களும் அருளிச்செய்கையாலும், மயர்வற மதிநலம் அருளினன் என்கிறபடியே நிர்ஹேதுக பகவத் கடாக்ஷத்தாலே ஸமதிகத ஸமஸ்த வஸ்து வாஸ்தவரான ஆழ்வார்களெல்லாரும் விரும்பினார்கள். இதர மந்த்ரங்களை அநாதரித்து இத்தையே தந்தாமுக்குத் தஞ்சமாக அநுஸந்தித்து, உபதேச வேளையிலும் தந்தாமைப் பற்றினவர்களுக்கும் இத்தையே உஜ்ஜீவந ஹேதுவாக உபதேசித்துப் போருகையாலே அவ்வாழ்வார்களைப் பின் சென்ற ஆசார்யர்க ளெல்லாரும் விரும்பினார்களென்கை. இத்தால் மந்த்ராந்தரங்களிற் காட்டில் இம்மந்த்ரத்துக்குண்டான வைபவஞ் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – விஷ்ணு காயத்ரியில் மூன்று வ்யாபக மந்த்ரங்கள் கூறும்போது, முதலில் நாராயண மந்த்ரமே கூறப்பட்டது. பின்வரும் பல வரிகளில், பகவானின் ஸ்வரூப–ரூப–குணங்களை நாராயண என்ற பதம் மூலம் உணர்த்தியும், வாஸுதேவ மற்றும் விஷ்ணு என்ற பதங்களை விலக்கியும் கூறப்பட்டதைக் காணலாம்:

- தைத்திரீய நாராயணவல்லி – விச்வம் நாராயணம் – நாராயணனே அனைத்தும் – என்று தொடங்கி – நாராயணபரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந்த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: – நாராயணனே ப்ரப்ரஹ்மம், நாராயணனே உயர்ந்த தத்வம், நாராயணனே உயர்ந்த ஜ்யோதி, நாராயணனே பரமாத்மா. இந்த உலகில் நாம் பார்ப்பன மற்றும் கேட்பன ஆகிய அனைத்துப் பொருள்களின் உள்ளும் புறமும் நாராயணனே பரவியுள்ளான் – என்று முடித்தது.

- மஹா நாராயண உபநிஷத் – ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாநோ நேமே த்யாவா ப்ருதிவீ – ப்ரளயத்தின்போது நாராயணன் மட்டுமே இருந்தான். ப்ரம்மனும், சிவனும், ஆகாயமும், பூமியும் இல்லை.

- ஸுபால உபநிஷத் – சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண: ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண: – கண்களால் காண்பவையும், அவற்றைக் காணும் கண்களும் நாரயணனே, காதால் கேட்பவையும், அவற்றைக் கேட்கும் காதுகளும் நாராயணனே – என்று தொடங்கி – திசச்ச ப்ரதிசச்ச நாராயண: – திசைகளும் உபதிசைகளும் நாராயணனே – என்று முடித்தது.

- ஸுபால உபநிஷத் – யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ, யாருக்கு பூமி சரீரமோ – என்று தொடங்கி – யஸ்ய ம்ருத்யு: சரீரம் – யாருக்கு ம்ருத்யு சரீரமோ – என்று முடித்தது.

- ஸுபால உபநிஷத் – ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: – அனைத்து உயிர்களின் அந்தர்யாமியாக, அவைகளின் ஏற்ற–தாழ்வுகளால் தீண்டப்படாமல் உள்ளவனாக, பரமபதத்தில் உள்ளவனாக நாராயணன் இருக்கிறான்.

இப்படியாக, யாராலும் இயற்றப்படாமல் உள்ளதும், தோஷங்கள் அற்றதும், அனைத்திற்கும் ப்ரமாணங்களாக உள்ளதும் ஆகிய வேதங்கள் – வாஸுதேவன், விஷ்ணு ஆகிய சபதங்களை எடுக்காமல், பகவானின் ஸ்வரூப–ரூப–குணங்களை விளக்க வல்லதான, நாராயண சப்தத்தையே மிகவும் விரும்பியது காண்க. பல ருஷிகள் தங்களது மந்த்ரங்களில் பின்வருமாறு கூறினர்:

- நாரதீயம் (1–41) – யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர: ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர: – மற்ற தெய்வங்களுக்குள் நாராயணனை விட மேலான தெய்வம் இல்லாதது போன்று, மந்த்ரங்களில் அஷ்டாக்ஷரத்தை விட மேலானது இல்லை.

- பூத்வோர்தவபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமிவ: ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ரோஷ்டாக்ஷராத்பர – கேளுங்கள், எனது கரத்தை உயர்த்தி, நான் உறுதியாகக் கூறுகிறேன் – அஷ்டாக்ஷரத்தை விட உயர்ந்த மந்த்ரம் வேறு இல்லை.

- நாரதீயம் (1–42) – ஸர்வ வேதாந்த ஸாரார்த்த: ஸம்ஸாரார்ணவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாம் அபுநர்ப்பவ காங்க்ஷிணாம் – வேதாந்தங்களின் சாரமாக உள்ளதும், ஸம்ஸாரம் என்ற கடலைக் கடக்க உதவுவதும் ஆகிய அஷ்டாக்ஷரமே, மறு பிறவியை வேண்டாத மனிதர்களால் புகவேண்டியதாகும்.

- விஷ்ணு ஸஹஸ்ரநாமம் – ஆர்த்தா விஷண்ணா சிதிலாச்ச பீதா கோரேஷு சவ்யாதிஷு வர்த்தமாநா: ஸங்கீர்தய நாராயண சப்தமாத்ரம் விமுக்த துக்காஸ் ஸுகிநோ பவந்தி – செல்வத்தை இழந்து வருந்துபவர்கள், செல்வம் கிடைக்காமல் துயரத்தில் உள்ளவர்கள், ஆத்ம அனுபவம் கைகூடாமல் உள்ளவர்கள், பகவத் அனுபவம் கிட்டாமல் பயத்தில் உள்ளவர்கள், கொடிய நோயினால் துயரத்தில் உள்ளவர்கள் ஆகிய அனைவரும் நாராயண சப்தத்தின் மூலம் தங்கள் துயர் நீங்கி, இன்பத்தை அடைகின்றனர்.

- காருட புராணம் – நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வஸவர்த்தினீ ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம் – நாராயணன் என்ற சொல்லும் உள்ளது, நாக்கும்

அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளது. ஆயினும் மக்கள் நரகத்தில் விழுகின்றனரே. இது வியப்பாக உள்ளதே.

- நாரதீயம் (1–40) – கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்ததா ஸாதக: – பல மந்த்ரங்களால் என்ன பயன் உள்ளது? விரதங்கள் மூலம் என்ன பயன் உள்ளது? நமோ நாராயணா என்ற மந்த்ரம் அனைத்து பயன்களையும் அளிப்பதாகும்.

இப்படியாக வேதங்களின் பொருளை அறிவதிலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்ட வ்யாசர் முதலான ருஷிகள் நாராயண சப்தத்தையே விரும்பினர். அடுத்து, ஆழ்வார்கள் கூறுவதைக் காணலாம்.

- திருவாய்மொழியில் – வண்புகழ் நாரணன் (1–2–10), செல்வ நாரணன் (1–10–8) என்று தொடங்கி, வாழ்புகழ் நாரணன் (10–9–1) என்று முடிவாக தொடக்கம், நடுப்பகுதி மற்றும் இறுதிப் பகுதி ஆகியவற்றில் நம்மாழ்வார் அருளிச்செய்தார்.

- பெரியாழ்வார் – நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய (திருப்பல்லாண்டு – 4) என்று தொடங்கி, ஓவாதே நமோ நாரணாவென்பன் (பெரியாழ்வார் திருமொழி – 5–1–3) என்று அருளிச்செய்தார்.

- குலசேகராழ்வார் – நாத்தழும்பெழ நாரணா (பெருமாள் திருமொழி – 2–4) என்று தொடங்கி, நலந்திகழ் நாரணன் (பெருமாள் திருமொழி – 10–11) என்று அருளிச்செய்தார்.

- திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் – நான்முகனை நாராயணன் படைத்தான் (1) என்று தொடங்கி, எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே (77) என்று திருச்சந்தத்தில் முடித்தார்.

- திருமங்கையாழ்வார் – நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம் (பெரியதிருமொழி – 1–1–1) என்று தனது திருமொழியின் ஆரம்பத்தில் ஒருமுறை கூறியது போன்று பலமுறை தனது திருமொழியில் நாராயண நாமத்தைச் சொல்லி, நாராயணாவோ. மணிவண்ணா. நாகணையாய். வாராய் (சிறிய திருமடல் – 50) – என்று பல இடங்களில் தொடக்கம், முடிவு என்ற வேறுபாடு இல்லாமல் அருளிச்செய்தார்.

- நன்மாலை கொண்டு நமோ நாரணா வென்னும் சொன்மாலை கற்றேன் (முதல் திருவந்தாதி – 57), நாரணா என்று ஓவாது உரைக்கும் உரையுண்டே (முதல் திருவந்தாதி – 95), ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு (இரண்டாம் திருவந்தாதி – 1), நாரணன் தன் நாமங்கள் (இரண்டாம் திருவந்தாதி – 2), பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன் (இரண்டாம் திருவந்தாதி – 81), நாமம் பல சொல்லி நாராயணா (மூன்றாம் திருவந்தாதி – 8) – என்று பலவிதமாக முதலழ்வார்கள் அருளிச்செய்தனர்.

இப்படியாக எந்தவிதமான ப்ரதிபலனையும் எதிர்பாராமல் – மயர்வற மதிநலம் அருளினன் – என்பதற்கு ஏற்ப, எம்பெருமான் அளித்த கடாக்ஷத்தின் மூலம், அனைத்து விஷயங்களையும் அறிந்த ஆழ்வார்கள், நாராயண சப்தத்தையே மிகவும் விரும்பினர். மற்ற இரண்டு மந்த்ரங்களையும் எடுக்காமல், இந்த மந்த்ரத்தை மட்டுமே தங்களுடைய தஞ்சம் என்று எண்ணியபடி, தங்களை அண்டியவர்களுக்கு இந்த மந்த்ரத்தையே ஆழ்வார்களைப் பின்பற்றி, ஆசார்யர்கள் உபதேசம் செய்தனர். இதன் மூலம் மற்ற மந்த்ரங்களை விட, இந்த மந்த்ரத்திற்கு உள்ள பெருமையைக் கூறினார்.

## 14. வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம்.

**அவதாரிகை** – இனி வாச்யந்தன்னிலும் இதுக்குண்டான வைபவத்தை அருளிச் செய்கிறார் வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம் என்று.

**விளக்கம்** – அடுத்து, இந்த மந்த்ரத்திற்கு, இந்த மந்திரத்தால் புகழப்படும் எம்பெருமானை விடப் பெருமை அதிகம் என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இதுக்கு வாச்யனாயிருந்துள்ள ஈச்வரனுடைய பெருமை போலன்று தத்வாசகமான இதன் பெருமையென்றபடி.

**விளக்கம்** – இந்த மந்த்ரத்தின் பொருளாக உள்ள ஈச்வரனின் பெருமையை விட, அவனைப் பற்றிக் கூறும் இந்த மந்த்ரம் பெருமை உடையது என்றார்.

## 15. அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்.

**அவதாரிகை** – அதுதான் ஏது என்னவருளிச்செய்கிறார் அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்றுதவும் என்று.

**விளக்கம்** – இந்த மந்த்ரத்துக்கு அப்படி என்ன பெருமை என்ற சந்தேகம் எழலாம். இதனை இப்போது விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது இதுக்கு வாச்யனானவன் ஸந்நிஹிதனன்றிக்கே தூரஸ்தனாயிருந்த காலத்திலும் வாசகமான இது ஆஸந்நமாய் நின்று தன்னை வசித்தவர்கள் அபேக்ஷிதங்களை ஸாதித்துக் கொடுக்குமென்கை.

**விளக்கம்** – இந்த மந்த்ரத்தால் கூறப்படும் பரம்பொருளான எம்பெருமான் அருகில் இல்லாமல் துாரத்தில் உள்ள போதிலும், அவனைப் பற்றிக் கூறும் இந்த மந்த்ரம், அதனை உச்சரித்தவர்களின் அருகிலேயே நின்று, அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும்.

## 16. த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே.

**அவதாரிகை –** இப்படி வாச்யன் தூரஸ்தனாயிருக்க, வாசகம் உதவின இடம் உண்டோ? என்று அருளிச்செய்கிறார் த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே என்று.

**விளக்கம் –** இப்படியாக எம்பெருமான தூரத்தில் இருந்தபோது, அவனது திருநாமம் அருகில் இருந்து உதவிய சம்பவம் ஏதேனும் உண்டா என்ற ஐயம் எழலாம். இதற்கு விடை தருகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது மஹாஸதஸ்ஸிலே துச்சாஸனன் வஸ்த்ராபஹாரம் பண்ணுகிறபோது மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸமர்த்தவ்யோ பகவாந் ஹரி: என்று முன்பே ஸ்ரீவஸிஷ்ட மஹர்ஷி சொல்லி வைத்ததை நினைத்து, சங்க சக்ர கதா பாணே த்வாரகாநிலய அச்யுத கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் என்று சரணம் புகுந்த த்ரௌபதிக்கு அவ்வாபத்திலே கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம் என்கிறபடியே வாச்யனான க்ருஷ்ணன் தூரஸ்தனாயிருக்கச் செய்தேயும், வஸ்த்ரத்தை வர்த்திப்பித்துக்கொடுத்தது, அவ்வவதாரத்துக்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமிறேயென்கை. நாரயண சப்தார்த்தத்தில் ஏகதேசத்துக்கு வாசகமான ஒரு திருநாமம் செய்தபடி கண்டால், இதன் ப்ரபாவம் கிம்புநர்ந்யாயஸித்தமிறே என்று கருத்து.

**விளக்கம் –** துரியோதனனின் சபையில், துச்சாதனன் த்ரௌபதியின் ஆடைகளைக் களைய முற்பட்டான். அப்போது த்ரௌபதி, வஸிஷ்ட முனிவர் தன்னிடம் முன்பு ஒரு கால கட்டத்தில் – மஹத்யாதிபதி ஸம்ப்ராப்தே ஸமர்த்தவ்யோ பகவாந் ஹரி: – மிக பெரிய ஆபத்து வரும்போது ஸ்ரீஹரியை நினைக்க வேண்டும் – என்று கூறியது நினைவுக்கு வந்தது. உடனே அவள் – சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுதா கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் – சங்கு சக்ரம் ஏந்தியவனே, அடியார்களை நழுவ விடாத கோவிந்தனே, துவாரகை வாசனே, தாமரை போன்ற கண்கள் கொண்டவனே, உன்னிடம் சரணம் புகுந்த என்னைக் காக்கவேண்டும் – என்றாள். அந்த நேரத்தில் க்ருஷ்ணன் வெகுதூரத்தில் இருந்தான். இதனைக் கண்ணன் – கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம் – த்ரௌபதி என்னைக் கோவிந்தா என்று அழைத்தபோது நான் வெகு தூரத்தில் இருந்தேன் – என்று கூறினான். ஆக கோவிந்த நாமத்தால் கூறப்படும் கண்ணன் வெகு தூரத்தில் இருந்தபோதும், அந்தத் திருநாமமே அவளுக்கு வஸ்திரத்தை அளித்தது. நாராயண என்ற சப்தத்தில் உள்ள பல உட்பொருள்களில் சிலவற்றை மட்டுமே உணர்த்தவல்ல கோவிந்தன் என்ற திருநாமத்திற்கே இந்தனை மேன்மை இருந்தால், நாராயணன் என்ற திருநாமத்திற்கு எத்தனை மேன்மை இருக்கும் என்று கருத்து.

## 17. சொல்லும் க்ரமம ஒழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது.

**அவதாரிகை –** இன்னம் ஒரு ப்ரகாரத்தாலே இதன் வைபவத்தை அருளிச் செய்கிறார் – சொல்லும் க்ரமம் ஒழியச் சொன்னாலும் – என்று தொடங்கி.

**விளக்கம்** – இந்த மந்திரத்தின் மேன்மையை மேலும் ஒரு வழி மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஏதேனும் ஒரு மந்த்ரமும் தன்னைத் தஞ்சமாக விச்வசித்துச் சொன்னவர்களுக்கொழியத் தன் கார்யம் செய்யாதேயாகிலும், இது அங்ஙனன்றிக்கே தன்னைத் தஞ்சமாக விச்வசித்துச் சொல்லுகையாகிற க்ரமம் ஒழிய, ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யஞ்ச ஸ்தோபம் ஹேளநமேவ வா என்கிறபடியே சொல்லிலும், சொன்னவர்களுக்கு ரக்ஷகமாகையாகிற தன் ஸ்வரூபத்தில் நழுவ நில்லாதென்கை.

**விளக்கம்** – எந்த ஒரு மந்த்ரமும் அதனையே (அந்த மந்த்ரத்தையே) தஞ்சம் என்று முழுவதுமாக நம்பி உச்சரித்தால் மட்டுமே பயன் அளிக்கும். ஆனால் திருமந்த்ரம் அப்படிப்பட்டது அல்ல. இதில் முழு நம்பிக்கை வைத்து உச்சரிக்காமலும், இதனையே தஞ்சமென்று எண்ணியபடி கூறாமலும், ஸ்ரீமத்பாகவதம் (6–3–14) கூறுவதுபோல் – ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் ச் ஸ்தோபம் ஹேளநமேவ வா – மற்றவர்களின் பெயர் போன்று நாராயண நாமத்தை உச்சரித்தாலும் (அஜாமிளன் போன்று) பரிகாசம் செய்வதற்காக உச்சரித்தாலும் (சிசுபாலன் போன்று), பொருள் ஏதும் இன்று உச்சரித்தாலும் ஏளனம் செய்வதற்காக உச்சரித்தாலும் இது அனைத்து பாவத்தையும் நீக்கும் – எப்படிக் கூறினாலும், தன்னை உச்சரிப்பவர்களைக் காப்பாற்றும் தன்மைகளிலிருந்து இந்த மந்த்ரம் நழுவுவதில்லை.

## 18. இதுதான் குலத்தரும் என்கிறபடியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.

**அவதாரிகை** – இனி இதன் ஸர்வாபேக்ஷிதப்ரதத்வமாகிற வைபவத்தை அருளிச்செய்கிறார் இதுதான் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து, இது அனைத்து பயன்களையும் அளிக்கவல்லது என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இம்மந்த்ரந்தான் குலந்தரும் என்று தொடங்கி ஆழ்வார் அருளிச்செய்தபடியே, அதிகாரானுகுணமான அபேக்ஷிதங்களையெல்லாம் கொடுக்குமென்கை.

விளக்கம் – இந்தத் திருமந்த்ரமானது, திருமங்கையாழ்வார் (1–1–9) கூறுவது போல் – குலம் தரும் – என்னும்படி அவரவர்களின் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற அனைத்தையும் அளிக்கும்.

## 19. ஐஸ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்.

**அவதாரிகை** – அத்தை விசதீகரிக்கிறார் ஐச்வர்ய இத்யாதியாலே.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறியதை மேலும் விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஐஹலௌகிகமைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி என்கிறபடியே ஐஹிகமாயும் பாரலௌகிகமாயுமிருக்கும் ஐச்வர்யத்தையும், ஆத்மப்ராப்தி ரூபமான கைவல்யத்தையும், பரம புருஷார்த்தமான பகவல் லாபத்தையும் ஆசைப்பட்ட அதிகாரிகளுக்கு ஜப ஹோமாதிகளாலே ஸ்வயம் ஸாதனமாய் நின்று, அவ்வோ புருஷார்த்தங்களைக் கொடுக்குமென்கை.

**விளக்கம்** – ஸ்ம்ருதி – ஐஹலௌகிகமைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி – இந்த உலகத்தில் உள்ள செல்வம், ஸ்வர்க்கம் முதலான அந்த உலகத்துச் செல்வம், ஆத்ம அனுபவம் எனப்படும் கைவல்யம், பகவத் அனுபவம் ஆகியவற்றைன் இம்மந்த்ரம் அளிக்கும் – என்று கூறுவது போன்று, இந்த மந்த்ரமானது இந்த உலகில் உள்ள செல்வங்கள், அந்த உலகில் உள்ள செல்வங்கள், ஆத்மாவை அனுபவிக்கும் கைவல்யம், மிக உயர்ந்த புருஷார்த்தமான பகவத் அனுபவம், ஆகியவற்றை அளிக்கிறது. இவற்றை விரும்பும் அதிகாரிகளுக்கு ஜபம், ஹோமம் முதலான உபாயங்களாகத் திருமந்த்ரமானது தானாகவே நின்று, அந்தப் புருஷார்த்தங்களை அளித்து விடுகிறது.

## 20. கர்மஜ்ஞானபக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக் கட்டிக்கொடுக்கும்.

**அவதாரிகை** – இனி, கர்மாயுத்பாய ஸஹகாரித்வரூபமான இதன் வைபவத்தை அருளிச் செய்கிறார் கர்மஜ்ஞான இத்யாதியாலே.

**விளக்கம்** – கர்மயோகம் முதலானவற்றில் ஏற்படும் தடையை நீக்கி அவற்றை அளிக்கவல்லது என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கர்மயோகத்தில் இழிந்தவர்களுக்கு ஜபஹோமாதிகளாலே தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், கர்மயோகாரம்ப விரோதியான பாபத்தைப் போக்கி, அந்தக் கர்மத்தினுடைய அவிச்சேதாபாதகமாய்க் கொண்டு அத்தைக் தலைக்கட்டிக் கொடுக்கும். ப்ரதமத்திலே, ஞானயோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில் கர்மஸாத்யமான ஜ்ஞாநாரம்ப விரோதி பாபநிவ்ருத்தியைப் பண்ணி அந்த ஜ்ஞானத்துக்கு நாடோறும் அதிசயத்தைப் பண்ணா நின்றுகொண்டு, அத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கும். பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், பக்தியோகாரம்ப விரோதியான பாபத்தைப் போக்கி, பக்தி வ்ருத்தி ஹேதுவாய்க்கொண்டு அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்குமென்கை.

**விளக்கம்** – கர்ம யோகத்தில் ஈடுபடும் அதிகாரிகள் ஜபம் முதலானவற்றின் மூலம் இந்த மந்த்ரத்தைத் துணையாகக் கொள்ளும் போது, அத்தகைய யோகம் தொடங்குவதற்குத்

தடையாக உள்ள பாவங்களை, இந்தத் திருமந்த்ரம் நீக்கி விடுகிறது. மேலும் கர்மயோகத்தை மேம்படுத்தி, அதனைச் சுலபமாக முடிக்கவும் செய்கிறது. ஞானயோகத்தில் ஈடுபடுபவர்கள் திருமந்த்ரத்தைத் துணையாக கொண்டால், அவர்களுக்குக் கர்மயோகம் மூலம் ஏற்படும் ஞானயோகத்திற்கு உண்டாகக் கூடிய தடைகளான பாவங்களை நீக்குகிறது. மேலும், அவர்களுக்கு ஞானயோகம் வளரும்படிச் செய்து, அதனைப் பூர்த்தி செய்கிறது. பக்தியோகத்தில் ஈடுபடுபவர்கள் திருமந்த்ரத்தைத் துணையாக கொண்டால், அவர்களுக்குப் பக்தியோகம் தொடங்குவதற்கு உள்ள தடைகளான பாவங்களை நீக்குகிறது. மேலும், அவர்களுக்குப் பக்தியோகம் வளரும்படிச் செய்து, அதனைப் பூர்த்தி செய்கிறது.

## 21. ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞாநத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.

**அவதாரிகை** – இங்ஙனன்றிக்கே, ப்ரபந்நர்க்கு இது செய்யும் உபகார வைபவத்தை அருளிச்செய்கிறார் ப்ரபத்தியிலே என்று தொடங்கி.

**விளக்கம்** – பகவானை மட்டுமே ப்ராப்யமாகக் கொண்ட ப்ரபந்நர்களுக்கு இந்த மந்த்ரம் செய்யும் நன்மைகளைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச்சொன்னவைபோலே துச்சகமுமாய், ஸ்வரூப விருத்தமுமாய் இருக்கையன்றிக்கே, ஸுசகமுமாய், ஸ்வரூபானுரூபமான ப்ரபத்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு, தததநுரூபமான பகவத்பாரதந்த்ய ரூப ஸ்வரூப ஜ்ஞானத்தை விசகமாகப் பிறப்பித்து அர்த்தாநுஸந்தாநாதிகளாலே போது போக்குகைக்கும் ஹேதுவாய், எனக்கென்றுன் தேனும்பாலுமமுதுமாய திருமால் திருநாமம் என்கிறபடியே ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம் போக்யமாயி ருக்கையாலே, போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்கை.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட கர்ம–ஞான–பக்தி யோகம் போன்று பின்பற்றுவதற்குக் கடினமானதாக இல்லாமலும், ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற தக்கது அல்ல என்று கூறமுடியாமலும் திருமந்த்ரம் உள்ளது. ஜீவன் பகவானுக்கு அடிமையாக உள்ளவன் (பகவத் பாரதந்த்ரியம்) என்ற ஞானத்தை ஜீவனுக்குத் திருமந்திரம் உண்டாக்குகிறது. இந்த மந்த்ரமானது, தன்னைப் பற்றிய பொருளையே ஜீவன் எப்போதும் எண்ணியபடி, பொழுது போக்கும் விதமாக அமைந்துள்ளது. பெரிய திருமொழி (6–10–6) – எனக்கு என்றும் தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமம் – என்பது போன்று, திருமந்த்ரத்தால் கூறப்படும் எம்பெருமானைப் போன்று, இந்த மந்த்ரமும் இனிமையாக உள்ளது. ஆக பகவானை போன்றே இதுவும் அனுபவித்து மகிழக் காரணமாக உள்ளது.

## 22. மற்றெல்லாம் பேசிலும் என்கிறபடியே அறிய வேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு.

**அவதாரிகை** – இனி, ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகத்வமாகிற இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார், மற்றெல்லாம் பேசிலும் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து ஜீவன் உய்வதற்காக அறியப்படவேண்டிய அர்த்தங்களைத் திருமந்த்ரம் கூறுகிறது என்று இதன் பெருமையைத் தெரிவிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நின் திருவெட்டெழுத்துங் கற்று மற்றெல்லாம் பேசிலும் என்கிறபடியே, ஆத்மோஜ்ஜீவநத்துக்கு உடலாக அறிய வேண்டும் அர்த்தவிசேஷங்களெல்லாம் இம்மந்திரத்துக்குள்ளே உண்டென்கை.

**விளக்கம்** – பெரிய திருமொழி (8–10–3) – நின் திரு எட்டெழுத்தும் கற்று மற்றெல்லாம் பேசிலும் – மற்றவற்றைக் கூறுவதை விட உன்னை பற்றிய திருவஷ்டாக்ஷரத்தைக் கற்றேன் – என்று ஆழ்வார் கூறியபடி, ஜீவன் கரையேறுவதற்கு அறிந்து கொள்ளவேண்டிய அனைத்து அர்த்தங்களும் திருமந்த்ரத்தில் உண்டு.

## 23. அதாவது – அஞ்சர்த்தம்.

**அவதாரிகை** – அறியவேண்டும் அர்த்தமெல்லாம் ஆகிறது எது? என்னும் ஆகாங்க்ஷயிலே அருளிச்செய்கிறார் அதாவது அஞ்சர்த்தம் என்று.

**விளக்கம்** – அறிய வேண்டிய அர்த்தங்கள் என்று எதனைக் கூறினார் என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதி ஸ்வரூபங்களாகிற அர்த்த பஞ்சகமும் என்றபடி. ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததாப்ராப்தி விரோதி ச வதந்தி ஸகலாவேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: முநயச்ச மஹாத்மானோ வேதவேதார்த்தவேதிந: என்கிறபடியே, ஸகல வேதசாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது இவ்வர்த்தபஞ்சகத்தையுமாகையாலே, தத்ஸங்க்ரஹமான இம்மந்த்ரத்துக்கும் ப்ரதிபாத்யம் இதுவேயிறே. இம்மந்த்ரந்தான் ப்ராணவத்தாலே ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோத்யுபாய ஸ்வரூபங்களையும், நாராயண பதத்தாலே பரஸ்வரூபத்தையும், அதில் சதுர்த்தியாலே பலஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கக் கடவதாயிறே இருப்பது.

**விளக்கம்** – ஜீவனின் ஸ்வரூபம், ஜீவன் அடையக் கூடிய பரமாத்மாவின் ஸ்வரூபம், பரமாத்மாவை அடைந்து பெறக் கூடிய புருஷார்த்தத்தின் ஸ்வரூபம், அந்தப் புருஷார்த்தத்தை பெற உதவும் உபாயத்தின் ஸ்வருபம் மற்றும் அந்த புருஷார்த்தத்தை பெறுவதற்கு ஏற்படும் தடைகளின் ஸ்வருபம் – ஆகியவையே அர்த்த பஞ்சகம் எனப்படும். இதனையே ஹாரித ஸ்ம்ருதி – ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததாப்ராப்தி விரோதி ச வதந்தி ஸகலாவேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: முநயச்ச மஹாத்மானோ வேதவேதார்த்தவேதிந: – அடையப்படவேண்டிய ப்ரஹ்மத்தின் தன்மை, அவனை அடைவதற்கான வழி, அவனை அடைவதம் மூலம் பெறக் கூடிய பலன், அவனை அடைவதற்கு உண்டாகும் தடை ஆகியவற்றை இதிகாசம் மற்றும் புராணங்களுடன் சேர்ந்த வேதங்களும், இத்தகைய வேதம் அறிந்த முனிவர்களும் கூறுகின்றனர் – என்று கூறியது. இந்த வரிகளின்படி

அனைத்து வேதங்களும் கொண்ட சாஸ்த்ரங்களும் அர்த்தபஞ்சகத்தையே நன்கு உரைக்கின்றன என்பது விளங்கும். எனவே இத்தகைய சாஸ்த்ரங்களையும், வேதங்களையும் தனது ஸாரமாகக் கொண்ட திருமந்த்ரமும், அவைகள் கூறும் அர்த்தபஞ்சகத்தையே கூறவேண்டும் அல்லவா? திருமந்த்ரமானது முதல் பதமான ப்ரணவத்தின் (ஓம்) மூலம் ஜீவனின் ஸ்வரூபத்தையும், நம என்ற பதம் மூலம் பகவானை அடையத் தடையாக உள்ளவற்றின் ஸ்வரூபம் மற்றும் அவனை அடைய உள்ள உபாயத்தின் ஸ்வரூபத்தையும், நாராயண என்ற பதத்தின் மூலம் பரம்பொருளின் ஸ்வரூபத்தையும், நாராயணாய என்பதில் உள்ள ஆய என்பதன் மூலம் அடையப்படும் புருஷார்த்தத்தின் ஸ்வரூபத்தையும் கூறுகிறது.

## 24. பூர்வாசார்யர்கள், இதில் அர்த்தம் அறிவதற்கு முன்பு, தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள், இதில் அர்த்தஜ்ஞானம் பிறந்த பின்பு, பிறந்தபின் மறந்திலேன் என்கிறபடியே இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள்.

**அவதாரிகை** – இம்மந்த்ரார்த்த வைபவத்தை அருளிச்செய்கிறார் மேல் பூர்வாசார்யர்கள் என்று தொடங்கி.

**விளக்கம்** – இந்த மந்த்ரத்தின் பொருளுடைய மேன்மையை அடுத்து அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நாதயாமுனயதிவராதிகளான நம் பூர்வாசார்யர்கள், அன்று நான் பிறந்திலேன் என்கிறபடியே இம்மந்த்ரத்தில் அர்த்தமறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள், இதில் அர்த்தஜ்ஞானம் தங்களுக்குண்டான பின்பு, பிறந்தபின் மறந்திலேன் என்று ஆழ்வார் திவ்ய ஸூக்தியில் சொல்லுகிறபடியே இம்மந்த்ரார்த்தத்தையொழிய மற்றொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்களென்கை. வேதசாஸ்த்ரங்கள் ஆழ்வார் அருளிச் செயல்கள் இவற்றால் போதுபோக்கும்போதும் இம்மந்த்ரார்த்தத்தை உட்கொண்டே அனுஸந்திக்கையாலே இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள் என்னத் தட்டில்லை.

**விளக்கம்** – திருசந்தவிருத்தத்தில் (64) – அன்று நான் பிறந்திலேன் – என்று ஆழ்வார் கூறுவது போன்று நம்முடைய பூர்வாசார்யர்களான நாதமுனிகள், யாமுனாசார்யர், யதிராசர் முதலானவர்கள், திருமந்த்ரத்தின் பொருளை அறிவதற்கு முன்பாகத் தாங்கள் பிறக்கவே இல்லை என்று நினைக்கின்றனர். திருசந்தவிருத்தத்தில் (64) – பிறந்த பின் மறந்திலேன் – என்று ஆழ்வார் கூறுவது போன்று, இந்த மந்த்ரத்தின் பொருளைத் தவிர வேறு எதன் மூலமும் தாங்கள் பொழுதைப் போக்க மாட்டனர். வேதங்கள், சாஸ்திரங்கள் மற்றும் ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் ஆகியவற்றின் மூலம் தங்கள் பொழுதைப் போக்கிய போதிலும், இந்தத் திருமந்த்ரத்தின் உட்கருத்தை அவற்றின் வழியே மறைமுகமாக அனுபவிப்பதால், திருமந்த்ரத்தைத் தவிர, வேறு எதன் மூலமும் பொழுதைப் போக்க மாட்டனர் என்று கூறுவது சரியே ஆகும்.

## 25. வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி, ஈச்வரனே உபாயோ பேயமென்று நினைத்திருக்கை.

**அவதாரிகை** – வாசகசக்தி ஸர்வத்தையும் ஸாதித்துக்கொடுக்கவற்றாயிருக்க. இதினுடைய வாச்யத்திலே இவர்களூன்றுகைக்கு ஹேதுவேதென்ன அருளிச்செய்கிறார், வாசகத்திற்காட்டில் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம். இந்த மந்த்ரத்தை உச்சரித்தாலே அனைத்தையும் கிட்டச்செய்துவிடும். அப்படி இருக்க, இந்த மந்த்ரத்தின் மூலம் கூறப்படும் பொருளான ஈச்வரனை ஆசார்யர்கள் அண்டி நிற்கக் காரணம் என்ன? இதற்கான விடையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸர்வபலத்துக்கும் ஸ்வயம் ஸாதநமாயும், ஸாதநாந்தரங்களுக்கும் ஸஹகாரியாய் நின்று தலைக் கட்டிக்கொடுத்தும் போருகிற இதினுடைய வாசகசக்தி தானே அமைந்திருக்கச்செய்தே, அதிலுங்காட்டில் கீழ்ச் சொன்னபடியே, இம்மந்த்ரத்தினுடைய வாச்யத்திலே பூர்வாசார்யர்கள் ஊன்றுகைக்கடி, உபேயாந்தரபரராய், இத்தை ஸாதனமாகக்கொண்டு ஸாதித்தல். உபாயாந்தரபரராய் இத்தை ஸஹகாரியாகக்கொள்ளுதல் செய்யுமவர்களைப் போலன்றிக்கே, உபாயோபேயங்களிரண்டும் ஈச்வரனேயென்று ப்ரதிபத்தி பண்ணியிருக்கையென்றபடி.

**விளக்கம்** – இந்த மந்த்ரமானது அனைத்து பலன்களையும் அளிக்கவல்ல சாதனமாக தானே நின்றும், மற்ற சாதனங்களுக்குத் துணையாக நின்றும் உதவுகிறது. ஆயினும், இந்த மந்த்ரத்தை விட, இந்த மந்த்ரத்தின் மூலம் உணர்த்தப்படும் (பரம்)பொருளிலேயே ஆசார்யர்கள் ஆழ்ந்து நின்றனர். இதன் காரணம் – அனைத்திற்கும் உபாயமாகவும், அந்த உபாயத்தின் மூலம் அடையப்படும் இடமாகவும் (உபேயம்) ஈச்வரனே உள்ளான் என்று உறுதியுடன் இருந்தனர். ஆக மற்ற பலன்களை விரும்புபவர்கள் போன்று அல்லாமலும், திருமந்த்ரத்தை மற்ற பலன்களுக்கு ஒரு சாதனமாகக் கொள்பவர்கள் போன்று அல்லாமலும், திருமந்த்ரத்தைத் துணையாகக் கொண்ட மற்ற சாதனங்களைச் சார்ந்து உள்ளவர்கள் போன்று அல்லாமலும் நம்முடைய ஆசார்யர்கள் விளங்கினர்.

ஆக, திருமந்திரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி என்று தொடங்கி, இவ்வளவும் வாய்வந்தபடி அனுசந்திக்கவொண்ணாதபடியான இதனுடைய கௌரவத்தையும், ஈச்வரன் தானே சிஷ்யனுமாய், ஆசார்யனுமாய் நின்று வெளியிட்டருளுகையால் வந்த ஏற்றத்தையும், ஸகலசாஸ்த்ரங்களிலும், ஸகலமந்த்ரங்களிலும், வாச்யந்தன்னுலுங்காட்டில் இதுக்குண்டான பெருமையையும், அக்ரமமாகச் சொல்லிலும் தன்கார்யம் செய்யும் ஆதிக்யத்தையும், அபேக்ஷித ஸகலபலப்ரதத்வ ரூபமாஹாத்யத்தையும், கர்மாத்யுபாயஸஹகாரித்வரூபமான உத்கர்ஷத்தையும், ஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகதயா வந்த மாஹாத்ம்யத்தையும், ஏதத்ப்ரதிபாத்ய அர்த்தகௌரவ விசேஷத்தையும் அருளிச் செய்கையாலே இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை எல்லோரும் அறியும்படி தர்சிப்பித்தருளினாராயிற்று.

**விளக்கம்** – மூன்றாம் சூர்ணை தொடங்கி, இதுவரை கீழே உள்ள பெருமைகள் கூறப்பட்டன:

- வாய்க்கு வந்தபடி உரைக்க முடியாதவாறு திருமந்த்ரம் மதிப்பு உடையது.
- ஈச்வரன் தானே சிஷ்யனும் ஆசார்யனுமாய் நின்று வெளியிட்ட ஏற்றம் உள்ளது.
- அனைத்து சாஸ்த்ரங்களைக் காட்டிலும், தன்னால் கூறப்படும் எம்பெருமானைக் காட்டிலும் பெருமை உள்ளது.
- சரியான முறையில் கூறாவிட்டாலும், தனது பலனை அளிக்கவல்ல சிறப்புடையது.
- கர்மயோகம் போன்ற உபாயங்களுக்குத் துணையாக நிற்கும் மேன்மை உடையது.
- முமுக்ஷுவால் அறியப்பட வேண்டிய அர்த்தங்கள் அனைத்தையும் அறிய வைக்கும் சிறப்புடையது.
- தன்னால் கூறப்படும் தனித்தன்மை வாய்ந்த அர்த்தத்தை வெளிப்படுத்தும் வல்லமை உடையது.

## 26. இது தன்னில் சொல்லுகிற அர்த்தம் – ஸ்வரூபமும் ஸ்வரூபானுரூபமான ப்ராப்யமும், ஸ்வரூபமும் உபாயமும் பலமுமென்னவுமாம்.

**அவதாரிகை** – இனிமேல், இம்மந்த்ரத்துக்கு வாக்யார்த்தம் இரண்டுபடியாக அருளிச்செய்கிறார், இது தன்னில் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து திருமந்த்ரத்திற்கு இரண்டு விதமாக வாக்கியப் பொருள் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிற அர்த்தம் – இவ்வாத்மாவினுடைய சேஷத்வ பாரதந்த்யங்களாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபானுரூபமாயிருந்துள்ள கைங்கர்யமாகிற ப்ராப்யமும், அன்றிக்கே, சேஷத்வமாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபானுரூபமான உபாயமும், உபாயலப்யமான பலமும் என்று சொல்லவுமாமென்கை. இதில் ப்ரதமயோஜனையில் ப்ரணவ நமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும், நாராயண பதத்தாலே ப்ராப்யமும் சொல்லுகிறது. அநந்தரயோஜனையில், ப்ரணவத்தாலே சேஷத்வமும், நமஸ்ஸாலே உபாயமும், நாராயண பதத்தாலே பலமும் சொல்லுகிறது.

**விளக்கம்** – இந்த மந்த்ரம் உணர்த்தும் பொருள் – ஜீவனின் ஸ்வரூபம் பரமாத்மாவிற்கு அடிபணிந்து உள்ளதையும் (சேஷத்வம்), அவனை முழுவதுமாகச் சார்ந்து உள்ளதையும் (பாரதந்த்ர்யம்), இந்த ஸ்வரூபத்திற்கு ஏற்ற குறிக்கோளான (ப்ராப்யம்) கைங்கர்யம் – என்பவையாகும். அல்லது, திருமந்த்ரம் இவ்விதமாகவும் பொருள் கூறுவதாகக் கொள்ளலாம் – ஜீவனின் ஸ்வரூபம் எம்பெருமானுக்கு அடிமையாக இருந்தல், இத்தகைய ஸ்வரூபத்திற்கு ஏற்ற உபாயம், இந்த உபாயத்தின் மூலம் அடையப்படும் பலன் – என்பதைக் கூறுவதாகவும் கொள்ளலாம். இதில் முதலாவதாகக் கூறப்பட்ட விளக்கத்தில், ப்ரணவத்தின் மூலம் ஜீவனின் சேஷத்வ ஸ்வரூபமும், நம என்பதன் மூலம் ஜீவனின் பாரதந்த்ரிய ஸ்வரூபமும், நாராயண என்ற பதத்தின் மூலம் கைங்கர்யம் என்ற இலக்கும்

(ப்ராப்யம்) கூறப்பட்டது. இரண்டாவதாகக் கூறப்பட்ட விளக்கத்தில், ப்ரணவத்தில் மூலம் ஜீவனின் அடிமைத்தனமும், நம என்பதன் மூலம் உபாயமும், நாராயண என்பதன் மூலம் பலனும் கூறப்பட்டது.

## 27. பலமிருக்கும்படி ப்ரமேயசேகரத்திலும் அர்ச்சிராதிகதியிலும் சொன்னோம்.

**அவதாரிகை** – பலவேஷந்தானிருக்கும்படி எங்ஙனே? என்ன அருளிச்செய்கிறார், பலமிருக்கும்படி என்று தொடங்கி.

**விளக்கம்** – இதன் பலன் எத்தகையது என்று விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வாத்மாவுக்கு ப்ராப்யமான பலந்தான், அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலே போய் பரிபூர்ண பகவதனுபவத்தைப் பண்ணி, அவ்வனுபவ ஜனித ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு பண்ணும் அசேஷசேஷ வ்ருத்தியாகையாலே, அதிருக்கும்படியை ஸங்க்ரஹேண ப்ரமேயசேகரமாகிற ப்ரபந்தத்திலும், விஸ்தரேண அர்ச்சிராதி கதியாகிற ப்ரபந்தத்திலும் விசதமாகச் சொன்னோம், அவற்றிலே கண்டுகொள்வதென்கை.

**விளக்கம்** – ஜீவனின் பலன் என்பது அர்ச்சிராதி மார்க்கமாக பரமபதத்திற்கு சென்று, அங்கு எம்பெருமானைப் பரிபூர்ணமாக அனுபவிப்பதும், அந்த அனுபவம் காரணமாக உண்டாகும் மகிழ்ச்சியால் அவனுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருத்தலும் – என்பதை நாம் (பிள்ளை லோகாசார்யார்) செய்த ப்ரமேயசேகரம் என்னும் நூலில் சுருக்கமாகவும், அர்ச்சிராதி என்னும் நூலில் விவிவாகவும் கூறினோம். அவற்றில் கண்டு கொள்க.

## 28. இதுதான் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும்.

**அவதாரிகை** – இனி இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அக்ஷரஸங்க்யையையும், பதஸங்க்யையையும் அருளிச்செய்கிறார், இதுதான் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து, திருமந்த்ரத்தின் ஒவ்வொரு பதத்திற்கும் விளக்கம் அருளிச்செய்யத் திருவுள்ளம் கொண்டார். முதலாவதாக, திருமந்திரத்தில் எத்தனை எழுத்துக்கள் (அக்ஷரம்) என்பதையும், எத்தனை பதங்கள் என்பதையும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இம்மந்த்ரந்தான் ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரம் சந்தஸா காயத்ரீசேதி, ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பச்சாத் நாராயணாயேத்யுபரிஷ்டாத் என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்குமென்கை. இதனுடைய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுகிறவிடத்திலே, ஓமித்யேகாக்ஷரம் என்று ப்ரணவத்தை ஓரக்ஷரமாகவும், நம இதி த்வே அக்ஷரே என்று நமஸ்ஸை இரண்டக்ஷரமாகவும், நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி என்று நாராயண பதத்தை அஞ்சக்ஷரமாகவும் ச்ருதி சொல்லுகையாலே, ஸமஸ்தபதமான நாராயண பதத்தில் நாரபதத்தைப் பிரித்து ஷடக்ஷரமாக்கி, ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமவர்களுடைய பக்ஷம் அவைதிகமாகையாலே அநாதரணீயமாகக்கடவது.

**விளக்கம் –** இந்த மந்த்ரம் கீழே உள்ள வரிகளின்படி எட்டு எழுத்துக்கள் உடையதாக இருக்கிறது, மூன்று பதங்கள் கொண்டதாக இருக்கிறது:

- மஹா நாராயண உபநிஷத் – ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரம் சந்தஸா காயத்ரீசேதி – ஓம் என்பது ஓர் எழுத்து, நம: என்பது இரண்டு எழுத்து, நாராயணாய என்பது ஐந்து எழுத்து. ஆக இந்த மந்த்ரம் எட்டு எழுத்து உடையதாக, காயத்ரீ சந்தஸில் அமைந்தது.

- மஹா நாராயண உபநிஷத் – ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பச்சாத் நாராயணாயேத்யுபரிஷ்டாத் – முதலில் ஓம் என்று சொல்ல வேண்டும், அடுத்து நம: என்று சொல்ல வேண்டும், தொடர்ந்து நாராயணாய என்று கூற வேண்டும்.

இந்த மந்த்ரம் எட்டு எழுத்து கொண்டது என்று கூறும்போது, ஓம் என்ற ப்ரணவத்தை ஓர் எழுத்தாகவும், நம என்பதை இரண்டு எழுத்தாகவும், நாரயணாய என்பதை ஐந்து எழுத்தாகவும் ச்ருதி கூறியது. ஆனால், ஒரு சிலர், பரிபூர்ணமாக உள்ள நாராயண என்ற பதத்தை நார + அயன என்று பிரித்து, நாராயணாய என்பது ஆறு எழுத்து கொண்டது என்று கொள்கின்றனர். இவர்கள், இவ்விதமாகக் கொள்ளும்போது, ஓம் என்ற ப்ரணவத்தை நீக்கிவிடுகின்றனர். இந்தக் கருத்து, வேதங்களுடன் முரண்படுவதால் ஏற்பதற்கில்லை.

## 29. மூன்று பதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.

**அவதாரிகை –** இதில் பதத்ரயமும் எவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது? என்னும் ஆகாங்க்ஷையிலே, மூன்று பதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லுகிறது என்கிறார்.

**விளக்கம் –** இந்த மந்த்ரத்தில் உள்ள மூன்று பதங்களும் எத்தனை பொருள்களை (அர்த்தங்களை) உணர்த்துகின்றன என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார். அவை மூன்றும் தனித்தனியாக, மூன்று அர்த்தங்களைக் கூறுகின்றன என்றார்.

## 30. அதாவது – சேஷத்வமும், பாரதந்த்யமும், கைங்கர்யமும்.

**அவதாரிகை** – அவ்வர்த்தங்கள் தம்மை விசதமாக அருளிச்செய்கிறார். அதாவது – சேஷத்வமும், பாரதந்த்யமும், கைங்கர்யமும் என்று.

**வ்யாக்யானம்** – ஸ்வரூபமும் ஸ்வரூபானுரூபமான ப்ராப்யமும் என்று முதற்சொன்ன வாக்யார்த்தம் இத்தை நினைத்திறே.

**விளக்கம்** – இந்த மந்த்ரத்தின் பொருளானது, ஜீவன் எம்பெருமானுக்கு வசப்பட்டவனாக உள்ளதையும் (சேஷத்வம்), அவனை முழுவதுமாகச் சார்ந்து உள்ளதையும், இவை மூலம் கிட்டும் கைங்கர்யமும் ஆகும். இதனை நாம் 26–ஆம் சூர்ணையில் கண்டோம்.

## 31. இதில் முதற்பதம் ப்ரணவம்.

**அவதாரிகை** – இப்பதத்ரயத்திலும் ப்ரதமபதந்தான் எது? என்ன, இதில் முதல் பதம் ப்ரணவம் என்கிறார்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தில் உள்ள மூன்று பதங்களில், முதல் பதம் எது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ஓமித்யக்ரே வ்யாஹரேத் என்றிறே ச்ருதி சொல்லிற்று. ஸ்ம்ருதியும் ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம் மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம் என்றதிறே.

**விளக்கம்** – ச்ருதியான மஹா நாராயண உபநிஷத் – ஓம் இதி அக்ரே வ்யாஹரேத் – ஓம் என்பதை முதலில் கூறவேண்டும் – என்று கூறியது. ஸ்ம்ருதியில் – ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம் மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம் – ஓம் என்பதை முதலிலும், நம: என்பதை நடுவிலும், நாராயண என்பதை இறுதியிலும் கொள்ளவேண்டும், இப்படியாக உள்ள எட்டு எழுத்து மந்த்ரம், மனிதர்களுக்கு அனைத்தையும் அளிக்கவல்லது – என்று கூற்யது.

## 32. இது அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்று திருவக்ஷரம்.

**அவதாரிகை** – இனி ப்ரணவத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக இதனுடைய அக்ஷரத்ரயாத்மகதையை அருளிச்செய்கிறார், இது அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்று திருவக்ஷரம் என்று.

**விளக்கம்** – அடுத்து ப்ரணவத்தின் பொருளை அருளிச்செய்ய திருவுள்ளம் கொண்டார். அதற்கு முதலில், ப்ரணவம் மூன்று எழுத்துக்களை உள்ளடக்கியது, என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – இப்ரணவந்தான், அஸம்ஹிதாகாரத்தாலே மூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய். மூன்றர்த்த ப்ரகாசகமாய், ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்தப்ரகாசகமாயிறே இருப்பது.

**விளக்கம்** – இந்தப் ப்ரணவம் பிரிக்கப்படும்போது மூன்று எழுத்துக்களும், மூன்று பதங்களும், மூன்று பொருள்களும் வெளிப்படுகின்றன. சேர்த்துப் படிக்கும்போது ஓர் எழுத்தாக உள்ளது.

## 33. மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினாற்போலே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது.

**அவதாரிகை** – இந்த அக்ஷரத்ரயத்தினுடையவும் உத்பத்திக்ரமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார், மூன்று தாழியிலே என்று தொடங்கி.

**விளக்கம்** – ப்ரணவத்தில் உள்ள மூன்று எழுத்துக்கள் உண்டான விதத்தை, ஓர் உதாரணம் மூலம் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – பூரிதி ருக்வேதாதஜாயத புவ இதி யஜுர்வேதாத் ஸுவரிதி ஸாமவேதாத் தாநி ஸுக்ராண்யப்யதபத் தேப்யோ அபிதப்தேப்யஸ் த்ரயோ வர்ணா அஜாயந்த அகார உகார மகார இதி தாநேகதா ஸமபரத்ததேததோமிதி என்றும், அகாரஞ் சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி: வேத த்ரயாந் நிரப்ருஹத் பூர்புவஸ் ஸ்வரிதீதி ச என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லுகிறபடியே ருக்யஜுஸ்ஸாமரூபமான வேதத்ரயத்தில் நின்றும், பூ: புவ: ஸுவ: என்கிற வ்யாஹ்ருதித்ரயத்தையும் தோற்றுவித்து அந்த வ்யாஹ்ருதி த்ரயத்தையும் பொன்னோட வைக்குமாபோலே தன் ஸங்கல்பத்தாலே ஓட வைத்து, அவற்றில் நின்றும் அகார உகார மகாரங்களாகிற அக்ஷரங்கள் மூன்றும், அடைவே தோன்றும்படி பண்ணி, இப்படி ஸர்வேச்வரன் ஸமுத்தரித்தபடியைத் திருவுள்ளம்பற்றி பாத்ரத்ரயகதமான தயிரைத் தனித்தனியே கடைந்து, தத்ஸாரமான வெண்ணெயை வாங்கித் திரட்டினாற்போலே (மூன்று வேதத்திலும் மூன்றக்ஷரத்தையும் எடுத்தது) என்கிறார்.

**விளக்கம் –**

- அதர்வவேதம் – பூரிதி ருக்வேதாதஜாயத புவ இதி யஜுர்வேதாத் ஸுவரிதி ஸாமவேதாத் தானி ஸுக்ராண்யப்யதபத் தேப்யோ அபிதப்தேப்யஸ் த்ரயோ வர்ணா அஜாயந்த அகார உகார மகார இதி தாநேகதா ஸமபரத்ததேததோமிதி – பூ: என்பது ருக் வேதத்தில் இருந்து வந்தது, புவ: என்பது யஜுர் வேதத்தில் இருந்து வந்தது, ஸுவ: என்பது ஸாமவேதத்தில் இருந்து வந்தது. இப்படியாக வந்த தூய்மையான இவற்றை உருக்கியபோது, மூன்று எழுத்துக்கள் தோன்றின. அவை – அ, உ, ம – என்பதாகும். இவை ஒன்று சேர்க்கப்பட்டபோது, ஓம் என்பது உண்டானது.

- மனு ஸ்ம்ருதி – அகாரஞ் சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி: வேத த்ரயாந் நிரப்ருஹத் பூர்புவஸ் ஸ்வரிதீதி ச – மூன்று வேதங்களில் இருந்து ப்ரஜாபதியானவன், அ–உ–ம என்பதையும், பூ:–புவ:–ஸுவ: என்பதையும் எடுத்தான்.

இப்படியாக ஸ்ம்ருதி, ச்ருதி வரிகளில் கூறப்பட்டபடி ப்ரஜாபதி, பூ:–புவ:–ஸுவ: என்ற மூன்று பதங்களை எடுத்தான். தங்கத்தைத் தூய்மைப்படுத்த, அதனை உருக்குவது போன்று, இந்த மூன்று எழுத்துக்களையும் தனது ஸங்கல்பத்தால் உருக்கினான். அவற்றில் இருந்து, அ–உ–ம என்ற எழுத்துக்கள் தோன்றும்படிச் செய்தான். இப்படியாக ஸர்வேச்வரன் மூன்று வேதங்களையும் கடைந்து, முன்று எழுத்துக்களை எடுத்ததை விவரிக்க பிள்ளை லோகாசாரியார் திருவுள்ளம் கொண்டார். ஆகவே அவர், பானைகளில் உள்ள தயிரைத் தனித்தனியே கடைந்து, அவற்றில் இருந்து எடுக்கப்பட்ட வெண்ணையை ஒன்றாக வைப்பது போன்று என அருளிச்செய்தார்.

## 34. ஆகையால் இது ஸகலவேத ஸாரம்.

**அவதாரிகை** – இத்தால் பலித்தத்தை அருளிச்செய்கிறார், ஆகையால் இது ஸகல வேதஸாரம் என்று.

**விளக்கம்** – கடந்த சூர்ணையின் மூலம் கிட்டும் பொருளை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அக்ஷரத்ரயமும் ஓரோ வேதத்தினுடைய ஸாரமாக ஸமுத்த்ருதமாகையாலே இவ்வக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவம் ஸகலவேத ஸாரம் – என்றபடி. ஆக – இது தன்னிற்சொல்லுகிற அர்த்தம் – என்று தொடங்கி இவ்வளவும் – இம்மந்த்ரத்தினுடைய வாக்யார்த்தத்தையும், அக்ஷர ஸங்க்யையையும், பதஸங்க்யையையும், பதத்ரயமும், அர்த்தத்ரய ப்ரதிபாதகமென்னுமத்தையும், அதில் ப்ரதமபதம் இன்னதென்னுமத்தையும், அதுதான் அக்ஷரத்ரயாத்மகமாய் இருக்குமென்னுமத்தையும், அவ்வக்ஷரத்ரயமும் வேதத்ரயஸாரமாக உத்பந்நமாகையாலே தத் ஸமுதாயமான ப்ரணவம் ஸகலவேதஸாரமென்னுமத்தையும் அருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம்** – இந்த மூன்று எழுத்துக்களும், மூன்று வேதங்களின் ஸாரமாக வந்த மூன்று பதங்களிலிருந்து எடுக்கப்பட்டது. ஆகவே, இந்த மூன்று எழுத்துக்களும் சேர்ந்த ப்ரணவமானது, அனைத்து வேதங்களின் ஸாரமாக உள்ளது எனலாம். ஆக – இது தன்னில் சொல்லுகிற அர்த்தம் – என்னும் 26–ஆம் சூர்ணை தொடங்கி, இதுவரை, பின்வரும் விஷயங்கள் கூறப்பட்டன:

- திருமந்த்ரத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை.
- திருமந்த்ரத்தில் உள்ள பதங்களின் எண்ணிக்கை.
- மூன்று பதங்களும், மூன்று பொருளை உணர்த்துகின்றன.
- முதல் பதம் எது?
- முதல் பதம் மூன்று எழுத்துக்கள் கொண்டது.
- முதல் பதத்தில் உள்ள மூன்று எழுத்துக்களும், மூன்று வேதங்களின் ஸாரமாக உள்ளதால், அந்த எழுத்துக்கள் சேர்ந்த ப்ரணவம் என்பது அனைத்து வேதங்களின் ஸாரம் எனப்பட்டது.

**35. இதில் அகாரம் ஸகலசப்தத்துக்கும் காரணமாய் நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே, ஸகலஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது.**

**அவதாரிகை** – இனி இவ்வக்ஷரத்ரயத்துக்கும் அடைவே அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி ப்ரதமம் அகாரார்த்தத்தை அருளிச்செய்கிறார், இதில் அகாரம் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து ஓம் என்பதில் உள்ள மூன்று எழுத்துக்களுக்கும் தனித்தனியாக விளக்கம் அருளிச்செய்ய திருவுள்ளம் கொண்டார். முதலாவது எழுத்தான அ என்பதன் விளக்கம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வக்ஷரத்ரயத்திலும் வைத்துக்கொண்டு ப்ரதமாக்ஷரமான அகாரம், நாமரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்ச ப்ரபஞ்சநம் வேத சப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாஞ் சகார ச: என்கிறபடியே லௌகிக ஸகலசப்தங்களுக்கும் வேதம் காரணமாய், ப்ரணவாத்யாஸததா வேதா: ஓங்காரப்ரபவா வேதா: இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே அந்த வேதங்களுக்கும் ப்ரணவம் காரணமாய், தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய என்கிறபடியே அந்த ப்ரணவந்தனக்குத் தான் காரணமாயிருக்கையாலே அகாரோ வை ஸர்வா வாக், ஸமஸ்தசப்தமூலத்வாத காரஸ்ய ஸ்வபாவத: என்கிறபடியே ஸகலசப்தத்துக்குங்காரனமாய் ஸர்வேச்வரன் ஸமஸ்த வஸ்துசரீரதயா ஸர்வரக்ஷகனாயிருக்கும்படியை ப்ரதிபாதிக்கிற நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யே ந ஜாதாநி ஜீவந்தி, ஸ ஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்ககர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எல்லா ஜகத்துக்கும் காரணமாய் எல்லார்க்கும் ரக்ஷகனாயிருக்கும் எம்பெருமானைச் சொல்லுகிறது என்கை. இத்தால், இவக்ஷரத்தில் ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும் சொல்லிற்றாயிற்று. இவ்வகாரத்துக்கு நாராயண பத ஸங்க்ரஹதயாரக்ஷகவாசித்வம் சொல்லும்போதும், தாதுஸித்தவேஷைத்தை அவலம்பித்தே சொல்லவேணுமிறே.

**விளக்கம்** – முதல் எழுத்தான அ என்பதே அனைத்துச் சொற்களுக்கும் காரணமாக உள்ளது. எப்படி எனக் காண்போம். கீழே உள்ள பல வரிகளைக் காண்க:

- விஷ்ணு புராணம் (1–5–65) – நாமரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்ச ப்ரபஞ்சநம் வேத சப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாஞ் சகார ச: – ஸ்ருஷ்டியின் போது அனைத்து உயிரினங்களுக்கும் நாம ரூபங்களையும், அவற்றுக்கான தொழில்களையும் வேதத்தின் சப்தத்தைக் கொண்டே ப்ரஜாபதி படைத்தான் – என்பதன் மூலம் உலகில் உள்ள அனைத்து சொற்களுக்கும் வேதங்களே காரணமாக உள்ளன என்று அறியலாம்.
- லக்வத்ரி ஸ்ம்ருதி (1–9) – ப்ராணவாத்யாஸததா வேதா: – அனைத்து வேதங்களும் ப்ரணவத்தில் இருந்தே தொடங்குகின்றன.
- விஷ்ணு தர்மம் (67–6) – ஓங்காரப்ரபாவா வேதா: – அனைத்து வேதங்களும் ஓம் என்பதிலிருந்தே தோன்றின – என்பதன் மூலம் அனைத்து வேதங்களுக்கும் ப்ரணவமே காரணமாக உள்ளது என்று அறியலாம்.
- தைத்திரீய நாராயணவல்லி (10–24) – தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய – தனது காரணமான அகாரத்தில் அடங்கிய – என்பதன் மூலம் ப்ரணவத்திற்குக் காரணமாக அகாரம் உள்ளது என்று அறியலாம்.
- கருட புராணம் – அகாரோ வை ஸர்வா வாக் – அனைத்து சொற்களும் அகாரம் என்பதே ஆகும்.
- வாமன புராணம் – ஸமஸ்த சப்த மூலத்வாத் – அனைத்து சொற்களுக்கும் இயல்பாகவே, அ என்பதே காரணமாக உள்ளது.

ஆகவே அ என்னும் எழுத்து, அனைத்துச் சொற்களுக்கும் காரணமாக உள்ளது என்பதும், அனைத்துப் பொருள்களையும் தனது சரீரமாகக் கொண்டு, அவற்றைக் காத்து நிற்கும் ஸர்வேச்வரனைக் குறிக்கவல்ல நாராயண என்ற பதத்தையும் அ என்பதே குறிக்கும் என்பதும் உணர வேண்டும். கீழே உள்ள இரண்டு வரிகள் மூலம் அனைத்து உலகிற்கும் காரணமானவனும் அனைத்து உலகையும் காப்பாற்றுபவனாகவும் உள்ளவன் நாராயணனே என்று அறியலாம்.

- தைத்திரீய உபநிஷத் (1–1) – யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி – எந்த ஒன்றிடம் இருந்து இவை அனைத்தும் தோன்றினவோ, எந்த ஒன்றின் மூலம் இவை வாழ்கின்றனவோ.

- விஷ்ணு புராணம் (1–2–70) – ஸ ஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்க கர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச – அவனே ஸ்ருஷ்டிக்கிறான், அவனே காக்கிறான், அவனே ப்ரளயத்தில் உண்கிறான். அவனே தன்னைக் காத்துக் கொள்கிறான்.

ஆக அ என்னும் எழுத்தானது, அனைத்து உலகிற்கும் காரணமாக உள்ளவன் (காரணத்வம்), அனைத்தையும் காப்பவன் (ரக்ஷகத்வம்) எம்பெருமானே என்று உணர்த்தப்பட்டது.

## 36. ரக்ஷிக்கையாவது – விரோதியைப் போக்குகையும் அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும்.

**அவதாரிகை** – ரக்ஷிக்கையாவதுதான் எது என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் ரக்ஷிக்கையாவது என்று தொடங்கி.

**விளக்கம்** – காப்பாற்றுதல் (ரக்ஷகம்) என்றால் என்ன என்னும் சந்தேகம் எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ரக்ஷகத்வந்தான் அநிஷ்ட நிவர்த்தகத்வ இஷ்ட ப்ராபகத்வரூபேண த்விவிதமாகையாலே, ஈச்வரன் சேதநரை ரக்ஷிக்கையாவது அவர்களுக்கு துக்காவஹமான விரோதியைப் போக்குகையும் ஸுகாவஹமான அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும் என்கை.

**விளக்கம்** – காப்பாற்றுதல் என்பது நமக்கு விருப்பம் அல்லாதவைகளை நீக்குதலும், விரும்புவதை அளித்தலும் ஆகும். ஸர்வேச்வரன் ஜீவன்களை ரக்ஷித்தல் என்பது – அவர்களுக்குத் துன்பத்தை அளிக்கும் விரோதிகளை நீக்குதலும், இன்பத்தை அளிப்பவற்றைக் கொடுத்தலும் ஆகும்.

## 37. இவையிரண்டும் சேதனர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்

**அவதாரிகை** – இவர்களுக்கு இவன் போக்கும் விரோதி எது? கொடுக்கும் அபேக்ஷிதம் எது? என்ன, அருளிச்செய்கிறார் – இவை இரண்டும் சேதனர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும் என்று.

**விளக்கம்** – அடுத்து ஒரு கேள்வி எழலாம். எம்பெருமான் போக்குகின்ற விரோதி எவை? அவன் விரும்பி அளிப்பவை எவை? இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – சேதனர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும் என்றது – தத்தததிகாரனுகுணமகயிருக்கும் – என்றபடி.

**விளக்கம்** – இந்தக் கேள்விக்கான பதில் – அவரவர்களின் தகுதியையும் விருப்பத்தையும் பொருத்தது என்பதாகும்.

**38. ஸம்ஸாரிகளுக்கு விரோதி சத்ருபீடாதிகள், அபேக்ஷிதம் அந்நபாநாதிகள், முமுக்ஷுக்களுக்கு விரோதி ஸம்ஸார ஸம்பந்தம், அபேக்ஷிதம் பரமபத ப்ராப்தி, முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி கைங்கர்ய ஹாநி, அபேக்ஷிதம் கைங்கர்ய வ்ருத்தி.**

**அவதாரிகை –** இது தன்னை வ்யக்தமாக அருளிச்செய்கிறார் மேல் ஸம்ஸாரிகளுக்கு இத்யாதி.

**விளக்கம் –** மேலே கூறியதைத் தெளிவாக விளக்குகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது தேஹாத்மாபிமாநாதிகளும் சப்தாதி விஷயானுபவமுமே யாத்ரையாயிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு நிவர்த்யமான விரோதி சத்ருக்களால் வரும் நலிவு தொடக்கமானவை, ப்ராப்யமான அபேக்ஷிதம் சோறு தண்ணீர் முதலானவை என்கை. சத்ருபீடாதிகள் என்றவிடத்தில் ஆதி சப்தத்தாலே ஆதிவ்யாதி முதலானவற்றால் வரும் பீடைகளைச் சொல்லுகிறது. அந்நபாநாதிகள் என்கிறவிடத்தில் ஆதி சப்தத்தாலே ஸ்ரக்வஸ்த்ர ஆபரண அங்கராக அங்கநாலிங்கநாதிகளைச் சொல்லுகிறது.

முமுக்ஷுக்களுக்கு இத்யாதி. அதாவது, ஸம்ஸாரத்தில் அடிக்கொதித்துப் பரமபதத்திலே போக ஆசைப்பட நிற்கும் முமுக்ஷுக்களுக்கு நிவர்த்யமான விரோதி பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்புமாய்க் கொண்டு இவ்விபூதியிலேயிருக்கையாகிற ஸம்ஸார ஸம்பந்தம், ப்ராப்யமான அபேக்ஷிதம் பகவதநுபவாதிகளுக்கு அனுகூலமான பரமபதத்தை ப்ராபிக்கை என்கை.

முக்தர்க்கும் இத்யாதி. அதாவது, நிவ்ருத்த ஸம்ஸாரராயும், அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராயும், பகவதநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கர்யபரராயுமிருக்கும் முத்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி வகுத்த சேஷியான ஸர்வேச்வரன் திருவடிகளிலே ஸ்வரூபானுரூபமாகப் பண்ணிக்கொண்டு போரும் கைங்கர்யத்துக்கு வரும் விச்சேதம், அபேக்ஷிதம் உத்தரோத்தரம் அடிமை செய்து செல்லுகையாகிற கைங்கர்ய வ்ருத்தி என்கை

ஆக இப்படி அதிகாராநுகுணம் விரோதியைப் போக்கி அபேக்ஷிதத்தைக் கொடுக்கையால் ஈச்வரனே ஸர்வரக்ஷகனென்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம் –** உடலையே ஆத்மா என்று எண்ணுபவர்களுக்கும், உடலுடன் தொடர்பு கொண்ட உலக விஷயங்களிலே பற்று கொண்டவர்களும் ஆகிய ஸம்ஸாரிகளுக்கும் விரோதி என்பது – அவர்களுக்கு அவர்களது எதிரிகளின் மூலம் வரும் துன்பங்களே ஆகும். இவர்களால் விரும்பப்படுவதாக உள்ளது உணவு, தண்ணீர் முதலியன ஆகும். சூர்ணையில் உள்ள சத்ருபீடாதிகள் என்ற பதத்தில் உள்ள ஆதி என்னும் பதம் மூலம் உடல் மற்றும்

மனரீதியாக உண்டாகும் நோய்களைக் கூறினார். இதே போன்று சூர்ணையில் உள்ள அந்நபாநாதிகள் என்ற பதத்தில் உள்ள ஆதி என்னும் பதம் மூலம் உணவு, தண்ணீர், மாலை, ஆடைகள், ஆபரணங்கள், சந்தனம், பெண்களை அணைப்பது ஆகியவற்றைக் கூறினார்.

முமுக்ஷுக்களுக்கு எனத்தொடங்கும் பத்தியில் – இந்த ஸம்ஸாரம் வெறுத்து, பரமபதத்திற்குச் செல்ல விருப்பம் கொண்ட முமுக்ஷுக்களுக்கு விரோதி என்பது – திருவிருத்தம் கூறுவது போல – பொய் நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்கு உடம்பும் – தவறான ஞானம், ஒழுக்கம் இன்மை, அழுக்கான சரீரம் – என்பதாகும். அவர்களால் விரும்பபடுவது பரமபதத்தை அடைந்து எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வது என்பதாகும்.

முக்தர்க்கும் எனத்தொடங்கும் பத்தியில் – முன்பு ஒரு கால கட்டத்தில் ஸம்ஸாரத்தில் இருந்துவிட்டு, அந்தத் தொடர்பு நீங்கப் பெற்ற முக்தர்களுக்கும், ஸம்ஸாரத் தொடர்பு என்பதே இல்லாமல் எப்போதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தபடி உள்ள நித்யசூரிகளுக்கும் விரோதி என்பது – தங்களது சேஷியான(ஸ்வாமியான) எம்பெருமானின் திருவடிகளில் தங்களது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி செய்யும் கைங்கர்யத்திற்கு உண்டாகும் குறைவு எனலாம். அவர்கள் வேண்டி நிற்பது, மேலும் மேலும் வளரக்கூடிய கைங்கர்யம் என்பதே ஆகும். இப்படியாக அவரவர்களின் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்றபடி விரோதிகளை நீக்கி, விருப்பங்களை நிறைவேற்றுபவன் ஸர்வேச்வரன் என்று அறியலாம். இதனால் ஸர்வேச்வரன் அனைவருக்கும் ரக்ஷகனாக உள்ளான் என்று ஆனது.

## 39. ஈச்வரனையொழிந்தவர்கள் ரக்ஷகரல்லர் என்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்.

**அவதாரிகை** – இப்படி ஈச்ரவனேயோ பின்னையெல்லாரையும் ரக்ஷிக்கிறவன். லோகத்திலே மாதாபித்ரு ப்ரப்ருதி தேவதாந்தர பர்யந்தமாக ரக்ஷகராய்ப் போருகிறவர்கள் பலருமில்லையோ? என்ன அருளிச்செய்கிறார் ஈச்வரனை ஒழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம் என்று.

**விளக்கம்** – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம். ஸர்வேச்வரன் அனைவரையும் ரக்ஷிப்பவன் என்று கூறுவது ஏற்க இயலவில்லை. காரணம் – இந்த உலகில் உள்ளவர்களுக்கு அவர்களது தாய், தந்தை, உறவினர்கள் மற்றும் இதர தேவதைகள் காப்பவர்களாக உள்ளனரே. இதற்கு விடை தருகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிருபாதிகபந்துவாய் ஸர்வகாலமும் கைவிடாதே நோக்கிக்கொண்டு போரும் ஸர்வேச்வரனை ஒழிந்த ஔபாதிகபந்துக்களான மாதாபித்ராதிகளும், அர்வாசீநரான தேவதாந்தரங்களும் ரக்ஷகரல்லரென்னுமிடம் ஸஹேதுகமாக ப்ரபந்நபரித்ராணமென்கிற ப்ரபந்தத்திலே சொன்னோம். அதில் கண்டு கொள்வது என்கை.

**விளக்கம்** – நம் அனைவருக்கும் இயற்கையான பந்துவாக, நம்மை எந்தக் காலத்திலும் கைவிடாமல் உள்ளவனாக இருப்பவன் ஸர்வேச்வரனே ஆவான். மற்ற பந்துக்களான தாய், தந்தை மற்றும் இதர தேவதைகள் அவர்களது கர்மம் காரணமாகவே நம்மைக் காக்கிறார்கள் அல்லவா? ஸர்வேச்வரன் போன்று அல்ல. இந்த விஷயத்தை, ப்ரபந்ந பரித்ராணம் என்ற க்ரந்தத்தில் விளக்கினோம். அதில் கண்டு கொள்க.

## 40. ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே, இதிலே ஸ்ரீஸம்பந்தமும் அனுஸந்தேயம்.

**அவதாரிகை** – அநந்தரம் அர்த்தபலத்தாலே இப்பதத்தில் அனுஸந்திக்கப்படும் ஸ்ரீய:பதித்வத்தை அருளிச்செய்கிறார் ரக்ஷிக்கும்போது என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து அகாரத்தின் தாத்பர்யம் காரணமாக அகாரம் மூலம் எம்பெருமான் மஹாலக்ஷ்மியின் நாயகனாகக் கூறப்படுகிறான் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி சகீயதே என்கிறபடியே ரக்ஷகனான ஈஸ்வரன் சேதநரை ரக்ஷிக்கும் தசையில் இவர்களுடைய அபராதங்களைக் கண்டாதல், தன் ஸ்வாதந்தர்யத்தாலேயாதல் உபேக்ஷியாமற்செய்கைக்கும் உறுப்பான க்ருபையை ஜநிப்பிக்கும் புருஷகாரபூதையான பிராட்டி ஸந்நிதி அவச்யாபேக்ஷிதமாகையாலே, ரக்ஷகனான அவனைச் சொல்லுகிற இவ்வகாரத்திலே அவனுடைய லக்ஷ்மீ ஸம்பந்தமும் அனுஸந்தேயம் எங்கை. லக்ஷ்மி என்னாதே ஸ்ரீ என்றது – ச்ரயத இதி ஸ்ரீ: – என்கிறபடியே அவனை நித்ய ஸேவை பண்ணுகையாலே அவனோடு இவளுக்கு உண்டான அவிநாபாவமும், ஸ்ரீயத இதி ஸ்ரீ: – என்கிறபடியே சேதநருக்கு இவள் நித்ய ஸேவ்யையாயிருக்குமென்னுமதுவும் தோற்றுகைக்காக.

**விளக்கம்** – லக்ஷ்மி தந்திரம் (28–14) – லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி சகீயதே – கருணை என்பதே வடிவமாக உள்ள மஹாலக்ஷ்மியுடன் கூடியவனான ஹ்ருஷீகேசனே அனைத்து ஸித்தாந்தங்களிலும் அனைத்து வேதாந்தங்களிலும் ஸர்வ ரக்ஷகன் என்று கூறப்படுகிறான் – என்றது. எம்பெருமான் ஜீவங்களைக் காப்பாற்றும் சமயத்தில் அவர்களது குற்றங்களைக் கண்டு ஒதுக்கி விடவோ, தனது விருப்பம் காரணமாக அவர்களை ஒதுக்கிவிடவோ வாய்ப்பு உண்டு. இதனைத் தடுத்து, அவனுக்குச் சேதநர்கள் மீது கருணை பிறக்கும்படி சிபாரிசு செய்பவளாக (புருஷகாரம்) பெரியபிராட்டி அவனுடன் இருப்பது அவசியமாகிறது. ஆகவே அனைத்தையும் காப்பவனான எம்பெருமானைக் குறிக்கும் – அ – என்ற பதத்திற்கு, அவனுக்கு மஹலக்ஷ்மியுடன் உள்ள தொடர்பையும் சேர்த்தே கூறவேண்டும். இங்கு லக்ஷ்மி என்ற கூறாமல் ஸ்ரீ என்று ஏன் கூறவேண்டும். இதற்கு இரு காரணங்கள் உண்டு. ச்ரயத இத் ஸ்ரீ: – இவள் அவனை விட்டு எப்போதும் பிரியாமலிருப்பதாலும், ஸ்ரீயத இதி ஸ்ரீ: – அனைவராலும் தொண்டு செய்யப்பட்டபடி இருப்பதாலும் – ஸ்ரீ என்றார்.

## 41. அத்ர பகவத்ஸோநாபமதிமிச்ரர் வாக்யம் – அவன் மார்புவிட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப்பிரிவது.

**அவதாரிகை** – இன்னமும் இவ்வகாரத்தில் ஈச்வரனுடைய லக்ஷ்மி ஸம்பந்தம் நியமேந தோற்றுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே தர்சிப்பிக்கிறார் அத்ர இத்யாதியால்.

**விளக்கம்** – பகவானுக்கு மஹாலக்ஷ்மியுடன் உள்ள தொடர்பை – அ – என்னும் எழுத்து விளக்குகிறது என்ற கருத்தை ஓர் அறிஞரின் கூற்று மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்விடத்திலே ஜ்ஞாநாதிகரான ஸ்ரீஸேநாபதிசீயர் அருளிச்செய்யும் வார்த்தை – அகலகில்லேனிறையும் என்று அவன் திருமார்பிலே நித்யவாஸம் பண்ணும் இவள், அம்மார்பைவிட்டுப் பிரியிலாயிற்று, அவனுக்கு ப்ரதிபாதகமான இவ்வக்ஷரத்தைவிட்டுப் பிரிவது என்று – என்கை. என்று என்கிற இத்தனையுங் கூட்டாதபோது, கீழோடு இவ்வாக்யம் அந்வயியாது.

**விளக்கம்** – இங்கு ஸ்ரீ சேநாபதி ஜீயர் என்னும் சிறந்த அறிஞர் அருளிச் செய்தது காணத்தக்கது. அவர் கூறுவது – திருவாய்மொழி (6–10–10) – அகலகில்லேன் இறையும் – என்ற வரியில் கூறியபடி அவனுடைய திருமார்பில் எப்போதும் வாஸம் செய்யும் இவள், அவன் திருமார்பை விட்டு பிரிந்து விட்டால், இவனும் அ என்ற எழுத்திலிருந்து பிரிந்து விடுவான் – என்று கூறினார்.

**வ்யாக்யானம்** – இத்தால், அவன் திருமார்பில் ஸம்பந்தம் இவளுக்கு நித்யமாகையாலே அவன் தோற்றுமிடத்திலே இவளும் தோற்றுகை நிச்சிதமாகையால், அவன் திருமார்பில் அந்வயத்தோபாதி அவனுக்கு வாசகமன அகாரத்தில் அந்வயமும் இவளுக்கு நித்யமென்றதாயிற்று.

**விளக்கம்** – இதனால் அவனுடைய திருமார்புடன் இவளுக்கு என்றும் சேர்த்தி உண்டு என்பது உறுதியாகிறது. ஆகவே அவன் எங்கு உள்ளானோ அங்கு அவளும் உள்ளாள். அவனது திருமார்பில் சேர்ந்து உள்ளது போல், அவனை குறிப்பிடும் அ என்ற எழுத்திலும் இவள், அவனுடன் சேர்ந்தே உள்ளாள்.

## 42. பர்த்தானினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவைப்போலே ப்ரதம சரமபதங்களை விடாதேயிருக்கும் இருப்பு.

**அவதாரிகை** – இன்னமும் இவ்வர்த்தத்தை ஸ்திரீகரிக்கைக்காக ஈச்வர சேதந வாசகங்களான அகார மகாரங்களிரண்டிலும் இவளுக்கு உண்டான அநவரதாந்வயத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் பர்த்தாவினுடைய என்று தொடங்கி.

**விளக்கம்** – இவள் ஸர்வேச்வரனைக் குறிக்கும் அ என்ற எழுத்திலும், ஜீவனைக் குறிக்கும் ம என்ற எழுத்திலும் சேர்ந்து உள்ளாள் என்பதை ஓர் உதாரணம் மூலம் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சேஷபூதையான தன் ஸ்வரூபத்துக்குச் சேரும்படி அவனை ரஸிப்பிக்கைக்காக பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே ரக்ஷகையான தன் ஸ்வரூபத்துக்கும் போரும்படி தத்ரக்ஷணம் பண்ணுகைக்காக ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவானவளைப்போலே, இவளும் பர்த்ருபூதனான ஈச்வரனுக்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள ப்ரதமபதமான அகாரத்தையும், ப்ரஜாபூதரான சேதநர்க்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள சரமபதமான மகாரத்தையும் தத்தத் விஷயத்தில் தனக்கு உண்டான ஸம்பந்தத்துக்கு ஈடாக ரஸிப்பிக்கை ரக்ஷிக்கையாகிற இவற்றைப்பற்ற, விடாதேயிருக்குமிருப்பு – என்கை.

**விளக்கம்** – கணவனுக்குத் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி தொண்டு செய்யும் மனைவி, அவனுக்கு இன்பம் அளிப்பதற்காக அவனுடைய படுக்கையை விடுவதில்லை. அதே நேரத்தில் குழந்தையைக் காப்பாற்றும் தன்னுடைய தாய் என்னும் ஸ்வரூபத்தையும் கைவிடாமல் குழந்தையின் தொட்டிலையும் விடாமல் உள்ளாள். இதே போன்று பெரியபிராட்டி தனது நாயகனான ஸர்வேச்வரனைக் கூறும் அ என்ற எழுத்தையும், தனது குழந்தைகளான சேதநர்களைக் குறிப்பிடும் ம என்ற எழுத்தையும் விடாமல் உள்ளாள். அ என்பதன் மூலம் எம்பெருமானை அனுபவிப்பதற்காகவும், ம என்பதன் மூலம் ஜீவனைக் காப்பதற்காகவும் விடாமல் இருக்கிறாள்.

## 43. ஸ்ரீநந்தகோபரையும் கிருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டியைப்போலே.

**அவதாரிகை** – கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்தத்தை ஒரு விசேஷ நிஷ்டமாக்கி அருளிச்செய்கிறார் ஸ்ரீநந்தகோபரையும் கிருஷ்ணனையும் விடாத என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலே கூறிய உதாரணத்தை ஒரு சிறப்பு விஷயம் கூறி விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பார்யையான தன் ஸ்வரூபானுகுணமாக ரஸிப்பிக்கைக்காக பர்த்தாவான ஸ்ரீநந்தகோபரையும் விடாதே, மாதாவான தன் ஸ்வரூபானுகுணமாக ரக்ஷிக்கைக்காகப் புத்ரனான க்ருஷ்ணனையும் விடாதே. அம்பரமே என்கிற பாட்டிற்

சொல்லுகிறபடியே மத்யேவர்த்திக்கும் யசோதைப்பிராட்டியைப்போலே ப்ரதம சரமபத வாச்யரான ஈச்வர சேதநர்களிருவரையும் விடாதே இவளும் வர்த்திக்கும்படி என்கை.

**விளக்கம்** – மனைவியான தன்னுடைய ஸ்வருபத்திற்கு ஏற்றபடி தன்னை அனுபவிப்பதற்காக தன்னுடைய கணவனான ஸ்ரீநந்தகோபரையும், தாயான தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி காப்பதற்காகத் தன்னுடைய புத்திரனான கண்ணனையும் யசோதை விடாமல் உள்ளாள். திருப்பாவையில் – அம்பரமே (17) என்ற பாசுரத்தில் கூறியபடி நடுவில் உள்ள யசோதை போன்று முதலாவது, மூன்றாவது ஆகிய எழுத்துக்களால் கூறப்படும் ஈச்வரனையும், சேதநர்களையும் இவள் விடாமல் உள்ளாள்.

## 44. ஒருவனடிமைகொள்ளும்போது க்ருஹிணிக்கென்றன்றே ஆவணவோலையெழுதுவது, ஆகிலும், பணிசெய்வது க்ருஹிணிக்கிறே. அது போலே நாம் பிராட்டி அடிமையாயிருக்கும்படி.

**அவதாரிகை** – ஈச்வரசேஷத்வமாத்ரமொழியப் பிராட்டிக்கும் சேஷமென்னுமிடம் இவ்வாசகத்தில் இன்றிக்கேயிருக்கச்செய்தேயும், இவளுக்கும் சேஷம் என்று நாம் கொள்ளுகிறபடி எங்ஙனே? என்ன, அருளிச்செய்கிறார் ஒருவன் என்று தொடங்கி.

**விளக்கம்** – அ என்ற எழுத்தானது ஜீவன் ஈச்வரனுக்கு மட்டுமே அடிமைப்பட்டவன் என்பதைக் கூறுகிறதே தவிர பெரியபிராட்டிக்கும் அடிமைப்பட்டவன் என்று கூறவில்லையே. ஆனால் நாம் அவளுக்கும் அடிமை என்றே கொள்ளுகிறோம். இது எப்படி? விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, லோகத்திலே ஒருவன் தாஸதாஸிகள் முதலானதோரடிமையைக் கொள்ளும்போது தனக்கென்றே எழுதிக்கொள்ளுமதொழிய, தன் க்ருஹிணிக்கென்றன்று விலையோலை எழுதிக்கொள்வது, ஆயிருக்கச்செய்தேயும், அடிமைத் தொழில் செய்வது க்ருஹிணிக்கிறே, அதுபோலே ஈச்வரசேஷம் என்னும் அளவை இவ்வகாரம் சொல்லிற்றேயாகிலும், நாம் பிராட்டிகு அடிமையாயிருக்கும்படி என்கை.

**விளக்கம்** – இந்த உலகில் ஒருவன் வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் சேர்த்துக் கொள்கிறான் என்று வைப்போம். அந்தப் பத்திரத்தில் அவன், இவர்கள் அனைவரும் தன்னுடைய அடிமைகள் என்று மட்டுமே எழுதிக் கொள்வான். தன்னுடைய மனைவிக்கும் இவர்கள் அடிமை என்று எழுதுவதில்லை. ஆயினும் வேலையாட்கள் அவனது மனைவிக்காகவே அதிக தொண்டு செய்வர். இது போன்று அ என்ற பதம் மூலம் ஜீவன் ஈச்வரனுக்கு அடிமை என்று கூறப்பட்டாலும், நாம் பெரியபிராட்டிக்கும் அடிமையே.

## 45. ஆக பிரித்து நிலையில்லை.

**அவதாரிகை** – கீழ்ச்சொன்ன ஹேதுக்களையெல்லாம் அனுவதித்துக்கொண்டு ஈச்வரனுக்கும், பிராட்டிக்கும் ஒருகாலும் ப்ருதக் ஸ்திதியில்லாமையை அருளிச்செய்கிறார் – ஆகப் பிரித்து நிலையில்லை – என்று.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட பலவிதமான காரணங்களால் ஸர்வேச்வரனுக்கும் பெரியபிராட்டிக்கும் பிரிவு என்பது எப்போதும் இல்லை என்று அருளிச்செய்கிறார்.

## 46. ப்ரபையையும், ப்ரபாவானையும், புஷ்பத்தையும் மணத்தையும் போலே.

**அவதாரிகை** – இந்த ப்ருதக்ஸ்தித்யபாவத்துக்கு இரண்டு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் – ப்ரபை – என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியும் எந்தச் சூழலிலும் பிரியாமல் இருப்பதற்கு இரண்டு உதாரணங்கள் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ப்ரபைக்கும் ப்ரபாவானுக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லாதாப்போலவும், புஷ்பத்துக்கும் பரிமளத்துக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லாதாப்போலேவும் – என்கை. அநந்யா ராக வேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா, அநந்யா ஹி மயாஸீதா பாஸ்கரேண ப்ரபாயதா – என்று ப்ரபாப்ரபாவான்களைப் போலே இருவருக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லையென்னுமிடம் இருவர் வாக்காலும் சொல்லப்பட்டதிறே. ப்ரஸூநம் புஷ்யந்தீமபி பரிமளர்ததிம்ஜிகதிஷு: என்கிற விடத்திலே ஈச்வரனை புஷ்பஸ்தாநேயாகவும், பிராட்டியைப் பரிமளஸ்தாநேயாகவும் பட்டரருளிச் செய்கையாலே, புஷ்ப பரிமளங்களுக்குப் போலே, இருவர்க்கும் ப்ருதக்ஸ்திதி இல்லையென்னுமிடம் அர்த்தாத்ஸித்தம்.

**விளக்கம்** – ஒளிக்கும், ஒளியை உடைய பொருளுக்கும் பிரிவு இல்லாதது போன்றும், மலருக்கும், அந்த மலரின் நறுமணத்திற்கும் பிரிவு இல்லாதது போன்றும் – எனக்கொள்க. இராமாயணம் (சுந்தர காண்டம் 21–16) – அநந்யா ராக வேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா – ஒளிக்கும், அந்த ஒளியை உடைய பொருளுக்கும், மலருக்கும் அந்த மலரின் நறுமணத்திற்கும் பிரிவு இல்லாதது போன்று இராமனிடம் நான் உள்ளேன் – என்று சீதை கூறினாள். இராமாயணத்தில் (யுத்த காண்டம் 121–15) – அநந்யா ஹி மயாஸீதா பாஸ்கரேண ப்ரபாயதா – சூரியனை விட்டு நீங்காத ஒளி போன்று, சீதை என்னை விட்டுப் பிரியாமல் உள்ளாள் – என்று இராமன் கூறினான். இப்படியாகச் சூரியனையும் அதனுடைய ஒளியையும் போன்று தாங்கள் பிரியவில்லை என்று இருவரும் அவர்களது திருவாக்கினால் கூறியது காண்க. ஸ்ரீகுணரத்னகோசத்தில்(29) – ப்ரஸூநம் புஷ்யந்தீமபி பரிமளர்ததிம்ஜிகதிஷு – மலருக்கு மேன்மை அளிக்கும் நறுமணம், இந்தக் காரணத்தினால்தான் உண்டாகிறது

என்று கூற இயலாது – என பட்டர் அருளிச்செய்தார். இந்த ச்லோகத்தில் நம்பெருமாளை மலராகவும், ஸ்ரீரங்கநாச்சியாரை நறுமணமாகவும் அருளிச்செய்தார். இதன் மூலம் மலரும், மணமும் போன்று இருவரும் பிரிவதில்லை என்பது விளங்குகிறது.

## 47. ஆக, இச்சேர்த்தி உத்தேச்யமாய்விட்டது.

**அவதாரிகை** – இந்த ப்ருதக்ஸ்திதியபாவத்தை அனுவதித்துக்கொண்டு இச்சேர்த்தியே சேதனர்க்கு உத்தேச்யமாய்த் தலைக்கட்டினபடியே அருளிச் செய்கிறார் – ஆக இச்சேர்த்தி உத்தேச்யமாய்விட்டது – என்று.

**விளக்கம்** – இந்தச் சேர்த்தியை சேதனர்கள் தங்களது குறிக்கோளாகக் கொண்டு உய்வதைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – இச்சேர்த்தி உதேச்யம் என்கையாலே, இவர்களைத் தனித்தனியே விரும்புகை உத்தேச்யம் அன்று என்றபடி. இருவரையும் பிரித்து விரும்பினால், ராவண சூர்ப்பணகைகளுக்குப்போலே, அனர்த்தமே பலிக்குமத்தனை. இருவரையும் பற்றினாலிறே ஸ்ரீவிபீஷணாழ்வானைப் போலே வாழலாவது.

**விளக்கம்** – இச்சேர்த்தி உத்சேச்யம் என்று பிள்ளைலோகாசார்யர் கூறுவதால், இவர்கள் இருவரையும் தனித்தனியாக விரும்புவது சரியான முறை அல்ல. பிரித்து விரும்பும்போது ஏற்படுவது என்ன? இராமனை விடுத்து சீதையை விரும்பிய இராவணனின் நிலையும், சீதையை விடுத்து இராமனை விரும்பிய சூர்ப்பணகையின் நிலையும் உண்டாகிவிடும். ஆகவே இருவரையும் சேர்ந்து பற்றும்போது, விபீஷணன் போன்ற உயர்ந்த வாழ்க்கை கிட்டும்.

## 48 இதிலே, சதுர்த்தியேறிக்கழியும்.

**அவதாரிகை** – இனிமேல், இதில் விபக்த்யர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் விபக்திதன்னை நிர்த்தேசிக்கிறார் – இதிலே சதுர்த்தியேறிக் கழியும் – என்று.

**விளக்கம்** – இதுவரை ப்ரணவத்தில் உள்ள அகாரத்தின் பெருள் விளக்கினார். இனி அகாரத்தில் உள்ள நான்காம் வேற்றுமையை விளக்குகிறார். (நான்காம் வேற்றுமை என்பது ஒரு பொருள் மற்றதற்காக என்பதை விளக்குவதாகும்).

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வகாரத்திலே சதுர்த்தியேறி ஸுபாம்ஸுலுக் இத்யாதி ஸூத்ரத்தாலே லுப்தமாய்ப்போம் – என்கை.

**விளக்கம்** – அகாரத்தில் உள்ள நான்காம் வேற்றுமையானது – ஸுபாம்ஸுலுக் – என்ற சூத்திரத்தின்படி கெட்டிருக்கிறது என்று அறியலாம்.

## 49. சதுர்த்தியேறினபடியென்? என்னில்.

**அவதாரிகை** – விபக்த்யந்தரமெல்லாங்கிடக்க இவ்வகாரத்தில் சதுர்த்தி யேறினபடிதான் எங்ஙனே? என்கிற சங்கையை அனுவதிக்கிறார் – சதுர்த்தி யேறினபடியென்? என்னில் – என்று.

**விளக்கம்** – பல வேற்றுமைகள் உள்ளபோது, அகாரத்தில் நான்காம் வேற்றுமை மட்டுமே கெட்டுள்ளது என்று கூறியது எப்படி? இந்த சந்தேகத்திற்கான விடையை அடுத்த சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

## 50. நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே.

**அவதாரிகை** – அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் – நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே – என்று.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வகாரம். சதுர்த்யந்தமான நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாகையாலே, இதிலும் சதுர்த்தி ஏறிற்று – என்கை. இங்ஙன் அன்றாகில், இரண்டுக்கும் ஸங்க்ரஹவிவரணத்வம் ஸித்தியாதிறே.

**விளக்கம்** – ஓம் என்பதில் உள்ள அகாரமானது, நான்காம் வேற்றுமையுடன் முடியும் நாராயணாய என்னும் பதத்தின் சுருக்கமே ஆகும் (இதில் ஆய என்பது நான்காம் வேற்றுமை – நாராயணனுக்காக). இதே காரணத்தினால், அகாரத்தில் நான்காம் வேற்றுமை கெட்டுள்ளது என்று கூறலாம். இவ்விதம் கொள்ளவில்லை என்றால், நாராயணாய என்ற பதத்தின் சுருக்கமாக அகாரத்தைக் கொள்ள இயலாது.

## 51. இத்தால், ஈச்வரனுக்கு சேஷமென்கிறது.

**அவதாரிகை** – இத்தாற்சொல்லுகிற அர்த்தம்தான் எது? என்ன அருளிச்செய்கிறார் – இத்தால், ஈச்வரனுக்கு சேஷமென்கிறது – என்று.

**விளக்கம்** – நான்காம் வேற்றுமையால் உணர்த்தப்படுவது என்ன? இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இதுதான் தாதர்த்யே சதுர்த்தீ ஆகையாலே இச்சதுர்த்தியால் ஈச்வரனுக்கு சேஷமென்னுமிடம் சொல்லுகிறது – என்கை.

**விளக்கம்** – இலக்கண நூலில் – தாதர்த்யே சதுர்த்தீ – அதற்காக இது – என்பதே நான்காம் வேற்றுமை எனப்படுகிறது. இதன் மூலம், ஜீவன் ஈச்வரனுக்கு சேஷம் (அடிமை) என்று உணர்த்தப்படுகிறது.

## 52. சேஷத்வம் துக்கரூபமாகவன்றோ நாட்டிற் காண்கிறது என்னில்.

**அவதாரிகை** – ஸர்வம் பரவசம் துக்கம், ஸேவா ச்வவ்ருத்தி: என்கிற லௌகிக ந்யாயத்தைக்கொண்டு சேஷத்வத்தை துக்கரூபமாக நினைத்திருக்குமவர்கள் பண்ணும் ப்ரச்நத்தை அனுவதிக்கிறார் – சேஷத்வம் துக்கரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில் – என்று.

**விளக்கம்** – மனுஸ்ம்ருதியில் – ஸர்வம் பரவசம் துக்கம் – மற்றவர்களுக்கு அடிமைப்பட்டால் துக்கம் – என்றும், ஸேவா ச்வவ்ருத்தி – அடிமைத்தனம் நாய்ப்பிழைப்பு – என்றும் கூறப்பட்டதே. இந்த வரிகளை மனதில் கொண்டு, மற்றவர்களுக்கு அடிமைப்படுவதை துயரமாக நினைக்கும் லௌகிகர்கள் கேட்க விரும்பும் கேள்விக்கான பதிலை, அடுத்த சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

## 53. அந்த நியமம் இல்லை, உகந்தவிஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகமாகக் காண்கையாலே.

**அவதாரிகை** – அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் – அந்த நியமமில்லை – என்று தொடங்கி.

**வ்யாக்யானம்** – அதாவது, நாடுதன்னிலே பணிமின் திருவருள் இத்யாதிப்படியே அபிமத விஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகரூபமாகக் காண்கையாலே, சேஷத்வமாகில் துக்கரூபமாயிருக்குமென்கிற நியமமில்லை – என்கை.

**விளக்கம்** – நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் (4–1–5) – பணிமின் திருவருள் – உனக்கு வேண்டுவனவற்றைக் கட்டளை இடு – போன்ற வரிகளின் மூலம், தனக்கு விருப்பமானவர்களிடம் அடிமையாக இருப்பது சுகமே ஆகும் என்று அறியலாம். ஆகவே, அடிமைப்படுதல் என்பது துயரம் ஏற்படுத்தாது.

## 54. அகாரத்திலே கல்யாண குணங்களைச் சொல்லுகையாலே, இந்த சேஷத்வமும் குணத்தாலே வந்தது.

**அவதாரிகை** – அபிமத விஷயத்தில் சேஷத்வம் ஸுகமாகிறது. அவ்விஷயத்தில் குணமடியாக வந்ததாகையாலேயன்றோ என்ன, அருளிச்செய்கிறார் அகாரத்தில் என்று தொடங்கி.

**விளக்கம்** – இன்பம் அளிக்கும் பொருள்களுக்கு அடிமையாக இருப்பது சுகமாக உள்ளது. இதற்குக் காரணம் அந்த பொருள்களில் உள்ள இன்பம் அளிக்கும் தன்மைகளால் ஆகும். அதே கருத்து இங்கும் பொருந்துமா? இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஈச்வரனுடைய ரக்ஷகத்வப்ரதிபாதகமான அகாரத்திலே அந்த ரக்ஷணோபயோகியான கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே, ஈச்வர விஷயமான இந்த சேஷத்வமும் அந்த குணங்களடியாக வந்தது என்கை. ஆகையால், இதுவும் ஸுகரூபமாயிருக்கக் குறையில்லையென்று கருத்து.

**விளக்கம்** – ஈச்வரனுடைய ரக்ஷகத் தன்மையைக் கூறுகின்ற அகாரத்தில் (அ என்னும் எழுத்து), அந்த ரக்ஷகத் தன்மைக்கு அடிப்படையான திருக்கல்யாண குணங்களும் கூறப்படுகிறது. எம்பெருமானிடம் அடிமையாக இருத்தல் என்பது இந்த கல்யாண குணங்களின் காரணத்தாலேயே ஆகும். ஆகவே இவ்விதம் அடிமையான இருத்தல் இன்பம் அளிக்கவல்லது என்று கூறுவதில் குறையில்லை.

## 55. சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்

**அவதாரிகை** – ஆனால், ஔபாதிகமான இது ஸ்வரூபமன்றோ? என்ன அருளிச்செய்கிறார், சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்று.

**விளக்கம்** – இவ்விதம் குணங்களால் மட்டுமே அடிமைத்தனம் உண்டாகிறது என்றால், அது செயற்கையாக வந்த அடிமைத்தனம், அப்படி எனில் ஆத்மாவிற்கு ஸ்வரூபத்திலேயே அடிமைத்தனம் இல்லையா என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது உகந்தவிஷயத்தில் இதன் ஸ்ᵔகரூபத்வத்துக்கு குணக்ருதத்வத்தை ஹேதுவாகச் சொல்லுகையாலே அந்த குணக்ருதத்வம் இங்கும் உண்டென்னுமிடத்துக்குச்சொன்ன இத்தனையொழிய, அர்த்தஸ்திதியை நிரூபித்தால் ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம், ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர, தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச இத்யாதிகளிலே இத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாகச் சொல்லுகையாலே, சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்கை.

**விளக்கம்** – நமக்குப் பிடித்த விஷயங்களில் சுகம் உள்ளது என்று கூறுவதற்காகவே அந்தப் பொருள்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் கூறினோம். இதனைப் போன்றே ஈச்வரன் விஷயத்திலும் எடுத்துக் கொள்ளக் கூடாது. கீழே உள்ள வரிகள் காண்க:

- விஷ்ணு ததவம் – ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் – ஈச்வரனுக்கு உடைமையாய் உள்ள தன்மையே ஆத்மாவின் ஸ்வரூபமாகும்.

- விஷ்ணு தத்வம் – ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர – ஆத்மாவின் அடிமைத் தன்மையையும், ஸ்ரீஹரியின் ஸ்வாமித்வத்தையும் எப்போழுதும் நினைக்கவேண்டும்.

- ஹாரித ஸ்ம்ருதி – தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச – அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மாவிற்கு இயற்கையாகவே அடிமைப்பட்டவை ஆகும். இதனைத் தவிர ஸம்ஸாரத்தில் இருந்தாலும், மோக்ஷம் பெற்றாலும் ஆத்மாவுக்கு வேறு இலக்கணம் இல்லை.

மேலே உள்ள வரிகளின் மூலம், ஆத்மாவுக்கு ஈச்வரனிடம் அடிமைப்பட்டிருத்தல் என்பது ஸ்வரூபம் என்பது விளங்குகிறது.

## 56. சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை.

**அவதாரிகை** – சேஷத்வமேயென்று அவதரிப்பானேன்? ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான ஆத்மவஸ்துவுக்கு அல்லாதபோதும் ஸ்வரூபம் இல்லையோ? என்ன அருளிச்செய்கிறார் சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை என்று.

**விளக்கம்** – ஆத்மாவிற்கு ஞானம், ஆனந்தம் ஆகியவையும் ஸ்வரூபம் என்று கூறப்பட்டது. அப்படி உள்ளபோது, இங்கு அடிமைத்தனத்தை மட்டுமே (சேஷத்வம்) கூறுவது ஏன்? இந்த சேஷத்வம் இல்லை என்றால் ஆத்மாவின் ஸ்வரூபமே இல்லாமல் போய்விடுமா என்ற ச்ந்தேகம் எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – சேஷத்வமில்லாதபோது ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்த்ரியபுத்தி நடக்கையாலே, ஸ்வரூபம் அழிந்துவிடும் என்னுமத்தை தர்சிப்பிக்கிறார் மேலிரண்டு வாக்யத்தாலே ஆத்மாபஹாரமாவது என்று தொடங்கி.

**விளக்கம்** – அடிமைத்தனம் இல்லாதபோது, ஈச்வரனுக்கு உடைமையான ஆத்மாவைத் திருடுவது, நாம் சுதந்திரமானவர்கள் என்று எண்ணத்தை உண்டாக்கி விடும். இதனால் ஆத்மாவின் ஸ்வரூபம் முழுவதுமாக அழித்து விடும். மேலே கூறியதையே மீண்டும் அடுத்த சூர்ணையிலும் விளக்குகிறார்.

## 57. ஆத்மாபஹாரமாவது ஸ்வதந்த்ரமென்கிற நினைவு, ஸ்வதந்த்ரமாம்போது இல்லையாய்விடும்.

**வ்யாக்யானம்** – யோ அன்யதாஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்தே கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா என்று ஸர்வபாப மூலமாகச் சொன்ன ஆத்மாபஹாரமாவது தன் ஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் என்கிற ப்ரதிபத்தி, ஸ்வதந்த்ரம் ஆமளவில் அஸந்நேவ என்கிறபடியே ஸ்வரூபம் இல்லையாய்விடும் என்கை. ஆகையால் சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை என்னத்தட்டில்லை என்று கருத்து.

**விளக்கம்** – ஆத்ம அபகாரம் (ஆத்மாவைத் திருடுதல் என்பது) என்பது அனைத்து பாவங்களுக்கும் மூல காரணமாகிவிடும், இது தன்னுடைய ஆத்மா சுதந்திரமானது என்று நினைவே ஆகும். இதனை மஹாபாரதம் – யோ அன்யதாஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்தே கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா – பரமாத்மாவிற்கு அடிமையாக உள்ள ஆத்மாவை தனக்கே வசப்பட்டவனாக அறியும் ஆத்ம திருடன் ஒருவன், எந்தப் பாவத்தைதான் செய்யவில்லை – என்று கூறியது. இவ்விதம் தான் சுதந்திரமானவன் என்ற எண்ணம் உண்டானவுடன் ஒருவன் – அஸந்நேவ – இல்லாதவனாக – ஆகிவிடுகிறான். எனவே அடிமைத்தனம் இல்லை என்றால் ஸ்வரூபமும் இல்லை என்று கூறுவதில் குறையில்லை.

ஆக, ப்ரக்ருத்யர்த்தமான ஈச்வரனுடைய காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும், அர்த்தபலத்தால் வந்த ஸ்ரிய: பதித்வமும், ப்ரத்யயஸித்தமான சேதன சேஷத்வப்ரதிஸம்பந்தியான சேஷித்வமும் ஆகிற அகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம்** – ஆக இதுவரை அ என்ற எழுத்தின் பொருளாக – ஈச்வரனே அனைத்தின் காரணம், அவனே அனைத்தையும் காக்கிறான், அவனே பெரியபிராட்டியின் நாயகனாக உள்ளான், ஈச்வரன் எஜமானனாகவும் ஆத்மா அடிமையாகவும் உள்ள நிலை ஆகியவை விளக்கப்பட்டது.

## 58. ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்

**அவதாரிகை** – அநந்தரம் மத்யமாக்ஷரமான உகாரத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக உபக்ரமிக்கிறார், ஸ்தான ப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம் என்று.

**விளக்கம்** – அடுத்து ப்ரணவத்தின் நடு எழுத்தான – உ – என்பதற்குப் பொருள் அருளிச்செய்யத் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ததேவ பூதம் தது பவ்யமா இதம் என்றும், ததே வாக்விஸ்தத்வாயுஸ் தத் ஸூர்யஸ்தது சந்த்ரமா: என்றும் இத்யாதிகளிலே ஏவகாரஸ்தாநத்திலே உகாரத்தை ப்ரயோகிக்கக் காண்கையாலே, ஸ்தாந ப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணத்தை அர்த்தமாக உடைத்தாயிருக்கும் என்கை.

**விளக்கம்** – கீழே உள்ள உபனிஷத் வரிகள் காண்க:

- தைத்திரீய உபனிஷத் – ததேவ பூதம் தது பவ்யமா இதம் – அதுவே (ப்ரஹ்மமே) இறந்தகாலப்பொருள், எதிர்காலப்பொருள், மற்றும் நிகழ்காலப்பொருள்
- தைத்திரீய உபநிஷத் – ததே வாக்விஸ்தத்வாயுஸ் தத் ஸூர்யஸ்தது சந்த்ரமா: – அதுவே அக்நீ, அதுவே வாயு, அதுவே சூரியன், அது மட்டுமே சந்திரன்

மேலே உள்ள வரிகளில் தது என்ற பதத்தில் இருக்கும் உ என்னும் எழுத்து மூலம் – அதுவே – என்னும் அர்த்தம் கூறப்பட்டது. இதனால், உ என்னும் எழுத்து, – அது மட்டுமே – என்னும் பொருளைக் கூறவல்ல ஏவகாரத்தை விளக்குகிறது.

## 59. இத்தால், பிறர்க்கு சேஷம் அன்று என்கிறது.

**அவதாரிகை** – அவதாரணத்துக்கு அர்த்தம் அயோகவ்யவச்சேதமாதல், அந்யயோக வ்யவச்சேதமாதல் ஆகையாலே, இவ்வவதாரணத்தாற் சொல்லுகிறது ஏது? என்ன, அருளிச்செய்கிறார் இத்தால், பிறர்க்கு சேஷமன்றென்கிறது என்று.

**விளக்கம் –** இவ்விதம் உகாரத்தை ஏவகாரமாகக் கூறுவதற்கு அயோக வ்யவச்சேதம் (ஒரு பொருளில் ஒரு தன்மை மட்டுமே உள்ளது என்று கூறும் போது மற்ற தன்மைகள் அதில் இல்லை என்று விலக்குவது), அந்யயோகவ்யவச்சேதம் (ஒரு பொருளில் உள்ள தன்மை மற்ற பொருள்களில் இல்லை என்று விலக்குவது) என்று இரு விதமாகப் பொருள் கொள்ளமுடியும். இங்கு உகாரம் எந்தப் பொருளை விளக்குகிறது என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அவதாரண வாசகமான இவ்வுகாரத்தால் கீழ் ஈச்வர சேஷமாகச் சொன்ன இவ்வாத்ம வஸ்து, அந்யர்க்கு சேஷமன்று என்னுமிடத்தைச் சொல்லுகிறது என்கை. சதுர்த்தியாலே ஈச்வரசேஷத்வம் ப்ரதிபாதிதமாகச்செய்தே, அந்யசேஷத்வம் ப்ரஸ்துதமாமோ? என்னில் லோகத்திலே ஒருவனுக்கு சேஷமான க்ருஹ க்ஷேத்ர புத்ரதாஸாதிகள், வேறேயுஞ்சிலர்க்கு சேஷமாயிருக்கக் காண்கையாலே. அப்படிபட்ட அந்யசேஷத்வம் இந்த ஸ்தலத்திலும் உண்டோ? என்று ஒரு சங்கை உதிக்குமிறே, ஆகையாலே தாத்ருசமான அந்யசேஷத்வம் இங்கில்லை என்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிறது உகாரம்.

**விளக்கம் –** இந்த உகாரத்தில் ஈச்வரனுக்கே அடிமை என்று கூறப்பட்ட ஆத்மாவானது, மற்ற எதற்கும் அடிமைப்பட்டது அல்ல என்று அந்யோகவ்யவச்சேதமாகவே விளக்கப்பட்டது. நான்காம் வேற்றுமை மூலம் (நாராயணனுக்காக), நாராயணனுக்கே ஆத்மா அடிமைப்பட்டது என்று தெளிவாகக் கூறிய பின்னர், வேறு எதற்கும் ஆத்மா அடிமைப்பட்டதா இல்லையா என்று ஐயம் அவசியமா? இந்த உலகில் ஒருவனுக்கு மட்டுமே உரிமையாக உள்ள வீடு, நிலங்கள், புத்திரர்கள் மற்றும் வேலைக்காரர்கள் மற்றவர்களுக்கும் உரிமையாக உள்ளதை நம்மால் காணமுடிகிறது. இதனையே மனதில் கொண்டு எம்பெருமானுக்கே அடிமையாய் உள்ள ஆத்மா மற்றவர்க்கும் அடிமையாய் இருக்குமோ என்ற சந்தேகம் ஒரு சிலருக்கு எழலாம் அல்லவா? இதனை நீக்கவே, உகாரம் மூலம் ஆத்மாவானது வேறு எதற்கும் அடிமைப்பட்டது அல்ல என்று கூறப்பட்டுள்ளது.

## 60. பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறது என்றும் சொல்லுவர்கள்.

**அவதாரிகை –** அங்ஙனன்றிக்கே, இவ்வுகாரத்தாலே லக்ஷ்மீசேஷத்வம் சொல்லுகிறது என்பாரும் உண்டென்கிறார், பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறது என்றுஞ் சொல்லுவர்கள் என்று.

**விளக்கம் –** உகாரம் மூலம் மஹாலக்ஷ்மிக்கு ஆத்மா அடிமை என்று ஒரு சிலர் பொருள் கொள்ளுவர். இதனை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அகாரச்சித் ஸ்வரூபஸ்ய விஷ்ணோர்வாசக இஷ்யதே உகாரச்சித் ஸ்வரூபாயா: ஸ்ரீயோ வாசீ ததா விது: மகாரஸ்து தயோர்தாஸ இதி ப்ரணவ லக்ஷணம் என்றும், அகாரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேச்வரோ ஹரி: உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணோச்யதே ஸதா மகாரஸ்து தயோர்விப்ர ஸ்ரீநாராயணயோஸ்ஸதா ஆத்மநச்சேஷபூதஸ்ய வாசக: ச்ருதிசோதித: என்றும் இத்யாதிகளாலே

பகவச்சாஸ்த்ரத்திலே அகாரத்தை பகவத்வாசகமாகவும், உகாரத்தை லக்ஷ்மீவாசகமாகவும், மகாரத்தை தத்துபயேசேஷபூத ஜீவவாசகமாகவுஞ் சொல்லுகையாலே, உகாரத்தை அவதாரண வாசகமாகக் கொள்ளாதே, லக்ஷ்மி வாசகமாகக்கொண்டு, இவ்வுகாரத்தாலே பெரியபிராட்டியார்க்கு சேஷமென் கிறதென்றும் நிர்வஹிப்பர்கள் என்கை.

**விளக்கம்** – கீழே உள்ள வரிகள் காண்க:

- அகாரச்சித் ஸ்வரூபஸ்ய விஷ்ணோர்வாசக இஷ்யதே உகாரச்சித் ஸ்வரூபாயா: ஸ்ரீயோ வாசீ ததா விது: மகாரஸ்து தயோர்தாஸ இதி ப்ரணவ லக்ஷணம் – அ என்பது ஞானமயமாக உள்ள மஹாவிஷ்ணுவைக் குறிக்கிறது. உ என்பது ஞானரூபமாக உள்ள ஸ்ரீதேவியைக் குறிக்கிறது. ம என்பது இவர்களுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவைக் குறிக்கிறது. இதுவே ப்ரணவத்தின் பொருளாகும்.

- அகாரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேச்வரோ ஹரி: உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணோச்யதே ஸதா மகாரஸ்து தயோர்விப்ர ஸ்ரீநாராயணயோஸ்ஸதா ஆத்மநச்சேஷபூதஸ்ய வாசக: ச்ருதிசோதித: – அனைத்து உலகிற்கும் நாயகனான ஸ்ரீஹரியே அ என்பதன் மூலம் கூறப்படுகிறான். மஹாவிஷ்ணுவின் திருமார்பில் உள்ள மஹாலக்ஷ்மியே உ என்பதன் மூலம் கூறப்படுகிறாள். ப்ராம்மணரே. ம என்பது ஸ்ரீதேவிக்கும் நாராயணனுக்கும் அடிமை என்று ச்ருதியில் கூறப்படுகிறது.

மேலே உள்ள பகவத் சாஸ்திரம் என்னும் பாஞ்சராத்ர ஆகமத்தின் மூலம், அகாரம் என்பது பகவானைக் குறிப்பதாகவும், உகாரம் என்பது மஹாலக்ஷ்மியைக் குறிப்பதாகவும், மகாரம் என்பது இவர்கள் இருவருக்கும் அடிமையாக உள்ள ஜீவனைக் குறிப்பதாகவும் அறியலாம். இதனைக் கருத்தில் கொண்டு, உகாரம் என்பதை ஏவகாரமாகப் பொருள் கொள்ளாமல், மஹாலக்ஷ்மியைக் குறித்துக் கூறப்பட்டதாகக் கருதி, ஜீவன் பெரியபிராட்டியாருக்கு அடிமை என்று சிலர் பொருள் கொள்வர்.

## 61. அதிலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.

**அவதாரிகை** – அத்தைப் பற்றவும் பூர்வயோஜனையே முக்யமென்னுமத்தை அருளிச்செய்கிறார், அதிலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம் என்று.

**விளக்கம்** – இரண்டு கருத்துக்களிலும் முதலில் கூறப்பட்ட ஏவகார கருத்தே முக்கியமானது என்று அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பெரியபிராட்டியார்க்கு சேஷமாகையாகிற அதிலுங்காட்டில் கீழ்ச்சொன்ன பகவச்சேஷத்வத்துக்கு விரோதியான அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநாபேக்ஷிதம் என்கை.

**விளக்கம்** – பெரியபிராட்டிக்கு ஆத்மா அடிமை என்று கூறப்படும் கருத்தைக் காட்டிலும், உகாரத்திற்கு ஏவகாரமாகப் பொருள் கொண்டு, எம்பெருமானை அல்லாமல் மற்றவர்களுக்கு ஆத்மா அடிமை இல்லை என்று கூறப்படுவதே முக்கியமானது ஆகும். காரணம் – இதன் மூலம் மட்டுமே ஆத்மாவானது எம்பெருமானுக்கு மட்டுமே அடிமை என்ற கருத்துக்கு விரோதமான கருத்துக்கள் நீங்கும். இதுவே ஆத்மாவிற்கு மிகவும் அவசியம் ஆகும்.

## 62. தேவர்களுக்கு சேஷமான ப்ரோடாசத்தை நாய்க்கு இடுமாபோலே, ஈச்வர சேஷமான ஆத்ம வஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை.

**அவதாரிகை** – அந்யசேஷத்வமிப்படி க்ரூரமோ என்ன, க்ரௌர்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார், தேவர்களுக்கு என்று தொடங்கி.

**விளக்கம்** – எம்பெருமானைத் தவிர மற்றவர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்பது அத்தனை பயங்கரமானதா என்ற கேள்விக்கு, அதன் பயங்கரத்தை விளக்க ஓர் உதாரணம் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆராத்யரான இந்த்ராதி தேவர்களுக்கு போக்யதயா சேஷமாகக் கல்பிதமான ப்ரோடாசத்தை தர்சநஸ்பர்சநாதிகளுக்கு அநர்ஹமாம்படி நிஹீநமாயிருக்கிற நாய்க்கு இடுமாபோலே இருப்பதொன்று, ப்ராப்தசேஷியான ஈச்வரனுக்கு சேஷமான ஆத்ம வஸ்துவை ஸர்வப்ரகாரத்தாலும் ஹேயரான ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை என்கை.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள ஆத்மாவை, அனைத்து விதத்திலும் தாழ்வான ஸம்ஸாரத்தில் உள்ள எந்த ஒரு வஸ்துவிற்கும் அடிமைப்படுத்துதல் என்பது – யாகங்களில் இந்திரன் முதலான தேவர்ளுக்கு உணவாக வைக்கப்படும் அவிர்பாகத்தை, மிகவும் தாழ்வான நாய்க்கு இடுவது போன்றதாகும்.

## 63. பகவச்சேஷத்வத்திலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.

**அவதாரிகை** – இப்படி க்ரூரமான அந்யசேஷத்வம் கழிகையே ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதம் என்று கீழ்ச்சொன்ன அர்த்தத்தை ஸ்திரீகரிக்கிறார், பகவச்சேஷத்வத்திலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம் என்று.

**விளக்கம்** – இப்படியாக மிகவும் பயங்கரமானதாக உள்ள, மற்றவர்களுக்கு அடிமை என்ற நிலை நீங்குவதே ஆத்மாவுக்கு மிகவும் முக்கியமானது என்று அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, லக்ஷ்மீசேஷத்வத்திலுங்காட்டில் ப்ரதாநம் என்ற அளவேயன்று. பகவான் தனக்கு சேஷமாயிருக்குமதிலுங்காட்டில் அந்யவிஷயத்தில் சேஷத்வம் கழிகை ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதம் என்கை.

**விளக்கம்** – மஹாலக்ஷ்மிக்கு ஆத்மா அடிமை என்பதைக் காட்டிலும், மற்றவர்களுக்கு ஆத்மா அடிமை அல்ல என்று கூறப்படும் கருத்து முக்கியமானது என்பது மட்டும் அல்ல, பகவானுக்கு அடிமையாக உள்ளதைக் காட்டிலும், மற்றவர்களுக்கு ஆத்மா அடிமை அல்ல என்று விலக்குவதே ஆத்மாவுக்கு மிகவும் முக்கியம் ஆகும்.

## 64. மறந்தும் புறந்தொழா மாந்தர் என்கையாலே.

**அவதாரிகை** – இதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார், மறந்தும் புறந்தொழா மாந்தர் என்கையாலே என்று.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்திற்கு ஏற்ற சான்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, யமகிங்கரஸம்வாதத்தைத் திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திறம்பேன்மின்கண்டீர் என்கிற பாட்டிலே பாகவத லக்ஷணம் சொல்லுகிறவளவில், திருவடி தன்னாமம் மறந்தும் புறந்தொழாமாந்தர் என்று ஸ்வாமியுடைய திருநாமத்தை மறந்தார்களாகிலும் மற்றோரு விஷயத்தில் சேஷவ்ருத்தி பண்ணாதவர்கள் என்று சொல்லுகையாலே என்கை.

**விளக்கம்** – நான்முகன் திருவந்தாதி (68) – திறம்பேன்மின் கண்டீர் – என்னும் பாசுரத்தில் திருமழிசை ஆழ்வார், விஷ்ணு புராணத்தில் உள்ள யம–கிங்கர உரையாடலைக் கூறுகிறார். இதில் பாகவதர்களின் லக்ஷணத்தைக் கூறும்போது – திருவடி தன்நாமம் மறந்தும் புறம் தொழா மாந்தர் – தங்களது ஸ்வாமியான நாராயணனின் திருநாமத்தை மறந்து விட்டால் கூட, மற்றொரு தெய்வத்தினை வணங்கி, அடிமைத்தனம் செய்யமாட்டார்கள் – என்பதே இதற்கு ப்ரமாணம் என்றார்.

## 65. இத்தால், தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்கிறது.

**அவதாரிகை** – ஈச்வரசேஷமான ஆத்மவஸ்துவுக்கு ஸ்வசேஷத்வ பரசேஷத்வங்களிரண்டும் அந்யசேஷத்வமாகையாலே உபயத்தையும் இவ்வுகாரம் கழிக்கிறதென்று சொல்லி நிகமிக்கிறார் இத்தால் தனக்கும் பிறர்க்கும் உரித்தன்றென்கிறது என்று.

**விளக்கம்** – எம்பெருமானுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவிற்கு – தனக்குத் தானே வசப்படுதல், எம்பெருமானை அல்லாமல் மற்றவர்க்கு வசப்படுதல் ஆகிய இரண்டுமே, மற்றவர்களுக்கு அடிமையாக இருத்தல் என்பதையே காட்டுகிறது. இந்த இரண்டு நிலைகளையும் உ என்ற பதமானது நீக்குகிறது என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அந்யசேஷத்வநிவர்த்தகமான இவ்வுகாரத்தாலே, அந்யரில் அந்யதமத்வம் அவிசிஷ்டமாகையாலே இவ்வாத்மவஸ்து தனக்கு உரித்தன்று, தன்னையொழிந்த ஸம்ஸாரிகளுக்கும் உரித்தன்று என்னுமிடம் சொல்லுகிறது – என்கை.

**விளக்கம்** – உகாரமானது ஜீவாத்மா மற்றவர்களுக்கு வசப்படுதலை தவிர்க்கிறது. இதன் மூலம் ஜீவாத்மா தனக்குத் தானே உடைமை அல்லன், தன்னை விட வேறுபட்ட மற்ற ஸம்ஸாரிகளுக்கு உடைமை அல்லன் என்பது கூறப்பட்டது.

## 66. மகாரம், இருபத்தஞ்சாம் அக்ஷரமாய் ஜ்ஞாந வாசியுமாய் இருக்கையாலே, ஆத்மாவைச் சொல்லுகிறது.

**அவதாரிகை** – ஆக, உகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. அநந்தரம், த்ருதீயாக்ஷரமான மகாரார்த்தத்தை அருளிச் செய்கிறார் மகாரம் என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை உகாரத்தின் பொருளை அருளிச் செய்தார். இனி மூன்றாம் அக்ஷரமான ம என்னும் எழுத்தின் பொருளை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேண இத்ரியாணி ச டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹங்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதி: உச்யதே ஆத்மாது ஸ மகாரேண பஞ்ச விம்ச: ப்ரகீர்த்தித: என்றபடியே ப்ருதிவ்யாதி ப்ரக்ருத்யந்தமான இருபத்துநாலு தத்வத்துக்கும் வாசகமாயிருந்துள்ள ககாராதிபகாரந்தமான இருபத்துநாலு அக்ஷரமும் போலன்றிக்கே மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய். மந ஜ்ஞாநே என்கிற தாதுவிலேயாதல், மனு அவபோதநே என்கிற தாதுவிலேயாதல் நிஷ்பந்நமாகையாலே, ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே. பஞ்சவிம்சோயம் புருஷ:, பஞ்ச விம்ச ஆத்மாபவதி என்கிறபடியே பஞ்சவிம்சகனாய், விஜ்ஞாநாத்மா புருஷ:, விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் என்கிறபடியே ஜ்ஞாநஸ்வரூபனுமாய் ஜ்ஞாநகுணகனுமாயிருக்குற ஆத்மாவைச் சொல்லுகிறது என்கை.

**விளக்கம்** – பாத்மோத்தர புராணம் – பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேண இத்ரியாணி ச டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹங்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதி: உச்யதே ஆத்மாது ஸ மகாரேண பஞ்ச விம்ச: ப்ரகீர்த்தித: – க வர்க்கம் ஐந்தும் பஞ்சபூதங்கள், ச வர்க்கம் ஐந்தும் கர்மேந்திரியங்கள், ட வர்க்கம் ஐந்தும் ஞானேந்த்ரியங்கள், த வர்க்கம் ஐந்தும் பஞ்ச பூதங்களின் தன்மைகளான மணம் முதலியன, ப என்பது மனம், ப்ப என்பது அஹங்காரம், ப என்பது ப்ரக்ருதி, இருபத்து ஐந்தாம் தத்துவமான ஜீவன், இருபத்து ஐந்தாம்

அக்ஷரமான மகாரம் மூலம் கூறப்படுகிறான் – என்று கூறியது. ஆக ம என்பது ப்ரக்ருதியின் 24 தத்துவங்களைக் குறிக்கும் க முதல் ப வரை உள்ள 24 எழுத்துக்களையும் விட மாறுபட்டு, 25–ஆவது அக்ஷரமாக உள்ளது. மேலும் – மன ஞாநே – என்கிற தொடரில் இருந்தோ அல்லது, மனு அவபோதநே என்கிற தொடரில் இருந்தோ ம என்னும் எழுத்து பிறந்ததால், அந்த எழுத்து ஞானமயமாக உள்ள ஆத்மாவைக் குறிக்கிறது எனலாம். ஆக ஆத்மாவானது, 25–ஆவது தத்துவம் என்பதைக் கீழே உள்ள வரிகளில் அறியலாம்:

- பஞ்ச விம்சோ அயம் புருஷ: – இந்த 25–ஆவது என்பது புருஷனாகும்.
- பஞ்ச விம்ச ஆத்மாபவதி – ஆத்மா 25–ஆவது தத்துவம்

மேலும் ஆத்மாவானது ஞானமயமாகவே உள்ளது என்பதும், ஞானத்தையே குணமாகக் கொண்டுள்ளது என்பதையும் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- ப்ரச்ன உபனிஷத் – விஜ்ஞாநாத்மா புருஷ: – ஜீவன் ஞானத்தை உடையவன்.
- ப்ருஹத் உபனிஷத் – விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் – அதனை அதனுடைய ஞானம் என்ற குணம் கொண்டே அறியலாம்.

## 67. இதுதான் ஸமஷ்டிவாசகம்.

**அவதாரிகை** – கீழ்ச்சொன்ன சேஷத்வம் ஸர்வஸாதாரணமாகையாலே த்ரிவிதாத்மவர்க்கத்தையும் இதிலே சொல்ல வேண்டுமாகையாலே அருளிச்செய்கிறார், இதுதான் ஸமஷ்டிவாசகம் என்று.

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்ட அடிமைத்தனம் என்பது மூன்று வகையான ஆத்மாக்களுக்கும் (பத்தர், முக்தர், நித்யர்) பொதுவானது என்பதால் இந்த மூன்று ஆத்மாக்களையுமே மகாரம் குறிக்கிறது என்று கூற விரும்பி அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது இப்படி ஆத்மவாசகமான இம்மகாரந்தான் ஆத்மஸமஷ்டிக்கு வாசகம் என்கை.

**விளக்கம்** – ஜீவாத்மாவைக் குறிக்கும் ம என்பது, அனைத்து ஆத்மாக்களின் பிரிவையும் குறிக்கும்.

## 68. ஜாத்யேகவசநம்

**அவதாரிகை –** ஏகவசநம் ஸமஷ்டி வாசகமாமோ என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார், ஜாத்யேகவசநம் என்று.

**விளக்கம் –** மேலும் ஒருமையில் உள்ள சொல், எவ்விதம் பன்மையாக உள்ள ஆத்மாக்களை குறிக்கும் என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, வ்ரீஹிஸமூஹத்தைச் சொல்லுகிறவன் இது ஒரு நெல் என்றால், அந்த ஏகவசநம் ஜாதிபரமானாற்போலே, இதுவும் ஆத்மஜாதிபரமான ஏகவசநம் என்கை.

**விளக்கம் –** ஒரு நெற்குவியலைப் பார்த்து ஒருவன் – இது ஒரு நெல் – என்று கூறும்போது, அந்தப் பதம் ஒருமையில் இருந்தாலும் நெல் என்னும் ஜாதியைக் குறித்ததால், நெற்குவியலையே குறிப்பதாகும். இதே போன்று ம என்னும் பதம், ஆத்ம ஜாதியைச் சேர்ந்த அனைத்து ஆத்மாக்களையும் குறிக்கும்.

## 69. இத்தால், ஆத்மா ஜ்ஞாதாவென்று தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று.

**அவதாரிகை –** இம்மகரத்தால், ஆத்மாவினுடைய எவ்வாகாரஞ் சொல்லுகிறது என்ன, அருளிச்செய்கிறார் இத்தால் என்று தொடங்கி.

**விளக்கம் –** ம என்னும் எழுத்து ஆத்மாவின் எந்தத் தன்மையைக் குறிக்கிறது என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, பஞ்சவிம்சாக்ஷரமாய், ஜ்ஞாநவாசியுமாயிருந்துள்ள இம்மகாரத்தால், சேஷத்வாச்ரயமான ஆத்மா ஜ்ஞாநாச்ரயபூதனானவன் என்று அசேதநமான தேஹத்திற்காட்டில் ஆத்மாவின் வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று என்கை.

**விளக்கம் –** 25–ஆவது அக்ஷரமாகவும், ஞானத்தைக் குறிப்பதாகவும் உள்ள ம என்னும் எழுத்து – அடிமைத்தனத்திற்கு இருப்பிடமாக உள்ள ஆத்மாவானவன், ஞானத்திற்கும் இருப்பிடம் ஆவான் என்று விளக்குகிறது. இதனால் ம என்னும் எழுத்து, அசேதனமான உடலிற்கும், ஞானமயமான ஆத்மாவிற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறது எனலாம்.

## 70. தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்திலே சொன்னோம்.

**அவதாரிகை** – தேவோஹம், மநுஷ்யோஹம், ஸ்தூலோஹம், க்ருஸோஹம் என்று தேஹத்திலே அஹம்புத்தி வ்யவஹாரங்கள் நடவாநிற்க, அஹமர்த்தபூதனான ஆத்மா, தேஹத்தில் வ்யாவ்ருத்தனென்று சொல்லுகிறபடிதான் எங்ஙனே என்ன, அருளிச்செய்கிறார் தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்திலே சொன்னோம் என்று.

**விளக்கம்** – இந்த உலகில், நான் என்ற அர்த்தத்தை உடலிற்கு ஏற்றிக் கூறி – நான் தேவன், நான் மனிதன், நான் பருமன், நான் மெலியன் – என்று கூறுவதைக் காண்கிறோம். இப்படி உள்ளபோது, நான் என்பதற்கு விளக்கமாக, உடலைவிட மாறுப்பட்ட ஆத்மா என்பதை எவ்விதம் கூற இயலும்? இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அநேக ஹேதுக்களாலே தேஹத்தினுடைய அநாத்மத்வத்தை ஸாதியாநின்றுகொண்டு, ஆத்மாவினுடைய தத்வ்யாவ்ருத்தியைத் தத்வசேகரமாகிற ப்ரபந்தத்திலே வ்யக்தமாகச் சொன்னோம். அதிலே கண்டு கொள்வது என்கை.

**விளக்கம்** – பலவிதமான காரணங்களால் உடல் என்பது ஆத்மா அல்ல என்பதையும், ஆத்மாவானது உடலைவிட வேறுபட்டது என்பதையும், தத்வசேகரம் என்ற ப்ரபந்தத்தில் விரிவாகக் கூறினோம். அதில் கண்டு கொள்க.

## 71. மணத்தையும், ஒளியையுங்கொண்டு, பூவையும், ரத்நத்தையும் விரும்புமாபோலே, சேஷமென்று ஆத்மாவை ஆதரிக்கிறது அல்லாதபோது உயிரினாற்குறைவிலம் என்கிறபடியே த்யாஜ்யம், அது தோன்ற சேஷத்வத்தைச் சொல்லிப் பின்னை ஆத்மாவைச் சொல்லுலொறது.

**அவதாரிகை** – தர்மிஸ்வரூபகதந பூர்வகமாக தத்தர்மமான சேஷத்வத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்க, இப்ரணவந் தன்னிலே ப்ரதமம் சேஷத்வத்தைச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லுவானென்? என்கிற சங்கையிலே. அப்படி சொல்லுகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் மணத்தையும் இத்யாதி வாக்யத்ரயத்தாலே.

**விளக்கம்** – ஒரு பொருளைப் பற்றி முதலில் கூறிவிட்டு, அதன் பின்னர் அந்தப் பொருளின் தன்மைகளைக் கூறுவதே முறையாகும். இங்கு ஆத்மாவின் தன்மையான சேஷத்வத்தை முதலில் கூறி, அதன் பின்னர் அந்த சேஷத்வம் உடைய ஆத்மாவைப் பற்றிக் கூறுகிறார். இவ்விதம் வரிசை மாற்றி ஏன் கூறவேண்டும்? இந்தச் சந்தேகத்தை முன்னிட்டு இதற்கான காரணத்தை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மணத்துக்கு ஆச்ரயமென்று பூவை விரும்புமாபோலேயும், ஒளிக்கு ஆச்ரயமென்று ரத்நத்தை விரும்புமாபோலேயும், சேஷத்வத்துக்கு ஆச்ரயமென்றாயிற்று ஆத்மாவை ஆதரிக்கிறது, சேஷத்வாச்ரயமல்லாதபோது, உயிரினாற் குறைவிலம் என்று பகவச்சேஷத்வ ரஹிதமான ஆத்மாவால் அபேக்ஷையுடையோமல்லோம் என்கிறபடியே த்யாஜ்யனாய் விடுமித்தனை. இப்படியிருந்துள்ள சேஷத்வத்தின் ஊற்றந்தோற்ற, சேஷத்வத்தை முந்துறச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லிற்று – என்கை.

**விளக்கம்** – நறுமணம் கொண்டது என்று மலரை விரும்புவது போன்றும், ஒளியை உடையது என்று இரத்தினத்தை விரும்புவது போன்றும் – சேஷத்வம் உள்ளது என்ற காரணத்தினால்தான் ஆத்மாவைப் பற்றி அறிய விரும்புகின்றனர். ஆத்மாவிற்கு சேஷத்வம் இல்லை என்றால், நம்மாழ்வார் திருவாய்மொழியில் கூறியது போன்று (4–8–10) – உயிரினாற் குறைவிலம் – எம்பெருமானுக்கு அடிமையாக இல்லாத ஆத்மா அவசியம் இல்லை – என்பது போன்று அடிமைத்தனம் இல்லாத ஆத்மா கைவிடப்படவேண்டியதாகும். இப்படியாக அடிமைத்தனத்தின் முக்கியத்வத்தை வெளிப்படுத்துவதற்காகவே சேஷத்வம் முதலில் கூறப்பட்டு, பின்னர் ஆத்மா கூறப்பட்டது.

## 72. ஆக, ப்ரணவத்தால் கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியேனோ என்கிறபடியே ஜீவபரஸம்பந்தஞ் சொல்லிற்று.

**அவதாரிகை** – பதத்ரயாத்மகமான இப்ரணவத்தாற் சொல்லித் தலைக்கட்டின அர்த்தத்தை அருளிச்செய்கிறார், ஆக என்று தொடங்கி.

**விளக்கம்** – மூன்று எழுத்துக்களால் ஆன ப்ரணவத்திற்கு என்ன பொருள் என்று இதுவரை கூறி முடித்ததை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும், ப்ரணவத்தால் கண்ணபுரமொன்றுடையானுக்கு என்று சதுர்த்யந்தமான அகாரார்த்தத்தையும், அடியேன் என்று சேஷத்வாச்ரயவாசியான மகாரத்தில் அர்த்தத்தையும், ஒருவர்க்குரியேனோ என்று அந்யசேஷத்வ நிவர்த்தகமான உகாரார்த்தத்தையும் சொல்லாநின்று கொண்டு ப்ரணவார்த்தத்தை அனுஸந்தித்த திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே, ஜீவபரர்களுக்கு உண்டான சேஷசேஷிபாவ ஸம்பந்தத்தைச் சொல்லிற்று – என்கை.

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்ட ப்ரணவத்தின் பல அக்ஷரங்களின் அர்த்தம் மூலமாகக் கிடைத்த பொருளை, திருமங்கையாழ்வார் தனது பெரிய திருமொழியில் (8–9–3) – கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ – என்றார். இதில் கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு என்பதம் மூலம், நான்காம் வேற்றுமையை இறுதியில் கொண்ட அ என்ற எழுத்தின் பொருளையும், அடியேன் என்பதன் மூலம் சேஷத்வத்தை இலக்கணமாக உடைய ஜீவனைக் கூறும் ம என்ற எழுத்தையும், ஒருவர்க்கு உரியேனோ என்பதன் மூலம் மற்றவர்களுக்கு அடிமைப்படுவதை நீக்குகின்ற உ என்ற எழுத்தின்

பொருளையும் உணர்த்தினார். இப்படியாக ப்ரணவத்தின் பொருளை உணர்த்திய திருமங்கையாழ்வாரின் ஸ்ரீஸூக்திகளுக்கு ஏற்ப ஜீவன்–எம்பெருமான் ஆகியவர்களுக்கு இடையில் உள்ள சேஷ–சேஷி (அடிமை–எஜமான) ஸம்பந்தம் கூறப்பட்டது.

## 73. இத்தால் தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு என்றதாயிற்று.

**அவதாரிகை** – இன்னமும் பொய்கையாருடைய திவ்யஸூக்தியாலே சேஷத்வ ப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநம் என்னுமிடந்தோற்ற இந்த ஜீவபரஸம்பந்தத்தை அருளிச்செய்கிறார் இத்தால் தாமரையாள் கேள்வன் என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து பொய்கை ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தியில், ஜீவன் பெரியபிராட்டியாருடன் கூடிய எம்பெருமானுக்கு அடிமையானவன் என்பதன் மூலம், ஜீவன்–பரமாத்மா சம்பந்தத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்ரணவத்தால், தாமரையாள் கேள்வன் என்று அகாரவாச்யனாய் சேஷத்வப்ரதிஸம்பந்தியான ஸ்ரீய:பதியையும், ஒருவனையே நோக்கும் என்று சதுர்த்யுகாரங்களாற் சொல்லுகிற அநந்யார்ஹசேஷத்வ ப்ரயுக்தமான ஆத்மாவினுடைய ததேகபரதையையும், உணர்வு என்று அந்த சேஷத்வ ஆச்ரயமாகமகாரத்தாற் சொல்லப்பட்ட ஜ்ஞானைக நிரூபணீயனான ஆத்மாவையும் சொல்லுகிற ஸூக்தியிற்படியே, ஜீவபரஸம்பந்தம் சொல்லிற்றாயிற்று – என்கை.

**விளக்கம்** – இந்தப் ப்ரணவத்தால் கூறப்பட்ட பொருளை பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி (61) – தாமரையாள் கேள்வன் – என்பதன் மூலம் அருளிச்செய்தார். இதில் தாமரையாள் கேள்வன் என்ற பதங்கள் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்பவனும், அ என்னும் எழுத்தின் மூலம் விளக்கப்படுபவனும் ஆகிய பெரியபிராட்டியின் நாதனை குறிக்கும். ஒருவனையே நோக்கும் – என்ற பதங்கள் மூலம் நான்காம் வேற்றுமையாலும், உ என்ற எழுத்தின் மூலமும் கூறப்படும் மற்ற யாருக்கும் ஆத்மா அடிமையல்லன் என்பது கூறப்பட்டது. உணர்வு என்ற பதம் இப்படியாக சேஷத்வத்துடன் கூடியவனும், ம என்ற எழுத்தால் கூறப்பட்டவனும், அறிவைக் கொண்டு மட்டுமே நிரூபிக்க வேண்டுபவனாய் உள்ளவனும் ஆகிய ஆத்மா கூறப்பட்டான். இப்படியாக இந்தப் பாசுரம் மூலம் ஜீவ–பரமாத்மா ஸம்பந்தம் விளக்கப்பட்டது.

## 74. அகாரத்தாலும், மகாரத்தாலும், ரக்ஷகனையும், ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று, சதுர்த்தியாலும், உகாரத்தாலும் ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும் பலத்தையும் சொல்லிற்று.

**அவதாரிகை** – அகாரத்தில் ப்ரத்யயார்த்த ப்ரதாநமாக ப்ரணவார்த்தத்தை யோஜித்தார் கீழ், அதில் தாத்வர்த்தப்ரதாநமாக ப்ரணவத்துக்கு இன்னமும் ஒரு யோஜனை அருளிச்செய்கிறார், அகாரத்தாலும் என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை அ எழுத்தில் மறைந்துள்ள சேஷ–சேஷி ஸம்பந்தம் மூலமாக ப்ரணவத்தின் பொருளை விளக்கினார். இனி வேறு வகையில் ப்ரணவத்தின் பொருளை உணர்த்த உள்ளார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அகாரத்தாலே ரக்ஷகனான ஈச்வரனைச் சொல்லிற்று, மகாரத்தாலே தத்ரக்ஷ்யமான ஆத்மவஸ்துவைச் சொல்லிற்று, சதுர்த்தியாலே ரக்ஷிக்கைக்கு ஹேதுவான சேஷத்வமாகிற ப்ராப்தியைச் சொல்லிற்று, இப்படி ரக்ஷிக்கிறதற்குப் பலம் – இவ்வாத்மவஸ்து அத்தலைக்கு அநந்யார்ஹமாக விநியோகப்படுகையாகையாலே. அநந்யார்ஹசேஷத்வ வாசியான உகாரத்தாலே ரக்ஷணபலத்தைச் சொல்லிற்று – என்கை.

**விளக்கம்** – அ என்ற பதம் மூலம் ரக்ஷகனான ஈச்வரன் கூறப்பட்டான். ம என்ற எழுத்து மூலம் அவனால் ரக்ஷிக்கப்படும் ஆத்மா கூறப்பட்டான். நான்காம் வேற்றுமையால் எம்பெருமாள் ஜீவனை ரக்ஷிக்கக் காரணமாகிய ஜீவனுடைய அடிமைத்தனம் கூறப்பட்டது. இப்படி எம்பெருமான் ரக்ஷிப்பதற்குக் காரணம் என்னவெனில் – ஜீவன் எம்பெருமானைத் தவிர வேறு யாருக்கும் அடிமை அல்லன் என்பதனால் ஆகும். இத்தகைய ரக்ஷண பலம் என்பது உ என்ற எழுத்தால் கூறப்பட்டது.

## 75. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது.

**அவதாரிகை** – ஆக இம்மந்த்ரத்திற் ப்ரதமபதமான ப்ரணவார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. இனி மேலிற்பதங்களுக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக மந்த்ரசேஷமும் இதுக்கு விவரணமாயிருக்கும்படியை முந்துற அருளிச்செய்கிறார், இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது என்று.

**விளக்கம்** – இப்படியாகத் திருமந்திரத்தின் முதல் பதமான ப்ரணவம் விளக்கப்பட்டது. இனி அடுத்த இரண்டு பதங்களுக்கு (நமோ, நாராயணா) விளக்கம் அருளிச்செய்ய தொடங்கி, அந்த இரண்டு பதங்களும் ப்ரணவத்தை விளக்குவதாகவே உள்ளன என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – இவ்விடத்தில் விவரணமாகிறது, ப்ரஸ்துதமான அர்த்தத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தைச் சொல்லிக் கொண்டு பூர்வோக்தமான அர்த்தத்தை விசதீகரிக்கை என்று தீபப்ரகாசத்திலும், உக்தார்தத விசதீகாரயுக்தார்த்தாந்தர போதநம் மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம் என்று ரஹஸ்யத்ரயார்த்த விவரணக்ரமம் அருளிச்செய்த ப்ரபந்தத்திலும் விவரண லக்ஷணத்தை ஜீயரருளிச்செய்தாரிறே.

**விளக்கம் –** விவரணம் என்றால் கூறப்படும் அர்த்தத்திற்கு சரியான விளக்கம் கூறி, அதில் கூறப்பட்ட அர்த்தத்தை தெளிவுபடுத்துதல் ஆகும். இந்த விஷயத்தை வாதிகேஸரி ஜீயர் தனது தீபப்ரகாசத்தில் – உக்தார்தத விசதீகாரயுக்தார்த்தாந்தர போதநம் மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம் – கூறப்படும் பொருளை நன்கு தெளிவுபடுத்தி, தகுந்த அர்த்தத்தை உணர்த்துவதே வ்யாக்யானம் எனப்படும் என்பது பெரியவர்களின் கருத்து – என்று ரஹஸ்யத்ரய விவரணத்திலும் அருளிச் செய்தார் அன்றோ?

76. உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு: அகாரத்தை விவரிக்கிறது நாராயணபதம்; மகாரத்தை விவரிக்கிறது சதுர்த்தி; நாரபதமென்றுஞ் சொல்லுவார்கள்.

**அவதாரிகை** – விவரிக்கிறபடிதான் எங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார் – உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு என்று தொடங்கி.

**விளக்கம்** – திருமந்திரத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது பதங்கள் ப்ரணவத்தை எவ்விதம் விளக்குகின்றன என்று அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அந்யசேஷத்வத்வத்தைக் கழிக்கிறவிடத்தில் அந்யரிலே அந்யதமனாகச் சொல்லப்பட்ட தன்னை வெளியாகச் சொல்லிக் கழிக்கையாலே உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு; ரக்ஷகனான ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும், ரக்ஷ்யபூத சேதநாசேதநங்களையும் ரக்ஷணோபயோகியான குணாதிகளையும் ரக்ஷண ப்ரகாரத்தையும் விசதமாகச் சொல்லுகையாலே, அகாரத்தை விவரிக்கிறது நாராயண பதம்; நாகிஞ்சிதகுர்வதச்சேஷத்வம், அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுப்பத்தி: என்கிறபடியே கிஞ்சித்கார மில்லாதபோது சேஷத்வஸித்தி இல்லாமையால் தத் ஸித்திக்கு உறுப்பான கிஞ்சித்காரத்தை ப்ரதிபாதிக்கிற சதுர்த்தி, சேஷத்வாச்ரயமான ஆத்மவஸ்துவைச் சொல்லுகிற மகாரத்தை விவரிக்கிறது. மகார வச்யனான ஆத்மாவினுடைய நித்யத்வம், ஏகரூபத்வம், பஹுத்வம் தொடக்கமானவற்றை ப்ரதிபாதிக்கையாலே மகாரத்தை விவரிக்கிறது நாரபதமென்றுஞ் சொல்லுவார்கள் என்கை.

**விளக்கம் -** மற்றவர்களுக்கு ஜீவன் அடிமை அல்லன் என்று கூறுவதன் மூலம் தன்னையும் மற்றவர்களுடனையே சேர்த்துக் கொண்டு, தனக்குத் தானே அடிமைப்பட்டவன் என்ற எண்ணத்தை உகாரம் நீக்குகிறது. ஆகவே நம: என்ற பதம் உ என்னும் எழுத்தை விவரிப்பதாக உள்ளது. நாராயணா என்ற பதம் - அனைத்தையும் காக்கும் ஈச்வரனுடைய ஸ்வரூபம், அவனால் ரக்ஷிக்கப்படும் சேதன அசேதனங்கள், அவ்விதம் ரக்ஷிக்க அவனுக்குத் துணையாக உள்ள திருக்கல்யாண குணங்கள் மற்றும் ரக்ஷிக்கும் முறை –

ஆகியவற்றைக் கூறுகிறது. ஆக நாராயண என்ற பதம் அ என்னும் எழுத்தை விளக்குவதாக உள்ளது.

- மீமாம்ஸ வாக்யம் - நாகிஞ்சிதகுர்வதச்சேஷத்வம் – கைங்கர்யம் செய்யாமல் அடிமைத்தனம் இல்லை.
- மீமாம்ஸ வாக்யம் - அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுப்பத்தி: - கைங்கர்யம் செய்யாதவன் அடிமைத்தனத்தில் முழுமை பெற மாட்டான்.

மேலே உள்ள வரிகளின்படி, கைங்கர்யம் செய்யாமல் அடிமைத்தனம் இல்லை என்றாகிறது. ஆக "ஆய" என்னும் நான்காம் வேற்றுமையானது, அடிமைத்தனத்திற்கு இலக்காக உள்ள ஜீவனைக் குறிக்கிறது. இதன் மூலம் இந்த நான்காம் வேற்றுமையானது ம என்னும் எழுத்தை விளக்குகிறது எனலாம். ஒரு சிலர் "நார" என்ற பதம் ம என்னும் எழுத்தின் விளக்கமாக உள்ளதாகவும் கொள்வார்கள். இதன் மூலம் ஆத்மா நித்யமானது, ஒரே தன்மை உடையது, பல உள்ளது போன்றவை வெளிப்படுகின்றன.

77. அடைவே விவரியாதொழிகிறது விரோதி போய் அநுபவிக்க வேண்டுகையாலே.

**அவதாரிகை** – அக்ஷரக்ரமத்திலே விவரியாதே வ்யுத்க்ரம்மாக விவரிப்பானேன் என்ன, அருளிச் செய்கிறார், அடைவே என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே உள்ள சூர்ணையில் பரணவத்தின் எழுத்துக்களான அ, உ, ம என்பதை அதே வரிசையில் கூறாமல் ஏன் மாற்றிக்கூறவேண்டும்? இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அக்ஷரக்ரமத்திலே விவரியாதொழிகிறது – அகார விவரணமான நாராயணபதத்தில் பகவதநுபவத்துக்கு விரோதியான அஹங்கார மமகாராதிகள் நமஸ்ஸாலே கழியுண்டு போய்ப் பின்னை அநுபவிக்க வேண்டுகையாலே என்கை.

**விளக்கம்** - அந்த வரிசைப்படி கூறாமல் ஏன் மாற்றப்பட்டது என்றால் – நாராயணா என்ற பதத்தின் மூலம் கூறப்படும் ஈச்வர அனுபவத்திற்குத் தடை ஏற்படுத்த வல்லதான அஹங்காரத்தையும் (நான் என்ற எண்ணம்), மமகாரத்தையும் (என்னுடையது என்ற எண்ணம்) விலக்க வேண்டும் என்பதற்காக ஆகும். பகவத் அனுபவம் ஏற்படாமல் தடுக்கும் விரோதிகளான இவை கழிந்த பின்னர் பகவத் அனுபவம் ஏற்படுகிறது.

78. நமஸ்ஸு "ந" என்றும், "ம:" என்னும் இரண்டு பதம்.

**அவதாரிகை** – இனி, மத்யமபதமான நமஸ்ஸுக்கு அர்த்தம் அருளிச் செய்வதாக, அதில் அவாந்தரபதபேதத்தை அருளிச் செய்கிறார், நமஸ்ஸு "ந" என்றும், "ம:" என்னும் இரண்டு பதம், என்று.

**விளக்கம்** - அடுத்து நடுவில் உள்ள பதமான "நம:" என்பதற்குப் பொருள் அருளிச் செய்ய தொடங்கி, அந்தப் பதத்தை "ந" என்றும், "ம:" என்றும் இரண்டாக பிரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – (தனியாக ஏதும் இல்லை).

79. "ம:" என்கிற இத்தால் , "தனக்கு உரியன் என்கிறது; "ந" என்று அத்தைத் தவிர்க்கிறது.

**அவதாரிகை** - இவ்விரண்டு பதங்களுக்கு அர்த்தம் எது? என்று அருளிச்செய்கிறார், ம: என்கிற இத்தால், என்று தொடங்கி.

**விளக்கம்** - இரண்டு பதங்களின் பொருள் என்ன என்று அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, "ம:" என்று ஷஷ்ட்யந்தமான இம்மகாரத்தால், மகாரவாச்யனான ஆத்மாவுக்குக் கீழ்ச்சொன்ன தாதர்த்ய ப்ரதிகோடியான ஸ்வார்த்தத்வம் தோற்றுகையாலே "தனக்கு உரியவன்" என்னுமத்தைச் சொல்லுகிறது; "ந" என்று நிஷேதவாசியான நஞ்ஞாலே அத்தைக் கழிக்கிறது என்கை.

**விளக்கம்** – "ம:" என்ற பதம் ம என்பதன் ஆறாம் வேற்றுமையாகும். இந்தப் பதம் மூலம் ம என்ற எழுத்தால் கூறப்பட்ட ஜீவன், தனக்குத்தானே உரியவன் என்ற பொருளை அளிக்கிறது. ஆனால் "ந" என்ற பதம் இதனை மறுத்துவிடுகிறது.

80. ஆக "நம" என்கிற இத்தால், "தனக்கு உரியனன்று" என்கிறது.

**அவதாரிகை** – உபயபதத்தாலும் சொன்ன அர்த்தத்தைச் சேரப் பிடித்து அருளிச்செய்கிறார், " ஆக "நம" என்கிற இத்தால், "தனக்கு உரியனன்று" என்கிறது", என்று.

**விளக்கம் -** இரண்டு பதங்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பொருள் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – பதக்ரமத்திலே அர்த்தஞ்செல்லாதே, வ்யுத்கர்மமாகச் சொல்லுகிறது நிஷேத்யத்தைச் சொல்லி நிஷேதிக்க வேண்டுகையாலே; க்ரமத்திலே சொல்லும்போது "வீடுமின் முற்றவும்" என்னுமாபோலே, நிஷேதபூர்வகமாக நிஷேத்யத்தைச் சொல்லுகிறதென்று யோஜிக்கவேணும். அது தானும் பரந்தபடியிலே இவர் தாமே அருளிச்செய்தார்.

**விளக்கம் -** மேலே உய்ள்ல சூர்ணையில் "நம:" என்ற பதத்திற்குப் பொருள் கூறும்போது, வரிசை மாற்றிப் (ம:, ந) பொருள் கூறியது காண்க. இது ஏன் என்றால் - முதலில் எந்த விஷயத்தை விலக்க வேண்டுமோ அதனை கூறவேண்டும்; அதன் பின்னர், அந்த விஷயத்தை விலக்க வேண்டும் என்று கூறுவதே சரியான முறையாகும். இப்படி அல்லாமல் முதலில் விலக்க வேண்டும் என்று கூறி, அதன் பின்னர் விலக்கவேண்டிய பொருளைக் கூறுவதும் உண்டு. இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-2-1) - வீடு மின் முற்றமும் – என்பதன் மூலம், முதலில் "வீடுமின்" என்று விலக்க வேண்டும் என்பதைக் கூறி, அதன் பின்னர் "முற்றவும்" என்று விலக்க வேண்டிய விஷயத்தை கூறியது காண்க. இதனைப் பரந்தபடியில் இவரே (பிள்ளைலோகாசார்யர்) அருளிச் செய்ததில் கண்டு கொள்க.

81. பிறர்க்கு உரியனான அன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம்; தனக்கென்றுமன்று யோக்யதையுங்கூட அழியும்.

**அவதாரிகை -** தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்று அந்யசேஷத்வத்தை நிஷேதித்த உகாரத்தை விவரிக்கிறதாகில், பிறர்க்கு உரித்தன்றென்றத்தையும் விவரியாமல், தனக்குரியனன்று என்று இத்தையே விவரிப்பானேன்? என்கிற சங்கையிலே அருளிச் செய்கிறார் - பிறர்க்கு உரியனானவன்று - என்று தொடங்கி.

**விளக்கம் -** உகாரம் என்பது ஜீவன், தனக்கும் பிறர்க்கும் உரியவன் அல்லன் என்பதைக் கூறி, மற்றவர்களுக்கு அடிமை அல்லன் என்பதை விவரிக்கிறது. நம: என்பது உகாரத்தை விவரிக்கிறது என்றால், இதன் மூலம் "ஜீவன் தனக்கு உரியவன் அல்லன்" என்பது மட்டும் மீண்டும் கூறப்பட்டு, "ஜீவன் மற்றவர்களுக்கு உரியவன் அல்லன்", என்பது ஏன் கூறாமல் விடப்பட்டது? இதற்கான விடையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அந்யசேஷபூதனான அன்று, சேஷத்வத்துக்கு இசைகையாலே, அந்யரிற்காட்டில் தனக்கு உண்டான ஸர்வகாரணத்வ ஸர்வரக்ஷகத்வ ஸர்வ சேஷித்வாதியான வைலக்ஷண்யத்தைக் காட்டி, அந்நிலையில் நின்றும் மீட்கலாம். தனக்குரியவன் என்று நிற்குமன்று, த்வம் மே என்றால், அஹம் மே என்னுமது ஒழிய சேஷத்வத்துக்கு இசையாமையாலே, மீட்கைக்கு யோக்யதையுங்கூட இல்லையாய்விடும் – என்கை.

**விளக்கம் –** ஜீவன், "மற்றவர்களுக்குத் தான் அடிமைப்பட்டவன்", என்று எண்ணும்போது, அவன் தனக்குத்தானே அடிமைப்படுதல் என்ற தன்மை மறைமுகமாக உள்ளது என்பது புலப்படுகிறது. அப்படிப்பட்ட எண்ணம் கொண்ட அவனை ஸர்வேச்வரன் மிகவும் எளிதாகத் தனக்கே உரித்தான அனைத்தின் காரணம் (ஸர்வகாரணத்வம்), அனைத்தையும் காக்கும் தன்மை (ஸர்வரக்ஷகத்வம்), அனைத்திற்கும் எஜமான்னாக உள்ள தன்மை (ஸர்வசேஷித்வம்) போன்றவற்றைக் காண்பித்துத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள முடியும். ஆனால் அந்த ஜீவன், "தனக்கே தான் அடிமை", என்ற எண்ணத்துடன் இருந்தால் என்றால் நடப்பது என்ன? எம்பெருமான் அவனிடம் - த்வம் மே - நீ எனக்கு உரியவன் – என்றால், அதற்கு ஜீவன் – அஹம் மே - நான் எனக்கே உரியவன் – என்று கூறி, மறுத்து விடுவான். அதன் பின்னர் அந்த ஜீவனை வசப்படுத்தல் என்பது கிகவும் கடினமாகும்.

82. இத்தால் விரோதியைக் கழிக்கிறது.

**அவதாரிகை –** இந் நமஸ்ஸால் செய்கிற அம்ஸந்தான் எது ? என்ன அருளிச்செய்கிறார் - இத்தால் விரோதியைக் கழிக்கிறது – என்று.

**விளக்கம் -** நம: என்பதன் மூலம் என்ன நிகழ்கிறது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். இதன் மூலம் ஜீவனின் விரோதிகள் நீங்குகின்றன.

83. விரோதிதான் மூன்று.

**அவதாரிகை -** இதுதான் ஒன்றோ? பலவோ? என்ன அருளிச்செய்கிறார் - விரோதிதான் மூன்று – என்று.

**விளக்கம் -** ஜீவனின் விரோதிகள் ஒன்றா அல்லது பல உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். விரோதிகள் மூன்றாகும்.

84. அதாவது, ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும்.

**அவதாரிகை -** அம்மூன்றுதான் எது? என்ன அருளிச்செய்கிறார் - அதாவது, ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும் – என்று.

**விளக்கம் –** அந்த மூன்று விரோதிகள் எவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** இத்தால் ப்ரதமபதத்திற் சொன்ன ஸ்வரூபத்துக்கு விரோதியும், இப்பதத்தில் ஆர்த்தமாக ஸித்திக்கிற உபாயத்துக்கு விரோதியும், உத்தரபதத்தில் சொல்லுகிற ப்ராப்யத்துக்கு விரோதியுமென்கை. இந்நமஸ்ஸுதான் காகாக்ஷி ந்யாயத்தாலே பூர்வோத்தர பதங்களிற் சொல்லுகிற ஸ்வரூப ப்ராப்யங்களினுடைய விரோதிகளைக் கழிக்கக் கடவதாயிறே இருப்பது.

**விளக்கம் -** இவையாவன – ப்ரணவத்தின் மூலம் உணர்த்தப்பட்ட ஆத்மாவினுடைய ஸ்வருபத்தின் விரோதி, நம: என்ற பதத்தின் மூலம் உணர்த்தப்பட்ட "ஜீவனுக்கு ஸர்வேச்வரனே உபாயம்" என்ற எண்ணத்திற்கான விரோதி, நாராயணாய என்ற பதத்தின் மூலம் உணர்த்தப்படும் கருத்தான "கைங்கர்யமே ஜீவனின் குறிக்கோள்" என்பதற்கான விரோதி – ஆகிய மூன்றும் ஆகும். காக்கையின் ஒரே கண்விழியானது அதன் இரண்டு கண்கள் வழியாகவும் காண்பது போன்று, நம: என்ற ஒரே பதமானது ஸ்வரூபம் மற்றும் ப்ராப்யம் (முதல் மற்றும் மூன்றாம் விரோதிகள்) ஆகிய இரண்டையும் விளக்குகிறது.

85. ஸ்வரூப விரோதி கழிகையாவது - யானே நீ என்னுடைமையும் நீயே என்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது - களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் - என்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகையாவது - மற்றை நங்காமங்கள் மாற்று என்றிருக்கை.

**அவதாரிகை** - இவ்விரோதித்ரயமும் கழிகையாவதுதான் எது? என்ன - அது தன்னை அடைவே அருளிச்செய்கிறார், மேல் மூன்று வாக்யத்தாலே.

**விளக்கம்** - இந்த மூன்று விரோதிகளும் நீங்குதல் என்பது என்ன? என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ஸ்வரூப விரோதி இத்யாதி - அதாவது ஸ்வரூபத்துக்கு விரோதி - யானே என்தனதே - என்றிருக்கையாகையாலே. அது கழிகையாவது – யானே நீயென்னுடைமையும் நீயே - என்று ஆத்ம ஆத்மீயங்கள் இரண்டும் அத்தலைக்கு ப்ரகாரதயா சேஷம் என்றிருக்கை – என்கை. உபாய விரோதி இத்யாதி - அதாவது உபாயத்துக்கு விரோதி ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகையாலே, அது கழிகையாவது – களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் என்று – துக்கத்தைப் போக்குவாய் போக்காதொழிவாய், வேறோரு ரக்ஷக வஸ்துவையுடையேனல்லேன் என்றிருக்கை - என்கை. ப்ராப்திவிரோதி இத்யாதி – அதாவது, ப்ராப்யத்துக்கு விரோதி ஸ்வப்ரயோஜந புத்தியாகியாலே, அது கழிகையாவது – மற்றை நங்காமங்கள் மாற்று என்று - உன்னுகப்புக்குப் புறம்பான எங்களுடைய ஆசையைப் போக்கு – என்றிருக்கை – என்கை.

**விளக்கம்** - ஜீவனின் ஸ்வரூபத்திற்கான விரோதி என்பது திருவாய்மொழியில் (2-9-9) - கூறப்பட்டபடி – யானே என் தனதே - நான் எனக்கு உரியவன் என்ற எண்ணம் ஆகும். இந்த எண்ணம் எவ்விதம் நீங்கும் என்றால், திருவாய்மொழி (2-9-9) கூறுவது போல் - யானே நீ என் உடைமையும் நீயே – என்று தானும் தன்னைச் சேர்ந்தவையும் ஸர்வேச்வரனுக்கு உரிமை என்று கூறுவதன் மூலம் ஆகும். உபாய விரோதி என்பது - தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முயல்வது ஆகும். இந்த விரோதி எவ்விதம் கழியும் என்றால், திருவாய்மொழி கூறுவது போல் (5-8-8) – களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன் – என்பதற்கு ஏற்ப – என்னுடைய துயரத்தை நீ

நீக்கினாலும் நீக்காவிட்டாலும், நான் உன்னைத் தவிர வேறு யாரையும் நாடமாட்டேன் – என்ற சிந்தனையுடன் இருக்கும் நிலையாகும். ப்ராப்ய விரோதி என்பது, தனக்குப் பயன்படும்படியான செயலைச் செய்து கொள்வது ஆகும். இது எப்படிக் கழியும் என்றால், திருப்பாவை (30) - மற்றை நம் காமங்கள் மாற்று – என்பதற்கு ஏற்ப - உன்னை மகிழ்விப்பது தவிர எங்களுக்கு உள்ள மற்ற ஆசைகளை விலக்குவாயாக – என்ற சிந்தனையுடன் இருப்பது ஆகும்.

86 “ம:” என்கை ஸ்வரூபநாசம், ”நம” என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்.

**அவதாரிகை** – இப்படி ஸ்வரூபோபாய புருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே. அதினுடைய க்ரௌர்யத்தையும் தந்நிவ்ருத்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார் - “ம:” என்கை ஸ்வரூபநாசம், ”நம” என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம் – என்று.

**விளக்கம்** – இப்படியாக, ஜீவன் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமை என்றுள்ள ஜீவனின் ஸ்வரூபம், ஸர்வேச்வரனை மட்டுமே சரணம் என்று கொண்டுள்ள உபாயம், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்கின்ற புருஷார்த்தம் என்ற இந்த மூன்றுக்கும் விரோதியாக இருப்பவை - ஜீவனின் அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகும். இவற்றின் தீய தன்மையையும், இந்த எண்ணங்கள் விலகினால் உண்டாக்ககூடிய நன்மையையும் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம் என்கிறபடி, ம: என்கிற இதிலே அஹங்கார மமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலே அந்விதனாகை – இவ்வாத்மா வினுடைய ஸ்வரூபத்துக்கு நாசம்; நம என்ற அதில் அந்வயமற்றிருக்கை – ஸ்வரூபத்திற்கு உஜ்ஜீவநம் – என்கை. த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருதயுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச சாஸ்வதம் என்னக்கடவதிறே.

**விளக்கம்** - அஹிர்புத்ய ஸம்ஹிதை - சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம் - தன்னைக் குறித்தும், தன்னிடம் உள்ள பொருள்களைக் குறித்தும், ”என்னுடையது” என்ற எண்ணம் உண்டாகும்போது மம என்னும் பதங்கள் மமகாரத்தைக் குறிக்கிறது - என்று கூறியது.

இதன் மூலம் ம: என்ற பதத்தில், அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகிய இரண்டுமே அடக்கம் என்பது தெளிவாகிறது. அதில் ஈடுபட்டுள்ள ஜீவனின் ஸ்வரூபமானது, நாசம் அடைகிறது. நம: என்ற பதமானது, அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகியவற்றின் தொடர்புகளை விளக்கி, ஜீவனின் ஸ்வரூபத்தைக் காக்க வல்லது ஆகும். மஹாபாரதம் – த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச சாஸ்வதம் – இரண்டு அக்ஷரங்கள் (மம) ஆத்மாவிற்கு எமன் போன்றது; மூன்று அஷரங்கள் ப்ரஹ்மத்தின் இருப்பிடத்தை அளிப்பது, மூன்று அக்ஷரங்கள் "ந மம" என்று கூறியது.

87. இதுதான் - ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.

**அவதாரிகை** - இப்படி ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதிகளைக் கழிக்கிற அளவன்றிக்கே, இந்நமஸ்ஸுதான் ஸ்வரூபாதி த்ரயத்தையும் ப்ரகாஸிப்பிக்கும் என்கிறார் - இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும் - என்று.

**விளக்கம்** - ஸ்வரூபம், உபாயம் மற்றும் புருஷார்த்தம் ஆகிய மூன்றின் விரோதிகள் அழிவது மட்டுமே போதாது. நம: என்னும் பதம், இந்த மூன்றையும் மேலும் ப்ரகாசப்படுத்தவல்லது என்று அருளிச்செய்கிறார்.

88. "தொலைவில்லி மங்கலந் தொழும்" என்கையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று; "வேங்கடத்து உறைவார்க்கு நம" என்கையாலே, உபாயம் சொல்லிற்று; "அந்தி தொழுஞ்சொல்" என்கையாலே, பலம் சொல்லிற்று.

**அவதாரிகை** – இது தன்னை உபபாதிக்கிறார், மேல் மூன்று வாக்யத்திலே.

விளக்கம் - சூர்ணை 86-ல் கூறியதை, இனி வரும் மூன்று சூர்ணைகளில் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – "தொலைவில்லி மங்கலம்" இத்யாதி: அதாவது – "தொலைவில்லி மங்கலந் தொழும்" என்று அவனுகந்தருளின நிலத்தளவும் செல்ல சேஷமாயிருக்கும்படியைச் சொல்லுகிறவளவில் "தொழும்" என்று நமஸ்காரத்தைச் சொல்லுகையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று என்கை. "வேங்கடத்து" இத்யாதி: அதாவது "வேங்கடத்து உறைவார்க்கு நம" என்று "திருவேங்கடமுடையானுக்கு சேஷம் நான்; எனக்குரியேனல்லேன்", என்று ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூப பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயமென்னுமிடம் ஸித்திக்கையலே உபாயம் சொல்லிற்று என்கை. "அந்தி தொழுஞ்சொல்" இத்யாதி: அதாவது "அந்தி தொழுஞ்சொல்" என்று தாஸ்யரஸம்

அதிசயித்தால் அதனுடைய சரமதசையிலே சொல்லக்கடவ "தொழுஞ்சொல்" என்று நமச்சப்தத்தைச் சொல்லுகையாலே பலம் சொல்லிற்று என்கை.

**விளக்கம்** - திருவாய்மொழி (6-5-1) – தொலைவில்லி மங்கலந் தொழும் - என்பதன் மூலம் எம்பெருமான் மிகவும் மகிழ்ந்தபடி வாசம் செய்யும் திவ்ய தேசத்தை அடைந்து துடிக்கும் ஜீவனின் தன்மையைக் கூறுகிறார். இங்கு உள்ள "தொழும்" என்ற பதம், நமஸ்காரத்தைக் கூறுவதால் இது ஜீவனின் ஸ்வரூபத்தை விளக்குகிறது. திருவாய்மொழி (3-3-6) – வேங்கடத்து உறைவார்க்கு நம - என்பதன் மூலம், "நான் திருவேங்கடமுடையானுக்கே அடிமை, நான் எனக்கு உரியவன் அல்லன்", என்ற எண்ணம் வெளிப்படுகிறது. இதன் மூலம், தான் அவனையே அண்டி உள்ளதும், தன்னைக் காத்துக் கொள்ள தனக்குத் தகுதி இல்லை என்று எண்ணுவதும் வெளிப்படுவதால், உபாயம் என்பதும் நம என்ற பதத்தால் கூறப்பட்டது. திருவாய்மொழி (10-8-7) - அந்தி தொழும் சொல் – என்பதன் மூலம், அவனுக்குக் கைங்கர்யம் செய்வதன் மூலம் பெரும் ஆனந்தம் விளைவதைக் கூறி, நம என்ற பதத்தின் மூலம் அவனுடைய மகிழ்ச்சிக்கே உள்ள கைங்கர்ய பலம் கூறப்படுகிறது.

89. "உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்கிறபடியே இதிலே பாகவதசேஷத்வமும் அநுஸந்தேயம்.

**அவதாரிகை** - இப்பதத்திலே, ததீயசேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேய மாகையாலே, அத்தை அருளிச் செய்கிறார் – உற்றதும் - என்று தொடங்கி.

**விளக்கம்** – நம: என்ற பதத்தின் மூலம் எம்பெருமானுக்கு மட்டுமே அல்லாமல் அவனது அடியார்களுக்கும் வசப்பட்டிருத்தல் உணர்த்தப்படுகிறது என்னும் இந்தக் கருத்தை விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது "நின் திருவெட்டெழுத்துங்கற்று நானுற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்று திருமந்திரங் கற்றத்தால் நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை என்னும் இவ்வர்த்தத்திலே என்கிறபடியே, அஹங்கார மமகாரங்கள் நிவ்ருத்தமாய், பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்நமஸ்ஸிலே தத்காஷ்டையான பாகவத சேஷத்வமும் அநுஸந்திக்கவேணும் என்கை.

**விளக்கம்** - பெரிய திருமொழி (8-10-3) - நின் திருவெட்டெழுத்துங்கற்று நானுற்றதும் உன்னடியார்க்கு அடிமை – எட்டு எழுத்து கொண்ட உன்னுடைய திருநாமத்தை நான் கற்றேன், அதன் மூலம் உன் அடியார்க்கும் அடிமையானேன் – என்றது. இதன் கருத்து – எட்டு எழுத்து கொண்ட திருமந்திரத்தின் உட்பொருள், அவனது அடியார்களுக்கும்

அடிமைப்பட்டு இருப்பதே என்பதாகும். இதன்படி, நம: என்ற பதம் மூலம், அஹங்காரம் மமகாரம் நீங்கப்பெற்று, எம்பெருமானுக்கு அடிமை என்று உணர்தப்பட்டாலும், நம: என்பதன் மூலம், அவனது அடியார்களுக்கு அடிமைப்பட்டிருத்தலும் உணர்த்தப்படுவதை அறியவேண்டும்.

90. இது அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்தில் என்றுஞ் சொல்லுவர்கள்.

**அவதாரிகை** – இப்படி ஆர்த்தமாக அநுஸந்திக்கப்படும் பாகவத சேஷத்வந்தான், இந்நமஸ்ஸிலன்றிக்கே ஸ்தலாந்தரங்களிலே சொல்லுவாருமுண்டாகையாலே, அத்தை அருளிச்செய்கிரார் - இது அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்தில் என்றுஞ் சொல்லுவர்கள் – என்று.

**விளக்கம்** – நம: என்ற பதம் மூலம் உணரப்படுகின்ற அடியார்களுக்கும் அடிமை என்ற கருத்தானது, இந்தப் பதம் மூலம் மட்டும் அல்லாமல், வேறு இடத்திலும் உணர்த்தப்படுகிறது என்று சிலர் கூறுவார்கள். அதனை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது சதுர்த்தியாலே ஆத்மாவினுடைய பகவச்சேஷத்வத்தைச் சொல்லுகையாலே, பகவச்சேஷத்வகாஷ்டையான இந்த பாகவத சேஷத்வாநுஸந்தாநம் அகாரத்திலேயென்றும் சிலர் சொல்லுவார்கள். அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு எல்லை ததீய சேஷத்வ பர்யந்தமாக நிற்கையாகையாலே, அநந்யார்ஹத்வ ப்ரதிபாதகமான உகாரத்திலேயென்றும் சிலர் சொல்லுவார்கள் என்கை. ஆர்த்தமாகையாலே, அவ்வவஸ் தலங்களிலும் சொல்லலாயிருந் தேயாகிலும் கந்தல் கழிந்தவிடத்திலே சொல்லுகையே உசிதமென்று கருத்து.

**விளக்கம்** - ப்ரணவத்தில் உள்ள அகாரத்தில் காணப்படும் நான்காம் வேற்றுமை மூலம், ஜீவன் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவன் என்பதை மேலும் விரிவுபடுத்தி, அந்த அடிமைத்தனத்தின் எல்லை நிலமாக, அடியார்க்கு அடிமை என்பது, அகாரத்தில் வெளிப்படுவதாக சிலர் கூறுவார்கள். உகாரத்தின் மூலம் – நான் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவன் – என்பது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அவனது அடியார்களைத் தவிர வேறு யாருக்கும் அடிமைப்பட்டவன் அல்லன் என்பதை உகாரம் விளக்குவதாகச் சிலர் கூறுவர். "அடியார்களுக்கும் அடிமை" என்னும் இந்தக் கருத்து, அகாரம் மற்றும் உகாரம் ஆகியவற்றின் மூலமும் கூறப்பட்டிருந்தபோதிலும், நம: என்ற பதம் மூலம் மட்டுமே, அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகிய விரோதிகள் கழிவதால், நம: என்ற பதத்தின் உட்பொருளாக இந்தக் கருத்தைக் கொள்வது சிறந்தது.

91. "ஈஸ்வரன் தனக்கேயாயிருக்கும்; அசித்துப் பிறர்க்கேயாயிருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும் " என்று முற்பட்ட நினைவு; அங்ஙனன்றிக்கே, அசித்தைப் போலே தனக்கேயாக எனைக் கொள்ளவேணுமென்கிறது நமஸ்ஸால்.

**அவதாரிகை** – இந்நமஸ்ஸுக்குப் பூர்வத்திற் பிறந்த ப்ரதிபத்தியைப் பற்ற இதிற் பிறந்த ப்ரபத்திக்குண்டான வாசியை அருளிச் செய்கிறார் - ஈஸ்வரன் தனக்கேயாயிருக்கும் – என்று தொடங்கி.

**விளக்கம்** – நம: என்ற பதத்தின் பொருளை உணர்ந்து கொள்வதற்கு முன்பாக ஜீவன் உள்ள நிலை, அந்தப் பதத்தை அறிந்து கொண்ட பின்னர் ஜீவன் உள்ள நிலை ஆகியவற்றை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஸ்வரூபம் ஸ்வாதந்தர்யம் பகவத:" என்கிறபடியே, ஸ்வாதந்தர்யமே ஸ்வரூபமான ஈச்வரன் ஸ்வார்த்தபரனாயே இருக்கும்; சைதந்ய ரஹிதமாகையாலே தனக்கே என்கைக்கு யோக்யதையின்றிக்கே பாரதந்தர்ய ஸ்வரூபமாயிருக்கும் அசித்து, பரார்த்தமாயே இருக்கும். சதுர்த்தியிற் சொன்ன சேஷத்வத்தையும், மகாரத்திற் சொன்ன ஜ்ஞாத்ருத்வத்தையும் உடையனான ஆத்மா ஜ்ஞாத்ருத்வ பலத்தாலே, ஸ்வார்த்ததைக்கும் சேஷத்வத்தாலே பரார்த்ததைக்கும் பொதுவாயிருக்கும் என்று, நமஸ்ஸுக்குப் பூர்வபதத்திற் பிறந்த ப்ரதிபத்தி; அப்படி யின்றிக்கே, பரார்த்ததைக வேஷமான அசித்துப் போலே, "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே, அத்தலைக்கே ரஸமாம்படி விநியோகங் கொள்ள வேணும் என்று அபேக்ஷிக்கிறது இந்நமஸ்ஸாலே – என்கை.

**விளக்கம்** – ஸ்ரீகுணரத்நகோசத்தில் (28) - ஸ்வரூபம் ஸ்வாதந்த்ரியம் பகவத: - சுதந்திரமாக உள்ளதே பகவானின் ஸ்வரூபம் – என்று கூறப்பட்டது. இதன்படி, சுதந்திரத்தையே தனது

இயல்பாகக் கொண்ட ஸர்வேச்வரன், அனைத்தையும் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்றபடியே நடத்தும் தன்மை கொண்டவன் ஆவான். அறிவு இல்லாத காரணத்தாலும், தனது விருப்பம் எது என்பதை அறியாத காரணத்தாலும் அசித் வஸ்துக்கள் பாரதந்த்ரியத்தை ஸ்வரூபமாகக் கொண்டு, மற்றவர்களுக்காகவே இருக்கும். ப்ரணவத்தில் உள்ள அகாரத்தில் நான்காம் வேற்றுமை மூலம் கூறப்பட்ட அடிமைத் தன்மையையும், மகாரத்தால் கூறப்பட்ட ஞானம் பொருந்திய தன்மையையும் கொண்டவனாக ஜீவன் உள்ளான். ஆகவே ஜீவன் தனக்காவும் இருக்கிறான்; அடிமைத் தன்மை காரணமாக மற்றவர்களுக்காகவும் இருக்கிறான். இந்த நிலையே ஜீவன் "நம:" என்ற பதத்தின் பொருளை உணர்வதற்கு முன்பு இருக்கும் நிலையாகும். ஆனால் "நம:" என்ற பதத்தின் பொருளை அறிந்த பின்னர் ஜீவன், அசித் வஸ்து போன்று மற்றவர்களுக்காக மட்டுமே இருக்கவேண்டும் என்று அறிகிறான். இந்த நிலையே திருவாய்மொழியில் (2-9-4) – தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே - என்று கூறுவது போல், எம்பெருமானுடைய மகிழ்ச்சிக்காகவே தான் இருக்க வேண்டும் என்று விண்ணப்பிக்கும் நிலையானது ஆகும்.

92. அதாவது, போக தசையில் ஈச்வரன் அழிக்கும்போது நோக்க வேணுமென்று அழியா தொழிகை .

**அவதாரிகை –** "தனக்கேயாக" என்றத்தை உபபாதிக்கிறார், "அதாவது" என்று தொடங்கி.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில், "தனக்கேயாக" என்றுள்ள பதத்தை மேலும் விவரிக்கிறார்.

**வ்யாக்யானம் –** இத்தால் அத்தலைக்கே ரஸமாம்படி விநியோகப்படுகையாவது – தன்னோடே கலந்து பரிமாறும் தசையில் போக்தாவான ஈச்வரன் "ஆட்கொள்வானொத்து என்னுயிருண்ட மாயன்" என்கிறபடி. அடிமை கொள்வாரைப் போலே புகுந்து, தன் வ்யாமோஹத்தாலே தாழ நின்று பரிமாறி, இத்தலையில் சேஷத்வத்தை அழிக்கும்போது, "நம் சேஷத்வத்தை நாம் நோக்கவேணும்", என்று நைச்யம் பாவித்து இறாய்த்து அவன் போகத்தை அழியாதொழிகை – என்கை.

**விளக்கம்** - திருவாய்மொழி (9-6-7) – ஆட்கொள்வானொத்து என்னுயிருண்ட மாயன் – என்று கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமான் ஜீவனுடைய தொண்டினை ஏற்கும் பொருட்டு, ஜீவனுக்கு மிகவும் அருகில் வந்து, அவனுள் உள்கலந்து நிற்பான். அந்த நிலையில் எம்பெருமானுக்கு ஜீவன் மீது கரை கடந்த காதல் உண்டாகும். அப்போது நாம் அவனுக்கு அடிமை என்ற நிலையை மாற்றி, அவன் நமக்கு எதனையும் செய்பவனாக நிற்கிறான். அந்த நேரத்தில், "நாம் நம்முடைய அடிமைத்தனத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்", என்று எண்ணி, அவன் நமக்குச் செயல் புரிவதை தடுக்கக்கூடாது. இப்படியாக அவனுடைய மகிழ்ச்சியைத் தடுக்காமல் இருக்க வேண்டும்.

93. அழிக்கைக்கு ஹேது – கீழே சொல்லிற்று; மேலுஞ்சொல்லும்.

**அவதாரிகை** - "இப்படி இவன் அழிக்கைக்கு ஹேதுவென்?" என்ன, அருளிச்செய்கிறார் - அழிக்கைக்கு ஹேது - என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் ஜீவன் எம்பெருமானின் மகிழ்ச்சியை அழித்துவிட நினைப்பதற்கு என்ன காரணம் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஈச்வரன் மேல் விழுந்து விநியோகங் கொள்ளுகிற தசையிலே இவன் நைச்யம் பாவித்து, இறாய்த்து, அவன் போகத்தை அழிக்கைக்கு ஹேது –"சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்" என்கையாலே கீழே ப்ரணவத்திலே சொல்லிற்று; சதுர்த்தியிலே கிங்கர ஸ்வபாவனாகச் சொல்லுகையாலே. மேலிற் பதத்திலும் சொல்லும் – என்கை.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் தானாகவே வந்து, ஜீவனுக்குத் தன்னை பரிமாறும்போது, ஜீவன் தன்னுடைய தாழ்மையைக் கருத்தில் கொண்டு, ஸர்வேச்வரனின் அந்தச் செயலை அழிப்பதற்கான காரணம் – அடிமையாக இருப்பதே ஆத்மாவுக்கு இயல்பு - என்று ப்ரணவத்தில் கூறப்பட்டது; நாராயண என்ற பதத்தில் நான்காம் வேற்றுமையான "ஆய" என்பதன் மூலம் ஜீவனின் கைங்கர்ய இயல்பே கூறப்பட்டது - இவையே காரணமாகின்றன.

94. இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்; இந்நினைவில்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம; இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு. இது இன்றிக்கே இருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச் சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்; இது தன்னாலே எல்லா பாவங்களும் போம், எல்லா பலங்களும் உண்டாம்.

**அவதாரிகை -** இனி இப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியினுடைய வைபவத்தைப் பலபடியாக அருளிச் செய்யா நின்று கொண்டு, இப்பதத்தை நிகமித்தருளுகிறார் மேல்.

**விளக்கம் –** "நம:" என்ற பதம் மூலம் உணர்த்தப்படுகின்ற பாரதந்த்ரிய நிலையின் மேன்மையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** "இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்" என்றது – "தனக்கேயாக எனைக் கொள்ளவேணும்" என்னும் இவ்வத்யந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி பிறந்தபோதே தன்னுடைய ஹிதத்துக்கு உடலாகச் செய்ய வேண்டுவதெல்லாம் செய்து தலைக்கட்டினவன் என்கை.

"இந்நினைவு இல்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்" என்றது – இப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி இல்லாதபோது, "கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா என்கிறபடியே சகல துஷ்க்ருதங்களும் இவனாலே செய்யப்பட்டதாய் விடும் - என்கை.

"இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு" என்றது - இது உண்டாகவே எல்லா ஸுக்ருதம் பண்ணினாற் பிறக்கும் ப்ரீதி ஈச்வரனுக்கு விளைகையாலே. இந்தப் பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியிலே ஸகல ஸுக்ருதமும் உண்டு – என்கை.

"இது இன்றிக்கேயிருக்குப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச் சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்" என்றது – இந்த்ப் பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி இன்றிக்கேயிருக்க செய்தே, ஈச்வர ப்ரீணார்த்தமாக இவன் பண்ணும் யாகாதி கர்மங்களும், தன் பாப விமோசநார்த்தமாகப் பண்ணும் க்ருச்சர சாந்த்ராயணாதிகளாகிற ப்ராயச் சித்தாதிகளும் ஈச்வர ப்ரீதிக்கும் ஸ்வபாப விமோசநத்துக்கும் உடலாகாமையாலே நிஷ்ப்ரயோஜநங்கள் – என்கை.

"இது தன்னாலே எல்லாப் பாபங்களும் போம், எல்லா பலங்களும் உண்டாம்" என்றது – இந்தப் பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியாலே ஈச்வரன் இவனளவிலே அநுக்ரஹாதிசயத்தைப் பண்ணுகையாலே அவனுடைய நிக்ரஹாத்மகமான சகல பாபங்களும் போம்; "உன்னடியார்க்கென்

செய்வனென்றேயிருத்தி நீ" என்கிறபடியே இவனுக்கெத்தைச் செய்வோமென்று மேன்மேலும் உபகரிக்கையாலே, ஸம்ஸார நிவ்ருத்தி தொடக்கமாக கைங்கர்ய ப்ராப்தி பர்யந்தமாக, சகல பலங்களும் உண்டாம் – என்கை. ஆக மத்யம பதார்த்தத்தை அருளிச் செய்தாராயிற்று.

**விளக்கம்** - சூர்ணையில் உள்ள "இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்" - என்பதன் மூலம் கூறப்படுவது: திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக எனைக் கொள்ளவேணும் - என்று கூறும் நிலை ஏற்பட வேண்டும்; அதாவது, தான் முழுவதுமாக ஸர்வேச்வரனையே சார்ந்து உள்ளோம் என்ற சிந்தனை மேலோங்க வேண்டும். இதன் மூலம், தன்னுடைய நன்மைக்குத் தேவையான அனைத்தையும் அந்த ஜீவன் இயற்றி முடித்தவன் ஆகிறான்.

சூர்ணையில் உள்ள "இந்நினைவு இல்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்" – என்பதன் மூலம் கூறப்படுவது: ஸர்வேச்வரனுக்கு, தான் பரதந்த்ரன் என்னும் நினைவு நீங்கினால் நிகழ்வது கூறப்பட்டது. இதனை மஹாபாரதம் ஆதிபர்வம் – கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா – ஆத்மாவைத் திருடும் இது போன்றவனால் எந்தப் பாவம் தான் செய்யப்படவில்லை - என்றது. ஆக அனைத்துப் பாவங்களும் இவனால் செய்யப்பட்டதாகி விடுகிறது.

சூர்ணையில் உள்ள "இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு" – என்பதன் மூலம் கூறப்படுவது: தான் ஸர்வேச்வரனுக்கு பரதந்த்ரன் என்ற சிந்தனை உள்ளபோது, இந்த ஜீவன் அனைத்து நன்மைகளையும் செய்துள்ளான் என்று எம்பெருமானுக்கு அந்த ஜீவன் மீது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும். இதனால் அந்த ஜீவனுக்கு மேலும் அனைத்து நன்மைகளும் உண்டாகிவிடும்.

சூர்ணையில் உள்ள "இது இன்றிக்கேயிருக்குப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச் சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்" என்பதன் மூலம் கூறப்படுவது: ஜீவனுக்கு, தான் ஸர்வேச்வரனுக்குப் பரதந்த்ரன் என்ற நினைவு இல்லாவிட்டால் - ஸர்வேச்வரனை மகிழ்விக்கும் விதமாக ஜீவன் இயற்றும் யாகம் முதலான கர்மங்களும், தன்னுடைய பாவங்கள் நீங்கும் வகையில் இயற்றப்படும் க்ருச்சரம் மற்றும் சாந்த்ராயண கர்மங்களும் எந்தப் பலனையும் அளிக்காது. இவை ஸர்வேச்வரனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் செயலையோ அல்லது பாவங்களை நீக்கும் செயலையோ செய்யாது. எனவே இவை பலனற்றுப் போய்விடும்.

சூர்ணையில் உள்ள "இது தன்னாலே எல்லாப் பாபங்களும் போம், எல்லா பலங்களும் உண்டாம்" என்பதன் மூலம் கூறப்படுவது: ஸர்வேச்வரன் மீது ஜீவன் சார்ந்து இருப்பதால், ஸர்வேச்வரன் அந்த ஜீவன் மீது தனது அனுக்ரஹத்தைப் பொழிகிறான். இதனால் ஸர்வேச்வரனின் சீற்றத்தை

சம்பாதிக்கக்கூடிய ஜீவனின் பாவங்கள் அனைத்தும், அந்த ஜீவனை விட்டு விலகிவிடும். பெரியதிருவந்தாதி (53) - உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி நீ - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் தன்னை அடைந்த ஜீவனுக்கு என்ன நன்மையைச் செய்வோம் என்று சிந்தித்தபடியே உள்ளான். இதன் மூலம் ஸம்ஸாரபந்தத்தில் இருந்து விலகி, பகவத் கைங்கர்யம் செய்வது என்ற நிலைவரை உள்ள அனைத்துப் பலன்களும் ஜீவனுக்குக் கிட்டுகிறது. இப்படியாக "நம:" என்ற நடு பதத்தின் (ஓம் நமோ நாராயணாய என்பதில் நடுப்பதம்) பொருளை அருளிச் செய்தார்.

95. நாராயணனென்றது நாரங்களுக்கு அயநமென்றபடி.

**அவதாரிகை** - அநந்தரம் நாரயண பதார்த்தத்தை அருளிச் செய்கிறார் – நாராயணனென்றது - என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து நாராயண என்ற பதத்தின் திரண்ட பொருளை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நாராயண பதந்தான் “நாராணாம் அயநம் ய: ஸ: நாராயண:” என்றும், “நாரா: அயநம் யஸ்ய ஸ: நாராயண:” என்றும் தத்புருஷ பஹுவ்ரீஹிரூப ஸமாஸத்வய ஸித்தமாகையாலே, அதில் தத்புருஷனில் அர்த்தத்தை முந்துற அருளிச் செய்கிறார் – நாரங்களுக்கயநமென்றபடி – என்று.

**விளக்கம்** - நாராயண என்ற பதம் – "நாராணாம் அயநம் ய: ஸ: நாராயண:" - நாரங்களுக்கு யார் இருப்பிடமோ அவன் நாராயணன் – என்று தத்புருஷ ஸமாஸத்திலும், "நாரா: அயநம் யஸ்ய ஸ: நாராயண:" - நாரங்கள் யாருக்கு இருப்பிடமோ அவன் நாராயணன் - என்று பஹுவ்ரீஹி ஸமாஸத்திலும் இரண்டு பொருளைக் கூறுவதாகும். முதலில் தத்புருஷ பொருளை அருளிச்செய்கிறார்.

96. நாரங்களாவன நித்ய வஸ்துக்களினுடைய திரள்.

**அவதாரிகை** – நாரங்களாகிறவை தாம் எவை? என்ன, அருளிச் செய்கிறார் - நாரங்களாவன நித்ய வஸ்துக்களினுடைய திரள் – என்று.

**விளக்கம்** – நாரங்கள் என்று கூறப்படுபவை எவை என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - நாரபதம் "நர" என்றும், "நார" என்றும், "நாரா:" என்றுமாய் ரிங்க்ஷயே என்கிற தாதுவிலே "ர" என்று பதமாய் க்ஷயிக்கும் வஸ்துவைச் சொல்லி நகாரம் அத்தை நிஷேதித்து "நர" என்று க்ஷயமில்லாத நித்ய வஸ்துவைக் காட்டி ஸமூஹார்த்தத்திலே "அண்" ப்ரத்யயமும், ஆதிவ்ருத்தியுமாய் "நார" என்று நித்யவஸ்து ஸமூஹத்தைச் சொல்லி "நாரா:" என்று பஹுவசநமாகையாலே ஸமுஹ பாஹுள்யத்தைச் சொல்லுகையால், "நித்யவஸ்துக்களினுடைய திரள்" என்கிறார். இதில் "நித்ய" என்கையாலே நர சப்தார்த்தமும், "வஸ்துக்கள்" என்கையாலே நார சப்தார்த்தமும், அவற்றினுடைய "திரள்" என்கையாலே பஹுவசநார்த்தமும் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - நார என்ற பதம் நர, நார, நாரா: என்றும் கூறப்படும். இது ரிங் என்னும் மூலச் சொல்லில் இருந்து வெளிவந்து, "ர" என்ற பதம் அழியும் பொருளை விளக்குகிறது. ஆக "ர" என்பது அழியும் பதங்களைக் குறிக்கும்; "ந" என்பது இதனை மறுப்பதால், "நர" என்ற பதம் அழிவற்ற நித்ய வஸ்துக்களை குறிக்கும். "அண்" என்ற பதம் ஒரு கூட்டத்தைக் குறிக்கிறது. "அண்" என்னும் இந்தப் பதம் நார என்பதின் இறுதியில் சேர்ந்து, நித்யமாக உள்ள வஸ்துக்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. "நாரா:" என்ற பதம் பன்மையில் உள்ளதால் அந்தப் பதம், நித்ய வஸ்துக்களின் கூட்டம் பல உள்ளன என்று காட்டுகிறது. இதனையே சூர்ணையில் "நித்ய வஸ்துக்களினுடைய திரள்" என்றார். இங்கு நர என்ற பதத்தின் பொருளாக நித்ய என்பதும், நார என்ற பதத்தின் பொருளாக வஸ்துக்கள் என்பதும், வஸ்துக்களின் கூட்டம் என்பதால், அந்த வஸ்துக்கள் பன்மையாக உள்ள தன்மையும் கூறப்பட்டது.

97. அவையாவன - ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாந சக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும் கணாதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்கு உட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்.

**அவதாரிகை** - தாத்ருசங்களானவை தாம் எவை? என்ன, அருளிச் செய்கிறார் - அவையாவன - என்று தொடங்கி.

**விளக்கம் -** நித்யவஸ்துக்கள் என்பவை எவை என்று அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள்) ஆவன – ஸ்வரூப நிரூபக தர்மங்கள். ஆதிசப்தத்தாலே அநந்தத்வத்தைச் சொல்லுகிறது. (ஜ்ஞாநாசக்த்யாதிகள்) ஆவன – நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான ஸமஸ்த கல்யாண குணங்களுக்கு ப்ரதாநமாயிருந்துள்ள ஜ்ஞாந சக்தி பல ஐச்வர்யம் வீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஷட்குணங்கள். (வாத்ஸல்யஸௌசீல்யாதிகள்) ஆவன - அந்த ஷட்குண்யாயத்தமான வாத்ஸல்ய ஸௌசீல்ய ஸ்வாமித்வ ஸௌலப்யாத்யஸங்க்யேய கல்யாண விசேஷங்கள். (திருமேனி) – ஆவது, அஸாதாரனமான திவ்யமங்கள விக்ரஹம். ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாய், நித்யமான திவ்யவிக்ரஹத்தையும் ஐச்சிகமாகப் பரிக்ரஹிக்கும் விக்ரஹாந்தரங்களையும் சொல்லுகிறது; அல்லாதபோது ஒரே சமூஹமாக எண்ணி வருகிற ப்ரகரணத்துக்குச் சேராது. இதுதான் நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டர், ஆச்சான்பிள்ளை இவர்கள் அருளிச் செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம். (காந்தி ஸௌகுமார்யாதிகள்) ஆவன – அந்த விக்ரஹகுணங்களான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்ய யௌவநாதிகள். (திவ்யபூஷணங்கள்) ஆவன - ஆபரணசூர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே கிரீடாதி நூபுராந்தமாக அத்திருமேனிக்குச் சாத்தும் அஸங்க்யேயமான திருவாபரணங்கள். (திவ்யாயுதங்கள்) ஆவன – அழகுக்கும் ஆச்ரிதவிரோதி நிரஸநத்துக்கும் உடலாயிருந்துள்ள சங்கசக்ரகதா அஸி சார்ங்காதி அஸங்க்யேய ஆயுத விசேஷங்கள். (பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்) ஆவார் - ஸ்ரீவல்லப ஏவம் பூமிநீளாநாயக, தேவி த்வாமநு நீளயா ஸஹ மஹீ தேவ்ய ஸஹஸ்ரம் ததா என்கிறபடியே ப்ரதாந மஹிஷியான பெரியபிராட்டியார் முதலாகத் தத்ஸமாநைகளான பூமிநீளைகளும், மற்றும் அநேகராகச் சொல்லப்படுகிறவர்களும். “லக்ஷ்மீ ப்ரப்ருதி மஹிஷீவர்க்கங்களும்” என்றிறே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது. (நித்யஸூரிகள்) ஆவார் – அநந்த கருட விஷ்வக் சேநாதிகளாயிருந்துள்ள அஸங்க்யேயரான ஸூரிஜநங்கள். (சத்ரசாமராதிகள்) ஆவன – கைங்கர்ய உபகரணங்களான சத்ர சாமர தாலவ்ருந்த ப்ருங்கார பதத்க்ரஹாதிகள். (திருவாசல் காக்கும் முதலிகள்) ஆவார் – சண்ட ப்ரசண்ட பத்ர ஸுபத்ர ஜய விஜயாதிகள். (கணாதிபர்) ஆவார் - குமுத குமுதாக்ஷ புண்டரீக வாமந சங்குகர்ண ஸர்வநேத்ர ஸுமுக ஸுப்ரதிஷ்டிதாதிகள். (முக்தர்) ஆவார் - “கரைகண்டோர்” என்கிறபடியே ஸம்ஸார சாகரத்தைக் கடந்து அக்கரைப்பட்டு நித்ய ஸூரிகளோடு ஸமாநாகாரராய், நிகிலகைங்கர்ய நிரதராயிருக்கும் அஸங்கயேயரான சேதநர். (பரமாகாசம்) ஆவது - பஞ்சோபநிஷந்மயமான பரமபதம். இதுதான் பஞ்சோபநிஷந்மயமாகையாலே ஸமுகாத்மகமாயிறே இருப்பது. ஆகையால் ஸமூஹகணனைக்கு

விரோதமில்லை. “பஞ்சோபநிஷந்மயமாகையாலே பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்” என்றிறே ஆச்சான் பிள்ளை அருளிச்செய்தது.

**விளக்கம்** – (ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள்) – எம்பெருமானின் ஸ்வரூபத்தை நிரூபித்துத் தர வல்ல அவனது ஞானம், ஆனந்தம், தோஷம் அற்ற தன்மை ஆகியவை. ஆதி என்ற பதம் மூலம் இந்தக் குணங்கள் எல்லையற்று இருப்பது கூறப்பட்டது. (ஜ்ஞாநாசக்த்யாதிகள்) – அவனது ஸ்வரூபத்தை நிரூபிக்கவல்ல குணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்ட குணங்களாகும். இவற்றில் அனைத்துக் கல்யாண குணங்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்கள். (வாத்ஸல்யஸௌசீல்யாதிகள்) – இந்த ஆறு குணங்களின் மூலம் வெளிப்படுகின்ற வாத்ஸல்யம் = குற்றங்களைக் குணம் என்று கொள்ளுதல், சௌசீல்யம் = உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற வேறு பாடு இன்றி பழகுதல், ஸ்வாமித்வம் = அனைவரையும் தனது உடைமையாக்கிக் கொள்ளுதல், ஸௌலப்யம் = அனைவருக்கும் எளியவனாக இருத்தல் போன்றுள்ள எண்ணற்ற திருக்கல்யாண குணங்கள். (திருமேனி) - அவனுக்கு மட்டுமே உரித்தான திவ்யமங்கள விக்ரஹம், பலவாக எடுத்துக்கொள்ளும் வ்யூஹம் போன்ற ரூபங்கள் ஆகியவற்றையும் குறிக்கும். இப்படிக் கொள்ளவில்லை என்றால், கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ”கூட்டம்” என்பதுடன் முரணாகிவிடும். இந்த விஷயம் நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் மற்றும் ஆச்சான் பிள்ளை ஆகியவர்கள் அருளிச்செய்த க்ரந்தங்கள் மூலம் உணரலாம். (காந்தி ஸௌகுமார்யாதிகள்) - திருமேனியின் தன்மைகளான ஸௌந்தர்யம் = அழகான அவயவங்கள், ஸௌகுமார்யம் = மென்மையாக இருத்தல், லாவண்யம் = மொத்தமான அழகு, யௌவனம் = இளமை போன்றவை. (திவ்யபூஷணங்கள்) - சரணாகதி கத்யத்தின் எட்டாவது சூர்ணையான ஆபரணச் சூர்ணையில் பாஷ்யக்காரர் அருளிச்செய்தபடி உள்ள க்ரீடம் தொடங்கி நூபுரம் என்னும் கைவளையல்கள் வரை, திருமேனியில் சாற்றப்படும் திவ்ய மங்கள் திருவாபரணங்கள். (திவ்யாயுதங்கள்) – சங்கு, சக்கரம், கதை, வாள், சார்ங்கம் முதலிய அழகு சேர்க்கும்படியாகவும் அடியார்களின் விரோதிகளை அழிக்கும்படியாகவும் உள்ள ஆயுதங்கள். இவை எண்ணற்று உள்ளன. (பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்) - சரணாகதி கத்யத்தில் கூறப்பட்ட ஸ்ரீவல்லப ஏவம்பூத பூமி நீளாநாயக தேவி த்வாமநு நீளயா ஸஹ மஹீ தேவ்ய ஸ ஸஹஸ்ரம் ததா - என்னும்படி ப்ரதானமாக உள்ள பெரியபிராட்டியார் முதலாக, அவளைப் போன்றே உள்ளவர்களான பூமி மற்றும் நீளா தேவிகள், மற்றும் பல தேவிகள். இதனை ஆச்சான் பிள்ளை பரந்த ரஹஸ்யத்தில் – லக்ஷ்மீ ப்ரப்ருதி மஹிஷீவர்க்கங்களும் – லக்ஷ்மி தொடக்கமாக உள்ள தேவிகள் பலர் -

என்று அருளிச்செய்தார். (நித்யஸூரிகள்) – ஆதிசேஷன், கருடன், விஷ்வக்சேனர் முதலானோர் உள்ளிட்ட எண்ணற்ற நித்யஸூரிகள். (சத்ரசாமராதிகள்) – நித்யஸூரிகள் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதற்காக உதவுகின்ற குடை, சாமரம், விசிறி, வட்டில்கள், படிக்கம் போன்றவை. (திருவாசல் காக்கும் முதலிகள்) – சண்டர், ப்ரசண்டர், பத்ரர், சுபத்ரர், ஜயன், விஜயன் போன்றவர்கள். (கணாதிபர்) - குமுதர், குமுதாக்ஷர், புண்டரீகர், வாமனர், சங்குகர்ணர், ஸர்வநேத்ரர், ஸுமுகர், ஸுப்ரதிஷ்டர் போன்ற நித்யஸூரிகளின் தலைவர்கள். (முக்தர்) - திருவாய்மொழி (8-3-10) - கரை கண்டோர் – என்று கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸாரம் என்ற கடலைக் கடந்து, அக்கரையான பரமபதத்தை அடைந்து, நித்யஸூரிகளை ஒத்த மேன்மைகளைப் பெற்று, எம்பெருமானுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்தபடி இருக்கின்ற எண்ணற்ற சேதனர்கள். (பரமாகாசம்) – ஐந்து உபநிஷத்துக்கள் எனப்படும் ஐந்து வஸ்துக்களால் ஆன பரமபதம் (ஐந்து உபநிஷத்துகள் = பரமேஷ்டி, புமாந், விச்வன், நிவ்ருத்தன், ஸர்வன்). இவை கூட்டமாக உள்ளதால், கடந்த சூர்ணையுடன் முரண்பாடு இல்லை. இதனை ஆச்சான் பிள்ளை - பஞ்சோபநிஷந்மயமாகையாலே பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும் – ஐந்து உபனிஷத்துக்களின் சேர்க்கையாக உள்ளதால் பரமபதமும் கூட்டம் என்றே ஆகிறது - என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - ஆக, "ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும்" என்று தொடங்கி இவ்வளவும் ஸ்வரூப நிரூபக தர்மங்களையும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான கல்யாண குணங்களையும், அக்குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், விக்ரஹ குணமான ஸௌந்தர்யாதிகளையும், அந்த ஸௌந்தர்யாதிகளோபாதி பூத்தாற்போலே சாத்தின திவ்யாபரணங்களையும், அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான திவ்யாயுதங்களையும், இவையித்தனையும் காட்டிலெரித்த நிலவாகாதபடி அருகேயிருந்து அநுபவிக்கிற நாச்சிமாரையும், அச்சேர்த்தியிலே அடிமை செய்கிற நித்ய ஸூரிகளையும், அவர்களுக்குக் கைங்கர்யோபகரணங்களான சத்ரசாமராதிகளையும், "இச்சேர்த்திக்கு என்வருகிறதோ" என்று வயிறெரிந்து நோக்கும் திருவாசற்காக்கும் முதலிகளையும். அப்படி மங்களாசாஸநபரராய், திருப்படைவீட்டுக்கடையக் காவலாயிருக்கும் கணாதிபரையும், நிவ்ருத்த ஸம்ஸாரராய் அவர்களோடு ஒரு கோர்வையாய் அடிமை செய்கிற முக்தரையும், அவ்வடிமைக்கு வர்த்தகமான பரமபதத்தையும் அருளிச் செய்தாராயிற்று.

**விளக்கம்** – ஆக, "ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும்" என்று தொடங்கி இதுவரை எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை நிரூபிக்கவல்ல தன்மைகள், அவனது ஸ்வரூபத்திற்கு நிரூபணமாக உள்ள அவனது திருக்கல்யாண குணங்கள், அந்தக் குணங்களை வெளிபடுத்துகின்ற அவனது திவ்யமங்கள விக்ரஹம், அந்தத் திருமேனியின் குணங்களான ஸௌந்தர்யம் போன்றவை, ஸௌந்தர்யத்திற்கு ஏற்ற திவ்ய ஆபரணங்கள், ஆபரணங்களுக்கு ஒத்த திவ்ய ஆயுதங்கள், காட்டில் வீணாகப் போகும் நிலா போன்று அல்லாமல் இவனது இந்த அழகு அனைத்தையும் வீணாகாமல் அனுபவிக்கின்ற நாச்சிமார்கள், இந்தச் சேர்த்திக்குக் கைங்கர்யம் செய்கின்ற நித்யஸூரிகள், நித்யஸூரிகள் அவனது கைங்கர்யத்திற்குப் பயன்படுத்தும் குடை முதலானவை, இந்தச் சேர்த்திக்கு என்ன ஆபத்து வருமோ என்று எண்ணியபடி பாதுகாக்கின்ற த்வார பாலகர்கள், அங்குள்ள அனைவரையும் பாதுகாக்கின்ற கணத்தலைவர்கள், ஸம்ஸாரத்தைக் கடந்து நித்யஸூரிகள் போன்றே கைங்கர்யம் செய்கின்ற முக்தர்கள், கைங்கர்யத்தை வளர வைக்கும் பரமபதம் ஆகியவற்றை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - லீலாவிபூதியிலுள்ளவற்றை அருளிச்செய்கிறார் மேல். (ப்ரக்ருதி) ஆவது – குணத்ரயாத் மகதயா ஸமூஹாத்மிகையாயிருக்கும் மூலப்ரக்ருதி, "குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும்" என்றிறே இதற்கும் ஆச்சான் பிள்ளை அருளிச்செய்தது. (பத்தாத்மாக்கள்) ஆவார் – உரைமெழுகிற்பொன்போலே, இப்ரக்ருதிக் குள்ளே உருமாய்த்து கிடக்கிற ஆத்மாக்கள். (காலம்) ஆவது – அஹோராத்ராதி விபாகயுக்ததயா ஸமூஹாத்மமாயிருக்கும் அசித் விசேஷம். "அஹோராத்ராதி விபாகங்கள் அநேகமாகையாலே, காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே இதுக்கும் ஆச்சான் பிள்ளை அருளிச்செய்தது.

**விளக்கம்** - இனி லீலா விபூதியில் உள்ளவற்றை அருளிச்செய்கிறார். (ப்ரக்ருதி) - மூன்று குணங்களுடன் கூடியுள்ளதால் ஒரு கூட்டம் என்றே கூறும்படி உள்ள மூலப்ரக்ருதி. இதனை ஆச்சான் பிள்ளை - குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும் – மூன்று குணங்களுடன் கூடியுள்ளதால் மூலப்ரக்ருதி என்பது ஒரு கூட்டமே - என்று அருளிச்செய்தார். (பத்தாத்மாக்கள்) – மெழுகில் பதிந்து உள்ள பொன் போன்று இந்தப் ப்ரக்ருதிக்குள் தங்கள் ஸ்வரூபம் இழந்து கிடக்கும் ஸம்ஸார ஆத்மாக்கள். (காலம்) – இரவு-பகல் என்று கூட்டமாக உள்ள அசித் வஸ்து. இதனை ஆச்சான் பிள்ளை - அஹோராத்ராதி விபாகங்கள் அநேகமாகையாலே, காலமும்

ஸமூஹாத்மகமாயிருக்கும் – பகல்-இரவு என்று பல வகைகளாக உள்ளதால் காலம் என்பது ஒரு கூட்டமே - என்று அருளிச் செய்தார்.

**வ்யாக்யானம்** - ஆக இவ்வளவும் ஸ்வரூபேண நித்யங்களான வஸ்துக்களைச் சொல்லிற்று. மேலே ப்ரவாஹரூபேண நித்யங்களைச் சொல்லுகிறது. ஸ்வரூபேண நித்யத்வமாவது – ஸத்தான பதார்த்தத்தினுடைய உத்பத்தி விநாசாத்யந்தாபாவம். ப்ரவாஹரூபேண நித்யத்வமாவது – உத்பத்தி விநாசயோகியாகா நிற்கச் செய்தேயும் பூர்வகாலத்திலு ண்டான நாமரூபலிங்காதிகளுடைய அநந்யதாபாவம்.

**விளக்கம்** – இதுவரை தங்களது ஸ்வரூபம் மூலம் நித்யமாக உள்ள பொருள்களை அருளிச் செய்தார். இனி தொடர்ச்சியாக இருந்து வரும் தன்மை காரணமாக "நித்யமாக உள்ளவை" என்று கூறப்படும் வஸ்துக்களை அருளிச் செய்கிறார். ஸ்வரூபத்தால் ஒரு பொருள் நித்யமாக உள்ளது என்றால், அதற்குத் தோற்றம் மற்றும் அழிவு ஆகியவை எப்போதுமே கிடையாது என்பதாகும். தொடர்ந்து இருப்பதால் ஒரு பொருள் நித்யம் என்றால், அந்தப் பொருளுக்குத் தோற்றம் மற்றும் அழிவு ஆகியவை இருந்தாலும் அந்தப் பொருளின் பெயர், உருவம் மற்றும் தன்மைகள் ஆகியவை தொடகத்தில் இருந்தே மாறாமல் உள்ளன என்பதாகும்.

**வ்யாக்யானம்** - இதில் (மஹதாதி விகாரங்கள்) ஆவன – மஹத்தத்வந் தொடங்கி ப்ருதிவியளவாக உண்டான இருபத்துமூன்று தத்வமும். (அண்டங்கள்) ஆவன - இம்மஹதாதிகளாலே ஆரப்தங்களாய் அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச என்கிறபடியே அஸங்க்யேயமாயிருக்கிற அண்ட விசேஷங்கள். (அண்டத்துக்கு உட்பட்ட தேவாதி பதார்த்தங்கள்) ஆவன - அண்டார்ந்தர்வர்த்திகளான தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்கள். ஆக, நாரபதார்த்தம் அருளிச் செய்தாராயிற்று.

**விளக்கம்** - இவற்றுள் சில. (மஹதாதி விகாரங்கள்) - மஹத் தொடங்கி ப்ருத்வி என்னும் பூமி வரை உள்ள இருபத்துமூன்று தத்துவங்கள். (அண்டங்கள்) - மஹத்திலிருந்து உற்பத்தியான ஆயிரக்கணக்கான அண்டங்கள். இதனை விஷ்ணு புராணம் – அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச – ஆயிரம் அண்டங்களின் பத்து மடங்காக உள்ள ஆயிரம் அண்டங்கள் – என்றது. (அண்டத்துக்கு) – இந்த அண்டங்களில் வசிப்பவர்களான தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் முதலானவை. இப்படியாக நார என்ற பதத்தின் பொருளை அருளிச்செய்தார்.

98. அயநம் என்றது இவற்றுக்கு ஆச்ரயமென்றபடி.

**அவதாரிகை** - மேலே அயநபதார்த்தத்தை அருளிச்செய்கிறார் – அயநமென்றது இவற்றுக்கு ஆச்ரயமென்றபடி – என்று.

**விளக்கம்** - அடுத்து அயந என்ற பதத்தின் பொருளை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அயநசப்தம் ஆச்ரயவாசியாகையாலே இவற்றுக்கு அயந மென்றது இவற்றுக்கு ஆச்ரயமென்றபடி – என்கை.

**விளக்கம்** - அயந என்ற பதம் ஆச்ரய = ஆதாரம் என்னும் பொருளை அளிக்கிறது. இவன் மேலே கூறப்பட்ட பலவற்றுக்கும் அயநம் என்றால், அவற்றின் ஆதாரமாக உள்ளான் என்றாகிறது.

99. அங்ஙனன்றிக்கே, இவை தன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம்.

**அவதாரிகை** – பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தத்தை அருளிச்செய்கிறார் - அங்ஙனன்றிக்கே, இவை தன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம் – என்று.

**விளக்கம்** - இனி நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் என்னும் பஹுவ்ரீஹி ஸமாஸத்தின் பொருளை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது – இவற்றுக்கு ஆச்ரயமென்று தத்புருஷனாகச் சொல்லுகையன்றிக்கே, "இவை தன்னை ஆச்ரயமாகவுடையன்", என்று பஹுவ்ரீஹியாகச் சொல்லவுமாம் – என்கை. "இவற்றுக்கு ஆச்ரயம்" என்கிறவிடத்தில் குணங்களையும் சொல்லிற்றேயாகிலும், "இவை தன்னை ஆச்ரயமாகவுடையன்" என்கிற இடத்தில், குணங்களையொழியச் சொல்ல வேணும்: அக்குணங்களுக்கு வ்யாப்யத்வம் சொல்லு மளவில், ஆத்மாச்ரயமும் அநவஸ்தையுமாகிற தோஷங்கள் வருமாகையாலே – "தன் குணங்களிலே ஈச்வரன் வ்யாபிக்கும்போது குண விசிஷ்டனாயே வ்யாபிக்க வேணும், நிர்க்குணமாய் வஸ்து இராமையாலே; அப்போது, வ்யாப்ய குணங்களே வ்யாபக குணங்களாயறுகையாலே, ஆத்மாச்ரய தோஷமுண்டாம்; அதுக்கு மேலே

தன் குணங்களிலே குணி வ்யாபிக்கவென்று புக்கால், ததாச்ரயமான குணங்களையும் குணி வ்யாபிக்கவேணும். அந்த வ்யாபகனுடைய குணங்களையும் குணி வ்யாபிக்க வேணும். ஆகையாலே, அநவஸ்தாதுஸ்தமாம்", என்ற இது தன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச் செய்தாரிறே.

**விளக்கம்** – தத்புருஷ ஸமாஸத்தில் எம்பொருமான் நாரங்களுக்கு இருப்பிடமாக உள்ளான் என்று கூறுவதற்குப் பதிலாக, அவனால் நாரங்கள் உள்ளன என்றும் கூறலாம். நாரங்களுக்கு இருப்பிடம் என்ற பொருள் வரும்படி – இவற்றுக்கு ஆச்ரயம் - என்று கூறும்போது, "நார" என்ற பதத்திற்கு எம்பெருமானின் குணங்களையும் பொருளாகக் கூறலாம். ஆனால் நாரங்கள் அவனால் வ்யாபிக்கப்படுகின்றன என்னும் பொருள் வரும்படி - இவை தன்னை ஆச்ரயமாக உடையவன் – என்பதில் உள்ள "நார" என்ற பதம் மூலம், அவனது குணங்களைக் கூற இயலாது, காரணம் என்ன? இவ்விதம் கூறினால், ஆத்மாச்ரய தோஷமும், அநவஸ்தை என்ற தோஷமும் ஏற்படும். இவற்றை ஆச்சான்பிள்ளை – தன் குணங்களில் ஈச்வரன் பரவி நிற்கும்போது அந்தக் குணங்களுடன் கூடியவனாகவே அவன் பரவி நிற்கிறான். அவனது குணங்கள் இல்லாத வஸ்துக்கள் இல்லாமையால் இது பொருந்தும். இப்படிக் கொள்ளும்போது வ்யாபிக்கப்படும் குணங்களே வ்யாபிக்கும் குணங்களாகவும், வ்யாபிக்கும் குணங்களே வ்யாபிக்கப் பட்டுள்ள குணங்களாகவும் ஆகிவிடும். இதுவே ஆத்மாச்ரய தோஷம் என்பதாகும். இந்த தோஷம் நீங்குவதற்காக, ஈச்வரன் ஒரு சில குணங்களுடன் மட்டுமே நின்று, மற்ற குணங்களில் வ்யாபிக்கிறான் என்று கூறலாம். அப்படிக் கொண்டாலும், அவன் வ்யாபித்துள்ள சில குணங்களில், சில குணங்களுடன் கூடிய அவன் வ்யாபிக்கிறான் என்று இப்படியே நீண்டு கொண்டே செல்லும். இது அநவஸ்தை என்னும் தோஷம் ஆகும் - என்று அருளிச்செய்தார்.

100. இவையிரண்டாலும் பலித்தது பரத்வஸௌலப்யங்கள்.

**அவதாரிகை** – இவ்வுபய ஸமாஸத்தாலும் பலிதாம்சத்தை அருளிச் செய்கிறார் - இவையிரண்டாலும் - என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த இரு சூர்ணைகளில் விளக்கப்பட்ட இரண்டு ஸமாஸங்களால் வெளிவரும் அர்த்தத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நாரங்களுக்கு அயநம், நாரங்களை அயநமாகவுடையவன் என்கிற இவை இரண்டாலும் பலித்த அர்த்தம் – தன்னையொழிந்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும், தான்

ஆதாரமாயிருக்கையாகிற பரத்வமும்; இப்படிப் பெரியனான தான், ஸகல சேதநாசேதநங்களிலும் தன்னையமைத்துக் கொண்டு புக்கிருக்கையாகிற ஸௌலப்யமும் – என்கை.

**விளக்கம்** - நாரங்களுக்கு அயனம், நாரங்களை அயனமாக உடையவன் – நாரங்களுக்கு இருப்பிடம், நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் – என்ற இரண்டாலும் வெளிப்படுவது என்னவென்றால் – தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்து வஸ்துக்களுக்கும், தானே ஆதாரமாக உள்ள பரத்வம் என்ற மேன்மை; இவ்விதமாக மிகவும் உயர்ந்தவனாக உள்ள தான், அனைத்து சேதன அசேதனங்களிலும் புகும்படியான எளிமை - ஆகிய இரண்டும் வெளிப்படுகின்றன.

101. அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம்.

**அவதாரிகை** - இன்னமும் ஒரு ப்ரகாரத்தாலே இந்த ஸமாஸ த்வய பலிதங்களை அருளிச் செய்கிறார் - அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம் – என்று.

**விளக்கம்** – மேலும் ஒரு விதம் மூலம் இந்த இரண்டு ஸமாஸங்களால் உணர்த்தப்படும் அர்த்தத்தை உணர்த்துகின்றார்.

**வ்யாக்யானம்** - அதாவது பஹுவ்ரீஹியும் தத்புருஷனுமாகிற உபயஸமாஸத்தாலும் பலித்தது – அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளிற் சொல்லுகிறபடியே - அகில சேதநா சேதநங்களிலும் அந்தராத்மதயா அவஸ்திதனாய்க் கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற அந்தர்யாமித்வமும், இண்கதௌ என்கிற தாதுவிலேயாதல், அயகதௌ என்கிற தாதுவிலேயாதல் ஸித்தமான அயந பதத்தில் கரணே வ்யுத்பத்தியாலும் கர்மணி வ்யுத்பத்தியாலும் ப்ரகாசிதமான உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம் – என்கை. பஹுவ்ரீஹி யோஜனை சொல்லுகிறவிடத்திலே யோக்யாதாநு குணமாக நார சப்தத்தை குணங்களையொழிந்த வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொண்டாப்போலே தத்புருஷ யோஜநையிலும் அயந சப்தத்தை உபாயோபேய வாசியாகக் கொள்ளுமளவில் யோக்யதாநுகுணமாக நார சப்தத்தை அசேதநங்களை ஒழிந்த சேதந வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொள்ளக் கடவது. நாரஸ்த்விதி ஸர்வ பும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே கதிராலபம்பநம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத: என்றும், நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதேபுதை: தேஷாமயந பூதத்வாந் நாராயண இஹோச்யதே என்றும் இத்யாதிகளிலே இவ்வர்த்தம் சொல்லப்படா நின்றதிறே.

**விளக்கம்** - பஹுவ்ரீஹி ஸமாஸத்தாலும், தத் புருஷ ஸமாஸத்தாலும் எம்பெருமானின் அந்தர்யாமித்வமும் உபேயத்வமும் வெளிப்படுகிறது. ப்ருஹத் ஆரண்யகம் மற்றும் ஸுபால உபநிஷத் போன்றவற்றில் உள்ள அந்தர்யாமி ப்ராஹ்மணத்தின் மூலம் அனைத்து சேதன-அசேதனங்களிலும் எம்பெருமான் அந்தர்யாமியாக உள்ளான் என்பதும், அனைத்தின்

அந்தராத்மாவாக இருந்து கொண்டு, தனது கட்டளைப்படி அவற்றை இயக்குகிறான் என்பதும் புலப்படுகிறது. இப்படியாக அந்தர்யாமித்வம் வெளிப்படுகிறது. அயந என்ற பதம், இண்கதௌ அல்லது அயகதௌ என்ற தாதுக்களில் இருந்து வெளிவந்தது என்று கொண்டால், “எந்த ஒன்றால் ஒரு வஸ்து அடையப்படுகிறதோ, அந்த உபாய வஸ்து அயநம் ஆகும்”, என்று உபாயத்வமும்; “எந்த வஸ்து அடையப்படுகிறதோ அது அயநம்”, என்று உபேயத்வமும் வெளிப்படுகிறது. பஹுவ்ரீஹி ஸமாஸத்தில், நார என்ற பதம் எம்பெருமானின் குணங்களைத் தவிர மற்ற பொருள்களைக் குறிக்கிறது என்றோம். இது போன்று, தத்புருஷ ஸமாஸத்தில் அயந என்ற பதம், உபாய-உபேய பொருள்களை உணர்த்தும்போது, நார என்ற பதம் அசேதனங்களைக் குறிக்கவில்லை, சேதனங்களை மட்டுமே குறிக்கிறது என்று கொள்ளப்படுகிறது. இதனை கீழே உள்ள வரிகளின் மூலம் அறியலாம்:

• பாத்மோத்ர புராணம் – நாரஸ்த்விதி ஸர்வ பும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே கதிராலபம்பநம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத: - ”நார” என்ற பதத்தால் அனைத்து ஜீவன்களும் கூறப்படுகின்றன. அவற்றின் உபாயமாகவும், அடையப்படும் இடமாகவும் இருப்பதால் நாராயணன் எனப்படுகிறான்.

• நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதேபுதை: தேஷாமயந பூதத்வாந் நாராயண இஹோச்யதே - அனைத்தும் அறிந்தவர்கள், ”நார” என்ற பதம் ஜீவன்களின் கூட்டம் என்ற பொருளையே உணர்த்துவதாகக் கூறுகின்றனர். அவர்களுக்கு ஆதாரமாக உள்ளதால் நாராயாணன் எனப்படுகிறான்.

102. “எம்பிரானெந்தை” என்கையாலே, ஈச்வரனே எல்லாவுறவுமுறையுமென்று சொல்லும்.

**அவதாரிகை -** கர்மணிவ்யுத்பத்தி ஸித்தமான ப்ராப்யத்வத்துக்கு ஸங்கோசமில் லாமையாலே ஸர்வ ப்ரகார விசிஷ்டமாயிருக்கையாலும், பந்து லாபமும் ப்ராப்யமாயி ருக்கையாலும், ஈச்வரனுடைய ஸர்வவித பந்துத்வமும் இப்பதத்திலே சொல்லும்படியை அருளிச் செய்கிறார் – எம்பிரான் - என்று தொடங்கி.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் கூறப்பட்ட உபேயத்வம் மூலமாக எம்பெருமான் அனைத்து வழிகள் மூலமாகவும், எந்தவிதமான தோஷங்களும் இன்றி அடையப்படு பவனாக உள்ளான் என்று உணரலாம். மேலும் எம்பெருமானுடன் நெருக்கமானதால், பந்துலாபம் என்பதும்

அடையப்படவேண்டிய குறிக்கோளாக (ப்ராப்யம்) உள்ளது. ஆக, ஸர்வேச்வரன் அனைத்து விதமான உறவினனாக உள்ளான் என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது நாராயண சப்தார்த்தத்தை அநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார், "எம்பிரானெந்தை யென்னுடைச் சுற்றமெனக் கரசென்னுடை வாணாள்" என்கையாலே, ஈச்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவித பந்துவுமென்று இப்பதத்திலே சொல்லும் – என்கை.

**விளக்கம்** – திருமங்கையாழ்வார் "நாராயண" என்ற பதத்தின் பொருளை அருளிச் செய்யும்போது பெரிய திருமொழியில் (1-1-6) - எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் எனக்கு அரசு என்னுடை வாணாள் - என்று அருளிச் செய்தார். ஆக நாராயண என்ற பதம், ஈச்வரனே அனைத்து ஆத்மாக்களுக்கும் அனைத்து விதமான உறவினன் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

103. நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும்.

**அவதாரிகை** – "இப்படி பந்து பூதனாய்க் கொண்டு, இத்தலைக்கு அவன் செய்யுமது எது?", என்ன, அருளிச்செய்கிறார் - நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும் – என்று.

**விளக்கம்** - இவ்விதம் நம்முடைய நெருக்கமாக உறவினனாக இருந்து கொண்டு ஈச்வரன் செய்யும் செயல் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நாம் தன்னோடு ஒட்டற்றுப் பிறர்க்கு நல்லராயிருந்த காலத்திலும் அவன் நமக்கு நல்லனாயிருக்கும் என்கை.

**விளக்கம்** – நாம் அவனுடன் எந்தவிதமான தொடர்பும் கொள்ளாமல், மற்றவர்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவன் நமக்குத் தொடர்ந்து நன்மை செய்தபடியே உள்ளான்.

104. இரா மடம் ஊட்டுவாரைப்போலே உள்ளே பதி கிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போரும்.

**அவதாரிகை** – இப்படி நாம் அந்யபரரான அன்றும் நமக்கேயாயிருந்து அவன் செய்து போருமது தான் எது? என்ன, அருளிச் செய்கிறார் – இராமடம் – என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக நாம் மற்றவர்களுக்காகச் செயல்கள் செய்தபடி இருக்கும்போது நம்மைக் காத்தபடி இருக்கும் அவன், நமக்காக என்ன செய்கிறான் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, நேர்கொடுநேர் தங்கள் பக்கல் வந்து அபேக்ஷிதங்களை வாங்கி ஜீவியாதே துர்மாநத்தாலே பட்டினியே திரியுமவர்களையும் விடமாட்டாமையாலே அசலறியாதபடி ராத்ரி மடத்திலே புஜிப்பிப்பாரைப்போலே தன் பக்கல் தலைசாயோம் என்று இச்சேதநர் ஸ்வாதந்த்ர்யமடித்துத் திரியா நிற்க, இவர்கள் கண்காணாதபடி அந்தராத்மாவாய்க்கொண்டு உள்ளே மறைந்திருந்து இவர்கள் ஸத்தையே தொடங்கி ரக்ஷித்துக்கொண்டு போரும் – என்கை.

**விளக்கம்** – ஒரு சில பிள்ளைகள் பெற்றவர்களிடம் கோபம் கொண்டு வீட்டில் உண்ணாமல் பட்டினியாகத் திரிவார்கள். அவர்களுக்குச் சத்திரத்தில் உள்ளவர்கள் மூலமாக, மறைமுகமாகப் பெற்றவர்கள் உணவு அளிப்பார்கள். இவர்களைப் போன்றே சில சேதநர்கள் தாங்கள் சுதந்திரமானவர்கள் என்று எண்ணியபடி திரிவார்கள். அவர்களுக்கு, அவர்களே அறியாதபடி, அவர்களின் அந்தர்யாமியாக நின்று, அவர்களைப் பாதுகாத்தபடி இருப்பான்.

105. ஆய என்கிற இத்தால் சென்றாற்குடையாம் என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்யவேணுமென்று அபேக்ஷிக்கிறது.

**அவதாரிகை –** ஆக இந்நாராயண பதத்தாலே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈச்வரன் படியை அருளிச்செய்தாராயிற்று. இனி, இதில் விபக்த்யம்சத்தாலே கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறபடியை அருளிச்செய்கிறார் - ஆய என்கிற இத்தால் - என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாக கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்கின்றவனான ஸர்வேச்வரனின் தன்மைகளை, "நாராயண" என்ற பதம் மூலம் அருளிச்செய்தார். இனி, "ஆய" என்னும் நான்காம் வேற்றுமை மூலம் கைங்கர்யத்தை வேண்டி நிற்கின்ற விதத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஆய என்கிற இந்தச் சதுர்த்தியாலே "சென்றாற் குடையாம்" என்கிற பாட்டிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வானைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களும் செய்யவேணுமென்று அபேக்ஷிக்கிறது – என்கை.

**விளக்கம்** – முதல் திருவந்தாதி (53) – சென்றால் குடையாம் – என்று கூறுவது போன்று, ஆதிசேஷனைப் போன்று, அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்தபடி இருக்கும் நிலையை, “ஆய” என்னும் நான்காம் வேற்றுமை வேண்டுகிறது.

106. நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்துக் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோ? என்னில்;

**அவதாரிகை** – நமஸ்ஸாலே தனக்கென்ன ஒன்றை விரும்புகைக்கு ப்ராப்தியில்லாத அத்யந்த பாரதந்த்ர்யம் சொல்லியிருக்க இக்கைங்கர்யத்தைத்தான் விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவியாது என்று இருக்குமவர்கள் பண்ணும் ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் - நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்துக் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோவென்னில் – என்று.

**விளக்கம் –** ”நம:” என்ற பதத்தின் மூலம் தனக்காக ஒன்றை விரும்புதல் என்பது கூடாது என்று கூறப்பட்டது. அப்படி உள்ளபோது, கைங்கர்யத்தை மட்டும் தனக்காக வேண்டலாமா என்ற கேள்வி எழக்கூடும். இதற்கான விடையை அடுத்த சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

107. ”படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே” என்கிறபடியே கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறி அன்று ஸ்வரூப ப்ரயுக்தம்.

**அவதாரிகை** - அதுக்கு உத்தரம் அருளிச் செய்கிறார் - படியாய்க்கிடந்து - என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் எழுப்பப்பட்ட கேள்விக்கான விடையின் முற்பகுதியை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது “படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே”, என்று அத்யந்த பாரதந்த்ர்யத்தோடே கைங்கர்ய ப்ரார்த்தனையையும் சொல்லுகிறபடியே, கைங்கர்ய ப்ராத்தனை – ஸ்வபோக்த்ருத்வரூப அஹங்கார ப்ரயுக்தமாய்க் கொண்டு வந்தேறியானது அன்று. சேஷிக்கு அதிசயத்தை விளைத்தல்லது தான் தரியாதபடியான தன் ஸ்வரூபத்தைப் பற்றி வந்தது - என்கை.

**விளக்கம்** - பெருமாள் திருமொழி (4-9) – படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே – என்பதன் மூலம் அத்யந்த பாரதந்த்ரியம் என்னும் ஆழமான சார்ந்திருத்தல் வெளிப்படுகிறது. ஆக, இதனைப் போன்ற கைங்கர்ய ப்ரார்த்தனை என்பது, அஹங்காரம் மூலம் ஏற்படுகின்ற அனுபவித்தல் அன்று. இப்படிப்பட்ட அஹங்காரம் மூலம் வருகின்ற ப்ரார்த்தனை என்பது வெளியில் இருந்து வருவதாகும். ஆனால், கைங்கர்ய ப்ரார்த்தனை என்பது ஆத்மாவின் ஸ்வரூபத்தில் இருந்து வருவதாகும். இந்த நிலை சேஷியான எம்பெருமானுக்கு மகிழ்வை ஏற்படுத்தாமல் தான் தாங்க இயலாது என்னும் நிலையாகும்.

108. ஆகையால் "வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது.

**அவதாரிகை** - உக்தத்தை ஹேதுவாகக் கொண்டு, சதுர்த்தியின் கைங்கர்ய ப்ரார்த்தநா ப்ரகாசகத்வத்தை அருளிச்செய்கிறார் – ஆகையால் - என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படிப்பட்ட கைங்கர்ய ப்ரார்த்தனை என்பது எவ்விதம் இருக்கவேண்டும் என்பதை நான்காம் வேற்றுமை உணர்த்துவதாக அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறி அன்றிக்கே, ஸ்வரூப ப்ரயுக்தமாகையாலே, வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் என்று, "அடிமையில் ஒன்றும் நழுவாதபடி ஸகல கைங்கர்யங்களும் செய்யவேண்டும் நாம்", என்கிற ப்ரார்த்தனையை, இச்சதுர்த்தி ப்ரகாசிப்பிக்கிறது என்கை.

**விளக்கம்** - கைங்கர்ய ப்ரார்த்தனை என்பது ஸ்வரூபத்தின் மூலமாக உண்டானது. ஆகையால் திருவாய்மொழி (3-3-1) – - வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் – என்று கூறுவது போல், அடிமைத் தொழிலில் எதனையும் விட்டு வைக்காமல் அனைத்தையும் செய்யவேண்டும் என்பதை நான்காம் வேற்றுமை உணர்த்துகிறது.

109. கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல் என்கிறபடியே, காண்பதற்கு முன்பு உறக்கமில்லை, கண்டால் "ஸதா பச்யந்தி" ஆகையாலே உறக்கமில்லை.

**அவதாரிகை** - இனி இந்தக் கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கைக்கு உறுப்பான ப்ராப்ய ருசியுடையார்படியை அருளிச் செய்கிறார் – கண்ணாரக்கண்டு - என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படிப்பட்ட இடைவிடாத கைங்கர்யம் நிலையாக இருக்கவேண்டும் என்பதை வேண்டி நிற்பதற்குக் காரணமான, "ஸர்வேச்வரன் மீது ஆசை", என்பதைக் கொண்டவர்களின் தன்மையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "இமையோர்கள் குழாம், தொழுவதுஞ் சூழ்வதுஞ் செய் தொல்லைமாலைக் கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல்", என்று நித்யஸூரிகளுடைய திரளானது நிரந்தரம் அநுபவம் பண்ணுகிற ஸர்வேச்வரனைக் கண்கள் நிறையும்படி கண்டோழியக் கழியாதபடியான காதலிலே நிலைநின்றவர்களுக்கும் கண்கள் உறங்குத லுண்டோ?, என்னுமாபோலே, விஷயத்தைக் காண்பதற்கு முன்பு ஜ்ஞாந ஸங்கோசரூபமான உறக்கமில்லை; கண்ட காலத்தில் ஸதா பச்யந்தி என்கிறபடியே ஸதா அனுபவம் பண்ணுகையாலே உறக்கமில்லை – என்கை.

**விளக்கம்** – திருவிருத்தம் (97) - இமையோர்கள் குழாம், தொழுவதுஞ் சூழ்வதுஞ் செய் தொல்லைமாலைக் கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல் – எம்பெருமானை நித்யஸூரிகள் அனுபவித்து நிற்பது போல, தங்கள் கண்களும் நிறையும்படிக் காண நேர்ந்தது என்று வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட நிலை உண்டானாலொழிய, நீங்காத காதலில் நின்றவர்களின் கண்கள் உறங்குமோ? – என்றது காண்க. ஆக, ஸர்வேச்வரனைக் காண்பதற்கு முன்னால், அவனைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தால் அறிவு மங்கிய காலங்களில் உறக்கம் என்பது இல்லை. ஸதா பச்யந்தி – எப்போதும் காண்கின்றனர் – என்று கூறுவதற்கு ஏற்ப, பரமபதம் சென்றபின் எப்போதும் அவனைக் காண்பதால் உறக்கம் இல்லை.

110. "பழுதே பல பகலும் போயின" என்று இழந்த நாளுக்கு கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை.

**அவதாரிகை** - இன்னும் ஒரு ஹேதுவினாலே இவனுக்கு உறக்கமில்லாமையை அருளிச் செய்கிறார் - பழுதே - என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலும் ஒரு காரணத்தால் உறக்கம் வராமல் உள்ளதற்கான காரணத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "செங்கண்டலோதவண்ணரடி அரவணை மேற்கண்டு தொழுதேன், பல பகலும் பழுதே போயினவென்று அஞ்சி அழுதேன்", என்று விஷயத்தைக் கண்டு அநுபவித்தவாறே, இப்படி அநுபவிக்கைக்கு உடலான அநேக காலமெல்லாம் வ்யர்த்தமே போய்விட்டதே என்று இழந்த நாளை நினைத்து க்லேசித்துக் கூப்பிடுகிறவனுக்கு மேலுள்ள நாளில் உறக்கம் வர வழியில்லை – என்கை.

**விளக்கம் -** முதல் திருவந்தாதி (16) - செங்கண்டலோதவண்ணரடி அரவணை மேற்கண்டு தொழுதேன், பல பகலும் பழுதே போயினவென்று அஞ்சி அழுதேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனைக் கண்டவுடன், "இப்படி இவனை நான் இத்தனை நாட்கள் அனுபவித்திருக்கவேண்டும். அந்தக் காலம் எல்லாம் அனுபவிக்காமல் கழிந்துவிட்டனவே, என்று இதுவரை கழித்த நாட்களை எண்ணி ஒருவன் வருந்தலாம். அவனுக்கு இனி உள்ள நாட்களில் உறக்கம் இல்லை.

111. "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்னா நின்றார்களிறே.

**அவதாரிகை –** இன்னும் இவ்விஷயத்தில் அறிவு பிறந்தார்க்கு மறக்கப் போகாது என்னுமத்தை இசைவிக்கிறார் - அன்று நான் – என்று தொடங்கி.

**விளக்கம் -** இவனைப் பற்றிய ஞானம் பிறந்தவர்கள் அவனை மறக்க மாட்டார்கள் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது அவன் என்னை பெறுகைக்காகத் திருப்பதிகளிலே நிற்பது, இருப்பது, கிடப்பதாக நிற்க. அக்காலத்தில் நான் ஜ்ஞாந லாப ரூபமான ஜந்மத்தையுடையனாகப் பெற்றிலேன். அந்த ஜன்மமுண்டான பின்பு, அவனை ஒரு காலும் மறந்திலேன் என்று சொல்லா நின்றார்களிறே என்கை. ஆக ப்ராப்ய வைலக்ஷண்ய ஜ்ஞாநம் பிறந்தார்படி இதுவாகையாலே, இந்தக் கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும் என்று கருத்து.

**விளக்கம்** – என்னை அடைவதற்காக ஸர்வேச்வரன் திவ்யதேசங்களில் நின்றும், அமர்ந்தும், கிடந்தும் செய்தான். அப்போதெல்லாம் அவனைப் பற்றிய ஞானம் விளையும் பிறவியை நான் பெறவில்லை. ஆனால் இப்போது அந்தப் பிறவி உண்டானது. இனி அவனை மறக்கமாட்டேன் என்றே கூறினர். இப்படியாக அடையப்பட வேண்டிய இலக்கான கைங்கர்யத்தை ப் பற்றிய ஞானம் பெற்றவர்கள் உள்ளதால், இவர்கள் இந்த கைங்கர்யத்தை எப்போதும் வேண்டி நிற்பார்கள் என்று கருத்து.

112. இவ்வடிமைதான் “ஒழிவில் காலமெல்லாமுடனாய்மன்னி” என்கிறபடியே ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும்.

**அவதாரிகை** – இனி, இந்தக் கைங்கர்யத்துக்கு தேசகாலாதிநியமமில்லாமையை அருளிச் செய்கிறார் – இவ்வடிமைதான் - என்று தொடங்கி.

**விளக்கம்** - கைங்கர்யம் என்பது இடம், காலம், நிலை ஆகியவற்றுக்கு உட்பட்டது அல்ல என்று அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூப புருஷார்த்தமான இந்த கைங்கர்யந்தான், “ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி” என்று - ஒழிவிலாத காலமெல்லாம் ஸர்வ தேசத்திலும் உடனாய் ஸர்வாவஸ்தையிலும் பிரியாது நின்று – என்கிறபடியே, ஸர்வதேசத்திலும், ஸர்வகாலத்திலும், ஸர்வாவஸ்தையிலும் நடந்து செல்லும் என்கை.

**விளக்கம்** – ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான கைங்கர்யம் என்பது நம்மாழ்வார் அருளிச் செய்தபடி (3-3-1) - ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி – என்று கூறுவதற்கு ஏற்ப எந்தக் காலத்திலும், எந்த இட்த்திலும், எந்த நிலையிலும் அவனை விட்டுப் பிரியாமல் நின்று – என்னும்படி அமையும். ஆக, கைங்கர்யம் என்பது அனைத்து இடங்கள், காலங்கள், நிலைகள் ஆகியவற்றில் தொடர்ந்தபடி இருக்கும்.

113. எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே திருமந்த்ரம்.

**அவதாரிகை** - பார்யைக்கு மங்களஸூத்ரதாரணம் பர்த்தாவுக்கு அநந்யார்ஹையென்று காட்டுமாபோலே திருமந்த்ரதாரணம் சேதநர்க்கு பகவதநந்யார்ஹத்வ ப்ரகாசகம் என்னுமிடந்தோற்ற இத்தையொரு மங்களஸூத்ரமாக நிரூபித்தருளிச்செய்கிறார் - எட்டிழையாய் - என்று தொடங்கி.

**விளக்கம்** - பெண்ணின் கழுத்தில் உள்ள திருமாங்கல்யம் என்பது – இவள் ஒருவனின் மனைவி – என்று மற்றவர்களுக்கு உணர்த்துகிறது. இது போன்று திருமந்த்ரமானது, சேதனர்கள் ஸர்வேச்வரனுக்கு உரியவர்கள் என்பதை உணர்த்துகிறது. இந்த விஷயத்தை திருமந்திரத்தை திருமாங்கல்யமாக்க் கூறி அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பதினாறிழையாய் இரண்டு சரடாயிருக்கும் லௌகிகமான மங்களஸூத்ரம் போலன்றிக்கே எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே, எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கிறது இத்திருமந்த்ரம் – என்கை.

**விளக்கம்** - திருமாங்கல்யம் என்பது பதினாறு இழைகள் கொண்டு இரண்டு சரடுகளாகக் காணப்படும். இதனைப் போன்று அல்லாமல் திருமந்த்ரம் என்பது எட்டு எழுத்துக்களுடன், மூன்று பதங்களுடன் காணப்படுகின்றது. ஆக திருமந்திரம் என்பது எட்டு இழைகளுடன் மூன்று சரடுகளாக உள்ள திருமாங்கல்யம் போன்றதாகும்.

114. இத்தால் ஈச்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய் நின்று ரக்ஷிக்கும் என்கிறது.

**அவதாரிகை** - இப்படி நிரூபித்துச் சொன்ன இத்தால் எவ்வர்த்தம் சொல்லுகிறது? என்ன, அருளிச்செய்கிறார் – இத்தால் - என்று தொடங்கி.

**விளக்கம்** – திருமந்திரத்தினைத் திருமாங்கல்யமாக ஏன் கூற வேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இத்தை மங்களஸூத்ரமாகச் சொன்ன இத்தால், ஈச்வரன் இத்தோடு அந்வயமுடைய ஆத்மாக்களுக்குப் பதியாய் நின்று கொண்டு ரக்ஷிக்கும் – என்று சொல்லுகிறது – என்கை.

**விளக்கம்** – இப்படி திருமந்திரத்தைத் திருமாங்கல்யமாகக் கூறுவதன் மூலம் ஸர்வேச்வரன் ஆத்மாக்களின் கணவனாக நின்று அவர்களை எப்போதும் காத்து நிற்கிறான் என்று உணர்த்துவதாக உள்ளது.

115. ஆக திருமந்த்ரத்தால் "எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கு உரியனன்றிக்கே ஒழிய வேணும்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்" என்றதாயிற்று.

**அவதாரிகை** – இனி, இம்மந்த்ரத்தால் ப்ரதிபாதித்த அர்த்தத்தை ஸங்க்ரஹித்துச் சொல்லி இத்தை நிகமித்தருளுகிறார் – ஆக திருமந்த்ரத்தால் – என்று தொடங்கி.

**விளக்கம்** - திருமந்திரத்தின் பொருளைச் சுருக்கமாக அருளிச்செய்து நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "ஆக" என்றது கீழ்பரக்க அருளிச்செய்த எல்லாவற்றையும் தொகுத்து அருளிச்செய்கிறார் என்னுமிடந்தோற்ற. (எம்பெருமானுக்கே உரியேனான நான்) – இதில் "எம்பெருமானுக்கு" என்று சதுர்த்யந்தமான ப்ரதமாக்ஷரத்தில் அர்த்தத்தையும், அவதாரணத்தாலே மத்யமாக்ஷரத்தில் அர்த்தத்தையும் சொல்லுகையாலே ப்ரதம பதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. (எனக்கு உரியனன்றிக்கே ஒழிய வேணும்) – இதில் "எனக்குரியன்" என்று ஷஷ்ட்யந்தமான மகாரார்த்தத்தையும், "அன்றிக்கேயொழிய" என்கையாலே நகாரார்த்தத்தையும், "வேணும்" என்கையாலே இவ்வர்த்தம் சேதனனுக்கு ப்ரார்த்தநீயம் என்னுமத்தையும் ப்ரதிபாதிக்கையாலே மத்யமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. (ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்) – இதில் "ஸர்வசேஷியான நாராயணனுக்கே" என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும் கைங்கர்ய ப்ரார்த்தநா ப்ரகாசிகையான சதுர்த்தியையும், "எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்" என்று கைங்கர்ய த்ரிதீய பதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. (என்றதாயிற்று) – என்றது, என்று சொல்லிற்றாயிற்று – என்கை. விஸ்தரேண அருளிச்செய்ததை மீளவும் இப்படி ஸங்க்ரஹித்தருளிச் செய்தது

திருமந்த்ரார்த்தத்தை எல்லாருமறிந்து அநுஸந்திக்கைக்காக. ஆகையாலே எல்லார்க்கும் இவ்வர்த்தம் எப்போதும் அநுஸந்தேயம்.

**விளக்கம்** - "ஆக" என்று கூறுவதன் மூலம், இதுவரை அருளிச்செய்தவற்றைத் தொகுத்துக் கூறுவதாக உணர்த்துகிறார். எம்பெருமானுக்கே உரியேன் – இதன் மூலம் நான்காம் வேற்றுமையுடன் கூடிய முதல் அக்ஷரமாகிய அகாரத்தின் பொருள், நடு எழுத்தான உகாரத்தின் பொருள், "உரியேனான நான்" என்பதன் மூலம் மூன்றாம் எழுத்தான மகாரத்தின் பொருள் ஆகியவற்றைக் கூறுவதால், ப்ரணவத்தின் பொருளை அருளிச்செய்தார். எனக்கு உரியனன்றிக்கே ஒழிய வேணும் – "எனக்கு உரியன்" என்னும் ஆறாம் வேற்றுமையுடன் கூடிய மகாரத்தின் பொருள், "அன்றிக்கே" என்பதன் மூலம் நகாரத்தின் பொருள், "வேணும்" என்பதன் மூலம் சேதனனுக்கு இது வேண்டத் தக்கது என்பதை அருளிச்செய்கிறார். இப்படியாக நடுப்பதமான "நமோ" என்றதை அருளிச்செய்கிறார். ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும் – "ஸர்வசேஷியான நாராயணனுக்கே" என்பதன் மூலம் நமது கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்வதையும், கைங்கர்ய ப்ரார்த்தனையை வெளிப்படுத்துவதான நான்காம் வேற்றுமையையும், "எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்" என்பதன் மூலம் கைங்கர்யத்தை வேண்டும் முறையையும் அருளிச்செய்தார். இதன் மூலம் நாராயணாய என்ற மூன்றாவது பதத்தின் பொருளை அருளிச்செய்தார். என்றதாயிற்று – என்று கூறியாயிற்று – என்பதாகும். இவ்விதம் விரிவாக அருளிச்செய்ததை இப்படிச் சுருக்கமாக அருளிச்செய்ததன் நோக்கம் - திருமந்திரத்தின் பொருளை அனைவரும் அறிந்து கொண்டு எப்போதும் கூற வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

## முமுக்ஷுப்படியில் திருமந்த்ரப்ரகரணம் ஸம்பூர்ணம்

திருவரங்கச்செல்வனார் திருவடிகளே தஞ்சம்

தஞ்சம் அடைந்த நம் இராமானுசன் திருவடிகளே தஞ்சம்

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்